
கல்கி

KALKI
30.4.89
ரூ. 2.



புறநகர்ப் பகுதியில் கொள்ளைகள்!



உங்கள் குழந்தைக்கு ஊட்டுங்கள் முட்டையின் புரதச் சத்தூட்டத்தை!
ஃபாரெக்ஸ்®-எக்
6 மாதம் முதல்
புதிய ஃபாரெக்ஸ் எக் — இது, உங்கள் குழந்தையின் முழு நிறைவான வளர்ச்சிக்குத் தேவையான புரதச் சத்தைக் கொண்டுள்ளது. இது, நன்றாக முன்பே பக்குவப் படுத்தப்பட்டது. ஆகவே இது, குழந்தையின் மென்மை யான வயிற்றின் ஜீரண சக்திக்கு ஏற்றதாகும்.
ஃபாரெக்ஸ்—சுவையுடன் வளரும் வழி
Farex-egg
WITH CEREAL, EGGS AND MILK
இதோ ஃபாரெக்ஸ் வளர்ச்சி வழி: 1. பால் சேர்த்த ஃபாரெக்ஸ் சீரியல் 2. ஃபாரெக்ஸ்-வெஜ் 3. ஃபாரெக்ஸ்-எக்

GX/56/203 TML

எம்.ஏ.லத்தீஃப்; எம்.எல்.ஏ.

குரானும் தெரியும், வேதமும் புரியும்



சில வாரங்கள் முன் தி. மு. க. வைச் சேர்ந்த முஸ்லீம் இளைஞன் ஒருவன் கொலை செய்யப்பட்டதையொட்டி சட்ட சபையில் கொண்டு வரப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் பேரில், முஸ்லீம் லீக் உறுப்பினர் அல்ஹாஜ் எம். ஏ. லத்தீஃப் பேசிய போது, மகாபாரதத்திலிருந்தும், ஆதிசங்கரரின் உபதேசங்களிலிருந்தும் ஏகப்பட்ட மேற்கோள்களைக் கூறினார். சட்டமன்றம் ஆர்வத்துடன் மட்டுமின்றி ஆச்சர்யத்துடனும் அவரது உரையைக் கேட்டது.

அதற்குச் சில நாட்களுக்குப் பிறகு பெரிய மேடு, ஊத்துக்காட்டன் தெருவில் வசிக்கும் லத்தீஃப்பைச் சந்தித்தோம். ரம்ஜான் நோன்பிலிருந்தாலும் உற்சாகமாகப் பேசினார், இந்தி, உருது, அராபிக் போன்ற பல மொழிகளை அறிந்த லத்தீஃப். லத்தீப்புக்குச் சொந்த ஊர் வாணியம்பாடி. பரம்பரையாக ஜவுளி வியாபாரம். அப்பா மொய்தீன் பாட்சா, நல்ல தமிழறிஞர். பள்ளிப் படிப்பு முடிந்ததும் வாணியம்பாடி இஸ்லாமியா கல்லூரியில் பி.ஏ. வரையிலும் படித்தார் லத்தீஃப். பின்னர் பட்ட மேற்படிப்புக்காகச் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தார்.

"எங்கள் மத வழிபாடுகள் பற்றிய விஷயங்கள் எல்லாம் அராபிய மொழியில் இருப்பதால், எனக்கு அட்சராப்பியாசமே அந்த மொழியில்தான். என் வீட்டில் என் அம்மா உருது பேசுவார்கள். அப்பா தமிழ். அந்த நாட்களில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பெர்ஷியன் மொழியும் உண்டு. மேலும் பள்ளியில், உருதுவும், இந்தியும் கற்றுக் கொண்டேன்."

"சமஸ்கிருதம் கற்றுக் கொண்டது...?"

"அது ஒரு கதை! அப்போது வாணியம் பாடியில் பக்கத்து வீட்டில் என் நண்பன் வெங்கடேஸ்வரன் குடியிருந்தான். அவன் அப்பா ராமனாத சர்மா சமஸ்கிருத விற்பன்னர். அவரிடம் சமஸ்கிருதம் கற்க ஆரம்பித்தேன். அன்பு பாசமாகவும் மாறியது. அவரை "அப்பா!" என்று கூட அழைப்பேன்! சமஸ்கிருதத்தில் 'சிரோண் மணி' பாஸ் செய்த பிறகு பல சமஸ்கிருத நூல்களையும், வேதங்களையும் நானே படித்துத் தெரிந்து கொண்டேன். இலக்கண சுத்தமாக இந்தி பேசுவேன். ஒருமுறை உத்தர பிரதேசத்தில் என். டி. திவாரியுடன் ஒரு கூட்டத்தில் பேசும் போது, சுத்த இந்தியில் பேசினேன். முதல்வர் திவாரி, "எனக்கே புரியவில்லை; பாமர ஹிந்தியில் பேசுங்கள்" என்று வேண்டுகோள் விடுத்தார்!" என்று கூறும் லத்தீபுக்கு, துவைதம், அத்வைதம் என்று ஆரம்பித்தால் மணிக்கணக்கில் அவற்றைப் பற்றி பேசும் ஞானம் உண்டு!

பச்சையப்பன் கல்லூரியில் லத்தீஃப் படித்துக் கொண்டிருந்த போது அன்று தலைமை நீதிபதியாக இருந்த ராமச்சந்திர அய்யருக்கும் பரமாச்சாரியாருக்கும் கல்லூரியில் வரவேற்புக் கொடுக்க வேண்டும் என்று பச்சையப்பன் டிரஸ்ட் போர்டு தலைவர் ராஜா. ஸர். முத்தையா செட்டியார் தீர்மானித்தார். யார், யார் மேடையில் பேசுவது என்று முடிவெடுக்கும் போது மாணவர் தலைவர் பற்றிய பேச்சு எழுந்தது. 'முஸ்லீம் ஆயிற்றே... எப்படி?' என்று ஒரு தயக்கச் சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் முதல்வர் சி. டி. ராஜேஸ்வரன், "கவலைப்பட வேண்டாம். லத்தீஃப் பேசுவான். எல்லாம் நல்லபடியாக நடக்கும்" என்று முத்தையா செட்டியாரிடம் உறுதி அளித்தார். வரவேற்பின் போது மாணவர் லத்தீஃப் ஆற்றிய உரையைக் கேட்டு பரமாச்சாரியாருக்கு வியப்பு! கிளம்பும் போது, முத்தையா செட்டியாரிடம் "அந்தப் பையனை அழைத்துக் கொண்டு காஞ்சீபுரம் வாருங்கள்" என்று சொன்னார்.

"அவ்வாறே நானும் காஞ்சீபுரம் சென்றேன். அதை இப்போது நினைத்தாலும் மனம் நெகிழ்ந்து போகிறது. என்னைப் பற்றியும் என் குடும்பத்தைப் பற்றியும் நான் தெரிந்து கொண்ட விஷயங்களைப் பற்றியும் விவரமாக விசாரித்தார் காஞ்சி முனிவர்."

"உங்கள் தலைமையிலான முஸ்லிம் லீக்கின் வளர்ச்சி எப்படி இருக்கிறது...?"

"பிரமாதமாக இருக்கிறது. தமிழ் நாட்டில் மட்டுமல்ல; சமீபத்தில் கேரளாவுக்குச் சென்று பேசினேன். ஆயிரக்கணக்கான மக்கள் பேச்சைக் கேட்டார்கள். கூடிய சீக்கிரம் அகில இந்திய அளவிலும் கட்சி ஸ்தாபிக்கப்படும்" என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் லத்தீஃப்.

சந்திப்பு: தில்லப்பா

படம்: சுபா

அபூர்வ சகோதரர்கள்

கமலுக்கு ரெட்டை வேடமல்ல; மூன்று வேடம்!

அப்பன் வேடத்தில் உடலைத் துண்டு துண்டாக்கினும் கர்ப்பிணி மனைவியைத் தப்ப விட்ட பிறகே சாவேன் என்று, ரத்தக் களரியையும் தாங்கிக் கொண்டு, போராடுகிறாரே அங்கே 'நாயகன்' தெரிகிறார் என்றால் —

குப்பத்து ராஜாவாய் வளரும் கமல் ஒரே ஜாலியோ ஜிம்கானாதான். கௌதமியிடம், அவள் நினைப்பது போல் தான் கோடீசுவரனல்ல என்று கூற முற்பட்டு, முடியாமல் போக, வாயடைத்துப் போய் நெட்டைக் கமல் விழிப்பதில் ஒரு காதல் சுகம் இருக்கிறது என்றால், இன்ஸ்பெக்டர் ஜனகராஜ் அவர் மேல் கொலைப் பழி சுமத்திக் கைது செய்வதும்; அப்புறம் ஆதாரமில்லை என்று வெளியில் விடுவதுமாய்த் தொடர்ந்து வறுத்தெடுப்பதைப் பொறுக்காமல், கமல் பிடிவாதமாய், 'வேணாம் சார். அப்பால நீதான் கொலைகாரன்னு மறுபடியும் இனிச்சாருவே. நான் உள்ளாறவே இருக்கறேன்,' என்று தகராறு பண்ணுவது படு சுறுசுறு. இருந்தாலும்...

அந்தக் குட்டைக் கமல்! அடேங்கப்பா! ட்ரிக் ஷாட் இல்லையாம்; காலை மடித்துக் கட்டிக் கொண்டு நடித்ததாகத்தான் சொல்கிறார்கள். அந்த 'நதி மூலம்' எப்படியானாலும் நிமிர்ந்து பார்க்கிற அந்த பாவத்தில், அசல் பிக்மியின் அசைந்தாடும் நடையில், அசட்டு இளிப்பில், தாழ்வு மனப்பான்மை தேங்கிய பேச்சில் என்ன ட்ரிக்ஸ் பண்ண முடியும்? நெட்டை, புதுக்கவிதையின் மலர்ச்சி என்றால் குட்டை, பண்டை இலக்கியத்தின் நறுமணம்!



தான்தான் ரூபினியைக் கல்யாணம், செய்து கொள்ளப் போவதாக நினைத்திருக்கும் போது, தன் காதலனைப் பதிவுத் திருமணம் செய்து கொள்ள சாட்சிக் கையெழுத்துப் போடும்படி ரூபினி கேட்டுக் கொள்ளும் போது கமலின் முகத்தில் ஏற்படும் அந்த ஏமாற்றம், அதிர்ச்சி, துக்கத்தின் கலவை மனசைப் பிசைகிறது.

தாய் வித்யாவிடம், 'உனக்கே நான் தேவலமாப் போயிட்டேன் இல்லே, அதான் நான் உயிரோட இருக்க விரும்பலை,' என்று கமல் துக்கம் சொட்டுகிற இடம் நெகிழ்ச்சி.

முதல் கார் மோதலின் பிறகு கௌதமி, நெட்டைக் கமலிடம் "சார் சார், சார், ஃபாரின் கார்லாம் வச்சிருக்கீங்க. இரு நூறு ரூபா வச்சுக்குங்க சார். எங்கப்பா எனக்குப் பெட்ரோலுக்கு அம்பது ரூபாயும் ஆக்ஸிடெண்டுக்கு இருநூறு ரூபாயும்தான் சார் கொடுப்பார்" என்று கெஞ்சுகிறாரே, அந்த நயமான நகைச்சுவையில் எத்தனை ருசி!

அந்த நாலு வில்லன்கள் — டெல்லி கணேஷ், நாஸர், ஜெய் சங்கர் — சரி. இந்த நாகேஷ் எங்கிருந்து வந்து குதித்தார்? குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்தவர் இத்தனை குரூரமான பாலிஷ் காட்டியிருப்பது-பக்கா நடிகர்தான்!

பிரசவ வேதனை + விடுபட்ட மலர்ச்சி— இந்த பாவங்களில் வடு பதித்திருக்கும் அளவு வித்யா மற்ற இடங்களில் இல்லை. சந்தர்ப்பமும் குறைவுதான்.

இளையராஜா கூடவே குந்தினு ம்யூஸிக் போட்டாப்ல எல்லாப் பாட்டுமே டப்பாங்குத்து போட வைக்குதில்லே?

ஸ்டண்ட்டுக்குச் சரியாக் காமெராவும் அள்ளினு போகுது.

ச்சே, எல்லாம் இந்தக் கிரேஸி மோகன் இன்ஃப்ளுயன்ஸ். ஒரே ஸமாலக்டி கிரிகிரிதான்!

கமலை விட்டால் அந்த வசனங்களுக்கு முழு ஜீவன் கொடுத்திருப்பது ஆச்சி மனோரமாதான். ஸ்ரீவித்யா இரண்டு பெற்றுப் போட்டு மலர்ந்திருக்கும் வேளையில், "இன்னா பார்க்கறே? இன்னும் பையிலே எதுனா வச்சிருக்கிறியா?" என்று வேடிக்கை வினயமாய்க் கேட்கும் பாவம் யாருக்கு வரும்?

தமிழ் சினிமா ஃபார்முலாவுக்குள் அடங்கும் தம்மாத்தூண்டு கதைதான். ஆனால் அதைப் படம் பண்ணியிருக்கும் விதம் — ங்கப்பா!

— பி. எஸ். எஸ்.

என் உயிர்த் தோழன்

அத்தியாயம் — 3

மணிக்கட்டில் மல்லிகைச் சரம்!

"என்னைப் பெத்தவ யாருக்கோ முந்தானையை விரிச்சிட்டா; அந்தப் பேமானிப் பய மவனும் கணக்கா கழண்டுக்கிட்டான். இந்தக் கேடு கெட்ட பொம்பளை என்னைப் பெத்துக் கக்கூசுலே கடாசிட்டுப் பூட்டா... இதெல்லாம் கூட எனக்கு நீ சொல்லித்தானே யக்கா தெரியும்....? நான் இதையெல்லாம் நெனைச்சி எம்மா வருத்தப்பட்டிருப்பேன்? தெரியுமா உனக்கு? நான் அனாதைதான்—அந்தக் கேவலம் உனக்கு இல்லே!" தருமன் விசும்ப, பொங்கி வரும் பாசத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பொன்னம்மாக்கா பாய்ந்து தருமனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

"அடத் தூ! நான் இப்ப உன்னை என்னாடா சொல்லிப்புட்டேன்...? 'ஏண்டா நைனா, எல்லார் கைலேயும் மருவாதியா நடந்துக்கினு குப்பத்துலேயே நல்ல புள்ளைன்னு பேர் வெச்சுகினுகிறே; கட்சி கட்சின்னு இப்படி கசமால விஷயத்துல எல்லாம் தலையை வுட்டுக்கினு ஏண்டா கண்ணு வீணாப் போனவனுங்க கையிலே எல்லாம் மாட்டிக்கினு அடி வாங்கிச் சாவுறே'ன்னுதானேடா உன்னைக் கேக்கறேன்? என்னிக்காச்சும் இந்தப் பொன்னம்மா உன்னை ஒரு வார்த்தை... ஒரு வார்த்தை தப்பாப் பேசியிருப்பானா...? நான் திட்டறதுக்கே அளுவாச்சி வருதே உனுக்கு...? நேத்து ராவுக்கெல்லாம் உன்னைப் புடிச்சிக்கினு போயி அந்தக் காக்கிச் சட்டைங்க இன்னா சித்ரவதைப் பண்ணாங்களோன்னு நெனைச்சி நெனைச்சி, தனியாக் குந்திக்கினு அளுதுகினு இருந்தேனேடா." என்றவாறே உடைந்து போய் அழத் தொடங்கினாள்.

"அட, சர்தான் உடு யக்கா அளுவாதே...! அய்யே... சொல்றேனில்லே! அயாதேன்னா மறுபடியும் அளுவறியே," என்றவாறே தருமன் தானும் அழ...

இருவருமாகச் சேர்ந்து, 'இந்த உண்மையான பாசம் மட்டுமே இதுபோன்ற குப்பத்து வாசிகளின் பிரதான சொத்து' என்பதை அழகாக வலியுறுத்திக் கொண்டிருந்தனர்.

"ராவுக்குத் துன்றதுக்கு எதனாச்சும் போட்டானுங்களாடா, நைனா?"

"அத்த ஏன் கேக்கறே? வண்டியிலே ஏத்துனவுடனே போட ஆரம்பிச்சவனுங்க தான்...! ராவுலேதான் நிறுத்துனானுங்க...! ஐயே... இன்னா அப்பிடிப் பார்க்கறே? அட, மெய்யாலுந்தான் யக்கா! இங்க பாரு!" என்றவாறே தனது முண்டா பனியனைத் தருமன் அவிழ்த்துக் காட்ட, அவன் ஏராளமாய்ச் 'சாப்பிட்ட'தற்கான அடையாளங்கள் அவன் மார்பிலும் முதுகிலும் வரி வரியாகக் கோடிட்டிருந்தன.

அதைப் பார்த்த மாத்திரத்தில் பதறித் துடித்த பொன்னம்மாக்காளை ஆசுவாசப் படுத்திய தருமன், "அட, இது இன்னாக்கா...? என் தலைவனுக்கோசரம் உசிரையே குடுப்பேன், யக்கா...! த்தா... கொளுத்திக்கவே ரெடியாகீறேன்... இதுக்குப் போயி... அஆம்... என் தலைவன் கெலிச்சி வரட்டும்; இவனுங்களெல்லாம் வெரலை வுட்டு ஆட்ற மாட்டேன்! நீ உடு யக்கா," என்றான்.

நேரம் காலை 11.30.

மவுண்ட் ரோடு வாகனங்களின் இரைச்சல்களுக்கு மத்தியில் ஓர் அரசு வங்கியின் முன்னால், வங்கி ஊழியர்கள் பலர் தங்கள் கோரிக்கைகளை வாசகங்களாக எழுதி ஒட்டி — அந்த அட்டைகளை உயர்த்திப் பிடித்துக் கொண்டு வானளாவக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தனர். இவர்களுக்கெல்லாம் தலைமை தாங்குவது போல மூன்று பேர் கூட்டத்தின் நடுவே நின்று கொண்டு எல்லோரையும் கை அமர்த்தி அமைதிப்படுத்தினார்கள். மூவரில் ஒருவர், தனித்த குரலில் சொற்பொழிவைத் தொடங்கினார்.

எதிர்த்தாற்போல்பிளாட்பாரத்தில்குயில் குப்பத்துப் பொன்னம்மா — தருமனின் வளர்ப்பு அக்கா—தனது சோற்றுக் கடையை விரித்துக் கொண்டிருந்தாள். கூலியாட்கள், பழ வண்டிக்காரர்கள், ரிக்ஷா ஓட்டிகள், கைவண்டி இழுப்பவர்கள் இவர்களுக்கெல்லாம் பொன்னம்மாள் பிளாட்பாரத்துச் சோற்றுக் கடைதான் 'ஃபைவ் ஸ்டார் ரெஸ்டாரண்ட்!'

சவாரி கிடைக்காத களைப்பில் உட்கார்ந்திருந்த நமது உயிர்த் தோழன் தர்மாவிடம் பொன்னம்மா, "டே! தருமா! ஐயே, இன்னான்னு போயி கண்டுகினு

பரணிராஜா

வாயேன்!'' என, தருமன் கைலியை மடித்துக் கட்டியவாறே கிளம்பினான்.

கும்பலை நெருங்கிய தருமனை,

'உயர்த்து, உயர்த்து! அடிப்படை ஊதியத்தை உயர்த்து!'

'உயர்த்து! உயர்த்து! கிராக்கிப் படியை உயர்த்து!'

'வங்கி ஊழியரின் வயிற்றில் அடிக்காதே!'

போன்ற கோஷங்கள் வரவேற்றன.

கும்பலை வேடிக்கை பார்த்து நின்று கொண்டிருந்த ஒரு பெரியவரிடம் விஷயத்தைச் சேகரித்துக் கொண்டு தருமன் பொன்னம்மாளின் சோற்றுக் கடைக்குத் திரும்பி வர, பொன்னம்மா, ''இன்னாடா தருமா, இன்னா விஷயம்?'' என்று கேட்டாள்.

''அட, நான் கூட ஏதோ தகராறாக்கும்னு பாத்தா, ஏதோ பாங்கு இஸ்ட்ரைக்காம்... சம்பளம் பத்தலையாம்! அதனால போட்டுக் கொடுக்கச் சொல்லிக் கூவறாங்க! பாவம், பாக்கறதுக்கே கஸ்டமாகீது யக்கா... அதான் நம்ம தலைவன் வரணுங்கறது... இந்த மாதிரி யாரையாச்சும் கூவ வுடுவாரா? கேட்கறதுக்கு முன்னாலேயே தரும தொரை அள்ளி விடுவாரில்லே!''

''ஆமா, இப்ப அவங்களுக்கு எம்மா ரூவா குடுக்கறாங்களாம்?''

''ஐயோ, அது இன்னா... பிசாத்துக் காசு மூவாயிரம் ரூவா குடுக்கறானுவோ...'' என்று சொல்லி முடித்துவிட்டுப் பார்க்க... பொன்னம்மாளும் அவளைச் சுற்றியிருந்த கூட்டத்தினரும் 'ஆங்' என்ற ஒலியுடன் வட்டமாக வாய் பிளந்து நின்றனர்.

அதிர்ச்சியிலிருந்து மீண்ட பொன்னம்மா, ''இன்னாது! மூவாயிரம் ரூவாயா...! அது இவனுங்களுக்குப் பத்தலையா? இன்னாடா சொல்றே?'' என்று தருமனைக் கேட்க,


''ஆமா, உனக்கு இன்னாத்தத் தெரியும்? அவுங்கள்ளாம் இன்னா நம்மளை மாதிரி சென்னாகுன்னியிலயா கொயம்பு வெச்சித் துன்றாங்க? புள்ளைங்களையெல்லாம் இஸ்கோலுக்கு அனுப்ப வாணா...? சொம்மாவா சேத்துக்குவான்? அதுவும் இங்கிலீசு கான்வெண்டு! அஆம்! இன்னா பீசு தெரியுமா? சரிதான், வுடு... அவுங்க பாட்டை அவுங்க பாக்கறாங்க... நம்ம பாட்டை நாம கவனிப்போம்... பசிக்குது ஒரு நாலு கை அள்ளிப் போடு! துன்னுட்டு வேறே பக்கம் சவாரி கெடைக்குதான்னு பார்க்கப் போவணும்.''

தருமன் சாப்பிடும்போதே பொன்னம்மா மெல்லப் பேச்சைத் துவக்கினாள்: ''டேய் தருமா! இன்னிக்கி சாயங்காலமா சீக்கிரம் வூட்டாண்ட வந்துடு. நான் காத்துக்கினே இருப்பேன். அப்பாலே நீ பாட்டுக்கு, 'மறந்துட்டேன் கிறந்துட்டேன்'னு சாக்குச் சொல்லாதே! இன்னா பிரியுதா?''

''எல்லாம் பிரியுது! ஆனா இன்னாத்துக்குச் சாயங்காலம் சீக்கிரமா வரச் சொல்றே? எங்கனாச்சும் போறமா, இன்னா?''

''அட சோமாறி! ஒரு வாரமா நானும் நாயா கத்திக்கினுகிறேனேடா! இன்னிக்குச் சூளை மேட்டுலே சுப்பராயன் பொண்ணைப் பார்க்கப் போவணும்னு.அப்பல்லாம் மாடு மாதிரி தலையாட்டுனே. இப்ப வந்து, 'எங்கனாச்சும்போறமா'ன்னுஇலுக்கறே... இன்னாடா வந்துருவல்லே நேரத்தோட?''

''வரேன்! வரேன்! ஆனா த பாரு யக்கா... இதெல்லாம் நமக்கு ஓ. கே.! ஆனா நீ பாட்டுக்கு என் தலைவன் தேதி குடுக்கறதுக்குள்ளாறவே கண்ணாலம் பண்ணணும்னு குதிச்சின்னா அப்புறம் நான்



பொல்லாதவனாயிடுவேன்! பொண்ணு பாக்கக் கூட வர மாட்டேன். இன்னான்றே...? தலைவர் தேதி குடுக்கணும்: அவரு தலைமைலே கண்ணாலம் நடக்கணும்! இன்னா, சரியா?''

''சர்தான்டா. மொதல்ல பொண்ணு பாக்கறதுக்கு வந்து சேரு. அப்பாலே நீ சொல்ற மாதிரியே கண்ணாலத்தை உன் தலைவரு தலைமைலேயே நடத்தலாம். இன்னா, சரியா?''

பொன்னம்மாளின் பதிலில் திருப்தி அடைந்தவனாய்த் தருமன் கைகழுவிக் கொண்டு சவாரி தேடிப் புறப்பட்டான்.

மாலை—ஒரு சில சவாரிகளை முடித்து விட்டு, அன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்குச் சம்பாதித்து விட்ட திருப்தியுடன் களைப்பும் சேர்ந்து கொள்ள, பல ரிக்ஷாக்காரர்கள் தூங்கிக் கொண்டும் ஒரு சிலர் பீடி வலித்துக் கொண்டுமிருக்க, தருமன் அன்றைய வருமானத்தை எண்ணிக் கொண்டிருந்தான்.

தூரத்தில் தூங்கிக் கொண்டிருந்த ஒரு ரிக்ஷாக்காரனை மிகவும் சிரமப்பட்டு எழுப்பி ஒருவர், ''வண்டி வருமா?'' எனக் கேட்க, தூக்கம் கலைந்த கடுப்பில், அவன் ''வராம என்ன? நல்லா வரும்! இந்தா ஓட்டிக்கினு போ!'' என்றவாறே வண்டியிலிருந்து கீழே இறங்கிப் பிளாட்ஃபாரத்தில் படுத்து அடுத்த நிமிடம் உறங்கியும போனான்!



பக்கத்து ரிக்ஷாவில் பீடி வலித்துக் கொண்டிருந்தவனை நெருங்கி, ''வண்டி வருமாப்பா? மயிலாப்பூர் போவணும்'' என்றார் அவர்.

''பத்து ரூவா ஆவும்: குந்து!'' என்றவாறே வண்டியிலிருந்து இறங்கியவனிடம்,

''பத்து ரூபாயா, மூணு ரூபா தர்றேன்; என்ன சொல்றே? வர்றியா முடியாதா?'' என்று அவர் பேரம் பேசினார்.

''ஆஹா... தோடா... ஒண்ணு செய்யி! நான் உனக்கு நாலு ரூவா தர்றேன்! நீ என்னை வெச்சி வலி! எனக்கும் மயிலாப்பூர்லதான் ஊடு! நானும் ஊடு போய்ச் சேர்ந்த மாதிரி இருக்கும். நீயும் நாலு காசு சம்பாரிச்ச மாதிரி இருக்கும்! சர்த்தானா? மயிலாப்பூருக்கு மிதிச்சா மூணு ரூவா தருவாராம்... சிங்கப்பூர் இட்டுகினு போறேன்! ஆறு ரூவா தர்றியா? கொளாயெல்லாம் மாட்டிக்கினுகீறே... வாடகைக்கு எடுத்தியா? பேமானி...! போய்யா! மருவாதியக் கெடுத்துக்கப் போறே... சாவு கொராக்கி!'' என்று அவன் மேலே மேலே குரலை உயர்த்திக் கொண்டே போக, தருமன் அவரை நெருங்கிச் சமாதானப்படுத்தி விட்டு,

''நீ வா, சார்! நம்ம வண்டியிலே குந்து. இன்னா, எங்கே போவணும்?'' என்றான்.

''மயிலாப்பூர்.''

''மயிலாப்பூரா? மூணு ரூவா தா, சார்!''

இதற்குள் வண்டியில் ஏறி அமர்ந்திருந்த அந்த சாவு கிராக்கி, தன் பேரத்தைத் தருமனிடமும் ஆரம்பித்தது! ''மூணு ரூபாயா? நான் வழக்கமா டூ பிஃப்டிதான் தருவேன். அந்த ரேட்டுக்கு ஒத்து வந்தா வா, இல்லே நான் இப்பவே இறங்கிக்கறேன்!''

''அட, நீ இன்னா சார், கப்பு கப்புன்னு கோவிச்சுக்கிறே! நீ டூ பிஃப்டியே தா!'' என்றவாறே தருமன் பெடலை மிதிக்க, வண்டி மயிலாப்பூரை நோக்கிச் சென்றது.

வண்டியை மிதித்தவாறே தருமன், ''நீ இன்னாத்துக்கு சார், அந்தக் கசமாலத் தாண்டயெல்லாம் வாயைக் குடுக்கறே? அதுங்க இஸ்கோல் கிஸ்கோல் போயி, நாலு வார்த்தைப் படிச்சிருந்தா டீஜென்டா நடக்கும்... அது இல்லாம போனதாலத் தானே இப்ப ரிக்ஷா வலிக்குதுங்க...? நீ ஃபீல் பண்ணிக்காதே சார்... அவன் கெடக்குறான்.'' என்றவாறே திரும்பி அந்தப் பயணியை நோக்கியவன் ஆச்சரியப்பட்டான். சட்டென்று நினைவுக்கு வர,

''சார்! நீதானே இன்னிக்கி மத்தியானமா அந்தப் பாங்கு முன்னாலே நின்னு கூவிக்கினு இருந்தே? சே, அதானே பார்த்தேன்! தருமன் ஒரு தபா பார்த்தானா போதும், சார்! சொம்மா ஆளை கப்புனு புடிச்சிருவான்! அஆம்...! சே, உனக்கே சம்பளம் பத்தலேன்னு காலைலேர்ந்து கூவி கினு இருந்தே. பாவம்! உன் கைலே போயி அவன் பத்து ரூவா கேட்டுக்கிறான் பாரு... பேமானி! சர்தான் வுடு சார்!'' என்று சொல்

யவாறே தருமன் பெடலை அழுத்தி மிதித்தான்.

"தம்பி! வண்டியை ஓரமா எஸ். கே. ஒயின்ஸ்ல நிறுத்து," என்ற பயணி, இறங்கிச் சென்று, கடையிலே ஓர் அரை பாட்டில் விஸ்கியை வாங்கிக் கொண்டு திரும்பி வந்து வண்டியில் ஏறினார்.

தருமன் அவரை மேலும் கீழும் உற்று நோக்க... "என்ன பார்க்கறே? எப்பவாவது குடிக்கறதுதான்" என்றவாறே பாட்டிலை வாயில் கவிழ்த்து, 'ரா'வாகவே நாலு மிடறு விழுங்கினார்.

"தெரியுது சார், தெரியுது! நீ குடிக்கறதைப் பார்க்கும் போதே தெரியுது. நீ எப்பவாச்சும்தான் குடிப்பேன்னு. பாவம்... நீ இன்னா பண்ணுவே , உனக்கு டென்சன்!" என்றவாறே மீண்டும் பெடல் போட்டான் தருமன்.

பின்னால் அமர்ந்திருந்தவர் பாக்கெட்டில் பத்திரப்படுத்தி வைத்திருந்த மல்லிகைச் சரத்தை எடுத்து மணிக்கட்டில் சுற்றிவிட்டுக் கொண்டு, அதன் நறுமணத்தை ஒரு முறை ஆழமாய் உள்ளே இழுத்தார்.

மயிலாப்பூரில் பங்களா போன்று தோற்றமளித்த ஒரு வீட்டின் முன் நிறுத்தச் சொன்னவர், வண்டியிலிருந்து கீழே இறங்க முயற்சி செய்ய, உள்ளே ஏற்கெனவே இறங்கியிருந்த சரக்கு அவரைத் தடுமாற வைத்தது.


சுதாரித்தவாறே தள்ளாடி இறங்கியவர், பர்சிலிருந்து ஒரு புதுத் தாளை உருவி தருமனின் கையில் திணித்துவிட்டு, தவழாத குறையாக அந்த வீட்டினுள் சென்று மறைவதைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தான் தருமன்.

வாசற்கதவு சாத்தப்பட்டு அவர் பார்வையிலிருந்து மறைந்ததும், தன் கையில் அவர் திணித்திருந்த நோட்டைப் பார்த்த தருமன், திடுக்கிட்டான்! மடிப்புக் கூடக் காணாத புத்தம் புதிய ஐம்பது ரூபாய்த் தாள்! கர்புடன் சிரித்துக் கொண்டிருந்தது அது!

மறுநிமிடம் தருமன் பாய்ந்து சென்று அந்த வீட்டின் கதவைத் 'தடதட'வென்று தட்டினான்.

தலைநிறைய மல்லிகைப்பூ, நெற்றியை முக்கால்வாசி மறைத்திருந்த பொட்டு, மிரட்டவும் சிமிட்டவும் ஏற்ற அகன்ற விழிகள், உருண்டையான உடலமைப்பு ஆகியவற்றுடன் ஒரு நடுத்தர வயது மாது, கதவைத் திறந்து தருமனிடம், "இப்பதான்யா உள்ளே ஒரு பார்ட்டி போயிருக்கு. ஒரு அரை மணி கழிச்சு வா! சுசீலாவை ரெடி பண்றேன்," எனச் சொல்லிக் கண்ணடித்தவாறே கதவைச் சாத்த, தருமன் திகைத்துப் போய் நின்றான்!

(தொடரும்)



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி.

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542 — இல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 90 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ. 250/- அல்லது 300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 2500/- அல்லது 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்பவேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D – 76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் – 612 001.

****இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு****



கல்கி விடுமுறை மலர் 1989



வண்ணங்களில்:


* காஷ்மீரக் காட்சிகள்
* கொனாரக்; கன்யாகுமரி.
* ராதிகா; விஜயகாந்த்.
* புவனேசுவரி; W. V. ராமன்.
* பலூன் பயணம்
* கண்காட்சி தரத்தில் —
  — ஓவியங்கள்
  — ஒளிப்படங்கள்
* கவிதை மலர்
* கோகுலம் பக்கங்கள்
* வனவிலங்குகள்; பறவைகள்.
* இருபதுக்கு மேற்பட்ட சிறுகதைகள்
* இரு குறுநாவல்கள்
* மேடை நாடகம்
* அமரர் 'கல்கி' எழுதிய பூரி யாத்திரை
* மற்றும் ஏராளமான பயணக் கட்டுரைகள்
* விளையாட்டுக்கள், புதிர்கள்.
* நகைச்சுவை அம்சங்கள்

விலை ரூ. 10 : : 320 பக்கங்கள்

உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள் அல்லது பதிவுத் தபாலில் பெற ரூ. 16 அனுப்பவும்.

மானேஜர், கல்கி, சென்னை — 600 032.

புறநகர்ப் பகுதியில் [illegible]



* வாயிற்கதவுத் தாழ்ப்பாள் பெயர்த்தெடுக்கப்பட்ட அடையாளம்... (இப்போது புது தாழ்ப்பாள் போடப் பட்டுள்ளது.)

இரவு மணி ஒன்றரை. சென்னை புறநகர் காலனிகளில் ஒன்றான சின்மயா நகரை ஒட்டியுள்ள நூம்பல் கிராமம் உறங்கிக் கொண்டிருக்கிறது. பெருமாள் கோயில் தெருவில் இருக்கும் ரவியின் வீட்டுக் கதவு படபடவெனத் தட்டப்படுகிறது. என்னமோ ஏதோ என்று அவசரமாகச் சென்று திறக்கிறார் ரவி.


ஏழு நபர்கள். ஆளுக்கு ஆள் கையில் பட்டாக் கத்தி, சவுக்குக் கட்டை, அரிவாள்கள்!

''மரியாதையாகப் பணத்தை எடு.'' மறுக்கிறார் ரவி. அரிவாள் வெட்டு விழுகிறது. வேறு வழியில்லாமல் வீட்டில் வைத்திருந்த 4800 ரூபாயையும் மனைவியின் தாலிக் கொடியையும் பறி கொடுத்து விட்டு பரிதாபமாக நிற்கிறார் ரவி.

கொள்ளைக் கூட்டம் பக்கத்தில் இருக்கும் தாமஸின் வீட்டுக் கதவைத் தட்டி, தண்ணீர் கேட்கிறது. ஆனால் புத்திசாலியான மோனி தாமஸ், கதவைத் திறக்காமலேயே போட்ட கூச்சலில், கொள்ளைக் கூட்டம் ஓடிப் போனது!

வழியில் தனியார் கம்பெனி வாட்ச்மேன் கஜபதி மடக்க, அவருக்கும் பட்டாக்கத்தி வெட்டு!

பக்கத்திலுள்ள காரம்பாக்கம் கிராமத்திலுள்ள ரவி என்பவர் வீட்டிலும் கொள்ளைக் கூட்டம் நுழைந்து தாக்கி விட்டுக் கையில் கிடைத்த விலையுயர்ந்த பொருட்களை எடுத்துக் கொண்டு தப்பியது!



* புறநகர்ப் பகுதிகளைக் கலங்க அடித்தக் கொள்ளைக் கூட்டம்.

மதுரவாயல் போலீஸ் ஸ்டேஷன். பரங்கிமலை போலீஸ் கண்ட்ரோல் ரூமிலிருந்து மைக் அலறியது. அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் எங்கெங்கோ சுற்றிக் கொண்டிருந்த போலீஸ்காரர்கள், நூம்பல் கிராமத்திற்கு விரைந்தனர். விடியற்காலையில் செங்கை கிழக்கு மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் கே. வி. எஸ். மூர்த்தி சம்பவம் நடந்த இடத்துக்கு விரைகிறார். விசாரணைகள் வேகமாகத் துவங்குகின்றன. தொடர்ந்தாற்போல நான்கு இடங்களில் கைவரிசை காட்டி விட்டுப்

போன கொள்ளைக் கூட்டம், உள்ளூர் கும்பலா, அல்லது வெளியூர் கும்பலா என்று ஆராயப்படுகிறது. புறநகர் காலனி களில் ரோந்து தீவிரப்படுத்தப்பட்டுக் கண் காணிப்பு அதிகமாகிறது.

நாம்பல் கிராமத்தில் சென்ற மாதம் நடந்த இந்த நிகழ்ச்சி ஏதோ அபூர்வமான ஒன்றல்ல. சென்னையையொட்டியுள்ள புறநகர்ப் பகுதிகள் பலவற்றில் அடிக்கடி நிகழ்வதுதான்.

ஆழ்வார் திருநகரியையொட்டி வேலவன் நகரில் சென்ற மாதம் ஆட்டோ ஓட்டுனர் ரமேஷ் தாக்கப்பட்டார். ஷேக் அப்துல்லா நகர் சங்கரின் வீட்டில் கொள்ளை. அடையாறு பகுதியையொட்டி டிஃபன்ஸ் காலனியில் பண்டாலை வீட்டில் 26,000 ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் கொள்ளை. இரவு சின்மையா நகருக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் இசை அமைப் பாளர் சந்தான கோபாலனிடம் வழிப்பறி என்று இப்படி குற்றங்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

ஷேக் அப்துல்லா நகரில் தாலிக் கொடி யைப் பறிகொடுத்த சுந்தரி என்பவர் கொள்ளையரில் இருவரைத் தாம் முன்பு வேலவன் நகரில் குடியிருந்த போது பார்த் திருப்பதாகக் கூறுகிறார். விருகம்பாக்கத் தில் கொள்ளையடித்த கூட்டமும் மதுர வாயல் அருகே கொள்ளையடித்த கூட்ட மும் ஒன்றுதான் என்று விசாரணையில் தெரிய வருகிறது. ஏற்கெனவே பல கேஸ் களில் மாட்டிக் கொண்டிருக்கிற ராஜன், வரதன் என்ற இருவரையும் போலீஸ் வலை வீசித் தேடுகிறது. அவ்விருவருடன் கூடவே மேலும் மூன்று பேர், — தொழிலுக்குப் புதுசு — கைதானார்கள்.

நடுத்தரவர்க்க மக்களின் ஆசைக் கனவு: வீடு. நகரிலே கொள்ளை விலை. அதனால் புறநகர்ப் பகுதியில் ஒரு சின்ன பிளாட் வாங்கி, குருவிக் கூடு போல் வீடு கட்டிக் கொள்கிறார்கள். ஆனால் இவ்வாறு உருவாகும் புறநகர் காலனிகளில் பாதுகாப்புக்குப் பஞ்சம். ஏதாவது ஆபத்து என்றால் கூட உதவ ஆள் இல்லை. அடுத்த வீட்டில் என்ன நடக்கிறது, யார் வசிக்கிறார் கள் என்பது கூடப் பலருக்குத் தெரியாது. காரணம், பிறர் விஷயத்தில் தலையிடக் கூடாது என்ற நவீன நாகரிக எண்ணம் ஒன்று; பேசிப் பழகி நட்பை வளர்த்துக் கொள்ள நேரமில்லாதது இரண்டு. இது, கொள்ளையர்களுக்கு மிகவும் சௌகரிய மாகப் போய் விடுகிறது. பகலிலேயே, பக்கத்து வீட்டில் நடப்பதைத் தெரிந்து கொள்ளாத நிலை இருக்கும் போது, இரவில் யார் கண்டு கொள்வார்கள்?

உதாரணமாக நந்தம்பாக்கம் ராணுவ அதிகாரி வீட்டை எடுத்துக் கொள்ளுங்கள். பக்கத்து வீட்டில் வசிப்பவர் பெரிய போலீஸ் அதிகாரி. ஆனால் கொள்ளையர் கள் பூட்டை உடைத்து உள்ளே போன போதும் சரி, பின்னர் இரும்பு அலமாரி யைத் தள்ளிக் கொண்டே வீட்டிற்குப் பின்னே கொண்டு சென்ற போதும் சரி,



• ....பீரோவை உடைத்திருக்கிறார்கள்.

• அமைதியாகக் காணப்படும் இந்த வீட்டினுள் நுழைந்துதான்....





• வேதக்கண்

பக்கத்து வீட்டில் ஒரு சலனமும் இல்லை! இத்தனைக்கும் இருபத்தி நான்கு மணி நேரமும் அவர் வீட்டில் காவல் இருக்கிறது!

ஷேக் அப்துல்லா நகரில் சங்கரின் வீட்டைக் கொள்ளையர்கள் முற்றுகையிட்ட போது பக்கத்து வீட்டிலிருந்து யாரும் எட்டிப் பார்க்காததற்குக் காரணம் உயிருக்குப் பயந்துதான்! ''பட்டாக் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தினார்கள். எதிர்த்தால் கொலையே விழுந்து விட்டிருக்கும்'' என்கிறார் பாபு.

மார்ச் நான்காம் தேதி முதல் பன்னிரண்டாம் தேதி வரை புறநகர்ப் பகுதிகளைக் கலக்கிய கொள்ளைக் கூட்டத்தைக் கண்டுபிடித்தக் குற்றப் பிரிவு ஆய்வாளர் ராமையாவைச் சந்தித்தோம்.

''சங்கரின் மனைவி கொடுத்த ஒரு தகவலின் அடிப்படையில் நாங்கள் விரைந்து செயலாற்றிக் கொள்ளைக் கும்பல் ஏழு பேரில் ஐந்து பேர்களைக் கைது செய்து விட்டோம். மீதி இருவர் தலைமறைவாகி விட்டார்கள். கூடிய விரைவில் அவர்களையும் பிடித்து விடுவோம்'' என்றார்.

''வருமுன் காப்பது போல் முன்னெச்சரிக்கையாக நடந்து கொண்டு இதுபோன்ற குற்றங்களைத் தடுக்க முடியாதா?'' என்று



கேட்டதற்கு ராமையா சொன்னார்:

''புறநகர்ப் பகுதியில் எங்களிடம் இருக்கும் ஆள் பலம் மிகவும் குறைவு. உதாரணமாக, கோடம்பாக்கம் ஸ்டேஷனில் இருக்கும் போலீஸ்காரர்கள் எண்ணிக்கை, எங்கள் விருகம்பாக்கம் ஸ்டேஷனில் இருக்கும் எண்ணிக்கையை விட இரு மடங்கு அதிகம்! எங்களுக்கு ஏரியாவும் அதிகம்! வாகன வசதி கிடையாது. ஏதோ எங்களால் முடிந்த வரை செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.''

''கைதானவர்கள் மீது வழக்குப் போட்டு விட்டீர்களா?''

''நாங்கள் ஒருவனைப் பிடித்தவுடன் உடனே அவன் வக்கீலை அழைக்கும் உரிமையைப் பயன்படுத்துகிறான். மனைவியை விட்டு உயர்நீதி மன்றத்தில் ஹேபியஸ் கார்பஸ் பெட்டிஷன் போடச் சொல்கிறான். சட்டத்தில் தனக்குள்ள சாதக அம்சங்களை மிக நன்றாகவே பயன்படுத்திக் கொள்கிறான். எங்கள் பாடுதான் திண்டாட்டம். அவனுடைய தனிமனித உரிமைகளை நான் தவறு என்று கூறவில்லை. அவற்றை நாங்கள் மதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் இதனால் எங்கள் செயல்பாடுகளில் ஒரு தேக்க நிலை ஏற்படுகிறது. இந்தச் சிக்கல்களையெல்லாம் வெற்றிகரமாகக் கடந்து ஆளைப் பிடித்து, கோர்ட்டில் ரிமாண்ட் போட்டு கேஸை நடத்தித் தண்டனை வாங்கிக் கொடுத்தால் அடுத்த ஆறாவது மாதமே வெளியே வந்து மீண்டும் அதே குற்றத்தைச் செய்கிறான்!''

இன்ஸ்பெக்டர் ராமையா பல குற்றங்களில் ஈடுபட்ட இலங்கை வாலிபர்களை பற்றிய ஜாதகங்களைக் கையில் வைத்திருக்கிறார். சென்ற ஆண்டில் மட்டும் செயின் பறித்துக் கொண்டு போன பதினோரு கேஸ்கள் பதிவாகி உள்ளன. குற்றவாளிகள் அனைவரும் போராளி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை கிண்டியிலிருந்து வண்டலூர் வரையுள்ள புறநகர் காலனிகள் (திருவான்மியூர் உட்பட) பரங்கிமலை போலீஸ் சரக எல்லைக்குள் வருகின்றன. அந்தச் சரகத்தின் துணைக் காவல் கண்காணிப்பாளர் பொன் வேதக்கண் அவர்களைச் சந்தித்தோம்.

''தமிழக போலீஸுக்கு வசதிகள் மிக மிகக் குறைவு. தனிப்பட்ட வாழ்க்கையிலும் போலீஸ்காரன் நிலை மிகவும் பரிதாபம் தான். ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட பதினெட்டு மணி நேரம் வேலை செய்கிறான். எல்லா போலீஸ்காரர்களுக்கும் அரசு வீட்டு வசதி செய்து தருவது கிடையாது. வாடகையோ மிக அதிகம். போலீஸ்காரன் ஒன்றும் தேவதூதன் இல்லை. சமூகம் எப்படிச் செல்கிறதோ அதன் பாதிப்பு போலீஸிலும் இருக்கும். இருந்தாலும் பெரும்பாலானவர்கள் யோக்கியமானவர்களே. புறநகர்களில் இரவில் கொள்ளையடிப்பது ஒரு பக்கம் இருக்க 'ஒயிட் காலர்

திக்கற்ற முதியோர்களுக்கு ரூ. 1/- நன்கொடை கொடுத்து உதவ வாருங்கள்.

சிவானந்த ஆசிரமம் சுமார் 400 ஆதரவற்ற குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும் தொண்டாற்றி வருவதை தாங்கள் அறிந்ததே. இப்பத்திரிக்கை படிக்கும் வாசகர்களாகிய தங்களுக்கு திக்கற்ற முதியோர்கள் சார்பாக ஓர் வேண்டுகோள் சமர்ப்பிக்கிறோம்.

குழந்தைகள் இல்லாத முதியோர்கள், குழந்தைகள் இருந்தும் நிராகரிக்கப்பட்ட முதியோர்கள், குழந்தைகள் இழப்பினால் அனாதைகளாக விடப்பட்ட முதியோர்கள் பலரும் தள்ளாத வயதில் கையில் பொருள் இல்லாமல், இருப்பிடம் இல்லாமல் அடைக்கலம் தேடி எமது ஆசிரமத்தில் சரணடைகிறார்கள். இவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிறது. இவர்களுக்கு என்று பிரத்தியேகமாக ஒரு முதியோர் இல்லம் கட்ட சுமார் 10 லட்சம் ரூபாய் தொகையில் 100 பேர்கள் கொண்ட அமைப்பினை ஏற்படுத்தி அவர்களுக்கு வாழ்வும், இலவச உணவு, உடை இருப்பிடம் தர எண்ணியுள்ளோம். இத்திட்டத்தில் பத்திரிக்கை படிக்கும் வாசகர்களாகிய தாங்கள் ரூ. 1/- நன்கொடை கொடுத்தால் எங்களது கனவு நினைவாகும் என்பது திண்ணம்.

''சிறு துளி பெருவெள்ளம்'' என்ற அடிப்படையில் பலரின் ஒத்துழைப்பும், காணிக்கையும் மையமாகக் கொண்டு எண்ணற்ற ஒரு ரூபாய்களை வைத்துக் கொண்டு பல திக்கற்ற முதியோர்களின் வாழ்க்கை ஒளிமயமாக்க எண்ணியுள்ளோம். இந்த நன்கொடைக்கு வருமான வரி விலக்கு உண்டு. தாங்கள் ''சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்'' என்ற பெயரில் காசோலையாகவோ, மணியார்டர் மூலமாகவோ அனுப்பி வைத்தால் பேருதவியாக இருக்கும். அனுப்ப வேண்டிய முகவரி:


நிர்வாகி,

சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்,

நெ. 20, கம்பர் தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை 600 059.



"என் கண்மணியின் மிருதுவான சருமத்திற்கு நான் ஜான்ஸன்ஸ் பேபி சோப் ஒன்றையே நம்புகிறேன்."



வேறு எந்த சோப்பிலும் ஜான்ஸன்ஸ் பேபி ஆயில் கிடையாது

குழந்தை பராமரிப்பில் தலைமுறை தலைமுறையான நிறுவனம்.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

OBM/4681/TAM

கிரைம்ஸ்' என்று சொல்லப்படும் பட்டப் பகல் ஏமாற்று வேலைகளும் நடைபெறுகின்றன. சிட்ஃபண்ட் மோசடி, பிளாட்களை விற்பதில் மோசடி என்று பல ரகம். கள்ளச் சாராயம், விற்பனைக்குச் சென்னைக்கு வந்தாலும் அது காய்ச்சப்படுவது புறநகர்களில்தான். அது போலவே விபசாரமும் பெருகி விட்டது. இவ்வளவையும் நாங்கள் சமாளிக்க வேண்டும். அதனால் சில சமயம் எங்கள் செயல்பாட்டில் குறைகள் ஏற்பட்டு விடுவது உண்டுதான் என்றாலும் முயற்சிக்குப் பழு இல்லை. பொது மக்கள் ஒத்துழைத்தால் குற்றங்கள் நடப்பதைப் பெருமளவு குறைக்கலாம். உதாரணமாக, கழுத்து நிறைய நகைகளைப் போட்டுக் கொண்டு ஊரைச் சுற்றி வரக் கூடாது. ஜன்னல் ஓரம் தலையை வைத்துக் கொண்டு படுத்துக் கொள்ளக் கூடாது. கூடிய வரையில் விலையுயர்ந்த பொருட்களை, நகைகளை பாங்கு லாக்கர்களில் வைத்துவிட வேண்டும். வீட்டைப் பூட்டிக் கொண்டு போகிற சில புத்திசாலிகள் இரும்பு பீரோ சாவியை அதிலேயே தொங்க விட்டுவிட்டுப் போகிறார்கள்! இதனாலெல்லாம் எங்கள் பாடு திண்டாட்டமாகிவிடுகிறது.

''கேரளாவில் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் ஜீப் உண்டு. எங்களுக்குப் பரந்த ஏரியா உள்ளது. உதாரணமாக, ஒரு துணை கண்காணிப்பாளரின் கீழ் அதிகபட்சமாக ஏழு போலீஸ் ஸ்டேஷன்கள் வரலாம். ஆனால் என் தலைமையிலேயே பதினெட்டு காவல் நிலையங்கள் உள்ளன. இதுதவிர, நிர்வாகச் சுமை வேறு. திருவான்மியூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் முட்டுக்காடு வரை பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் என் ஏரியாவைப் பொறுத்த வரை விமான நிலையம் இருக்கிறது. தினசரி முக்கிய பிரமுகர்கள் வருகிறார்கள். அவர்களுக்குப் பந்தோபஸ்து கொடுப்பது ஒரு பெரிய பணி. இது, போதாதென்று கிட்டத்தட்ட முந்நூறுக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கே ஸ்ட்ரைக், போராட்டம் உண்ணாவிரதம் போன்றவை நடந்தால் பந்தோபஸ்து போட வேண்டும். சாலையில் விபத்து நடந்தால் விசாரிக்க வேண்டும். வழக்கு நடத்த கோர்ட்டுகளுக்குச் செல்ல வேண்டும். இது தவிர அரசியல் கட்சிகளின் ஊர்வலங்கள், போராட்டங்கள், மோதல்கள், ஆக, இவையெல்லாம் போகக் குற்றங்களைக் கண்டு பிடிப்பதற்கும் குற்றம் நடக்காமல் தடுக்க முயற்சிசெய்வதற்கும்போலீஸுக்குக்கிடைக்கும் நேரமே மிகக் குறைவு. ஆனாலும் தமிழ்நாடு போலீஸ் நாட்டிலேயே சிறந்து விளங்குவது குறிப்பிடத்தக்கது. இப்போதெல்லாம் மக்கள் சின்னப் பிரச்னையைக் கூடத் தூக்கிக் கொண்டு போலீஸுக்கு வந்து விடுகிறார்கள். சமரசம் செய்து வைப்பதிலேயே எங்கள் நேரம் பாதி போய் விடும் போலிருக்கிறது'' என்ற வேதக்கண்



அவன்: நாத்திகனான எனக்குக் கூடக் கடவுள் மீது நம்பிக்கை வருதுப்பா!''

டாக்ஸி டிரைவர்: ''மீட்டர் சார்ஜுக்கு மேல் டிப்ஸ் எதுவும் வேண்டாம்னு நான் சொன்னதைக் கேட்டு ரொம்பத் தான் உணர்ச்சிவசப்படாதீங்க, ஸார்!''

— உ. ராஜாஜி.

தொடர்ந்து, ''போதாததற்குக் காதல், கல்யாணம் என்றால் ஜோடிகள் தற்போது போலீஸ் ஸ்டேஷனில் தஞ்சம் அடைந்து விடுகிறார்கள்!'' என்று ஜோக்கடித்தார்.


கடைசியாகச் செங்கை கிழக்கு மாவட்டத்தின் காவல் துறை கண்காணிப்பாளர் கே. வி. எஸ். மூர்த்தியைச் சந்தித்தோம். சென்னையின் புறநகர்களில் உள்ள எல்லாப் பகுதிகளும் இவர் கண்காணிப்பில் வருவது தான். தமிழ்நாட்டில் நடந்த இரு பெரும் கொள்ளைகளான கள்ளக்குறிச்சி கூட்டுறவு வங்கி கொள்ளையையும், மதுரையில் நடந்த மதுரை வங்கி கொள்ளையையும் துப்புத் துலக்கிக் கண்டுபிடித்தவர் மூர்த்தி. அவர் புறநகர் வாசிகளுக்கு மேலும் சில உபயோகமான 'டிப்ஸ்' கொடுத்தார்:


''ஒரு குடும்பத்துக்கு இரண்டு ரூபாய் போட்டு வாட்ச்மேனை நியமித்துக் கொள்ளலாம். நல்லவிதமான நடத்தையுள்ள மாஜி ராணுவ வீரர்களை இதுபோன்ற பணிகளுக்கு ஏற்பாடு செய்யப் போலீஸ் உதவி செய்யும். வீட்டைப் பூட்டிக் கொண்டு ஊருக்குச் செல்லும் போது எங்களுக்குத் தெரிவித்தால் அந்த வீட்டின் மீது போலீஸ் கண்காணிப்பு தீவிரமாக இருக்கும். எங்கள் தகவல் — தொடர்பு வசதி நவீனப்படுத்தப் பட்டு உள்ளது. குற்றம் நடந்த இடத்திலிருந்து உடனே தகவல் வருமானால் பத்தாவது நிமிடத்தில் போலீஸ் படை ஆஜராகும் அளவுக்குத் தகவல் தொடர்பு உள்ளது. பல புறநகர்ப்பகுதிகளில்புதுபோலீஸ்ஸ்டேஷன்களை ஆரம்பிக்கும் உத்தேசம் உள்ளது. ஆகவே மறக்காமல் எம். எம். டி. ஏ. லே — அவுட்டுகளில் போலீஸ் ஸ்டேஷன்களுக்கு இடம் ஒதுக்க வேண்டும்.''


— ப்ரியன்

படங்கள்: சுபா

அட்டை வண்ணப்படம்: கே. வி. ஆனந்த்


அமைதிப் படை
விடுதலைப் புலிகள்




துள்ளியதே போதும்;
மோத வேண்டாம்!
தமிழக
சட்ட
மன்றம்
சி.எஸ்



கல்கி

1989 ஏப்ரல் 30
மலர் 47 இதழ் 39
சுக்ல சித்திரை 17



'விடுதலைப் புலிகள் விட்டுக் கொடுப்பார்களா?

இலங்கையில் பிரேமதாசா பதவிக்கு வந்த பிறகு, நாட்டில் அமைதி திரும்புவதற்குப் பலவித முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். இவை நற்பயனை இன்னமும் அளித்துவிடவில்லை எனினும் அவரது முயற்சியும் நல்லெண்ணமும் பாராட்டுக்குரியன.

ஆயுதங்களை ஒப்படைத்துச் சரணடையும் போராளிகளுக்கு நிபந்தனையற்ற பொது மன்னிப்பு என்பது, அமைதிப் படை ஏற்கெனவே அறிவித்த ஒன்றுதான். அதையே பிரேமதாசா திரும்பக் கூறி, தம் பங்குக்கு — தம்மால் மட்டுமே வழங்கக் கூடிய வேறு சில சலுகைகளையும் சேர்த்துக் கொண்டிருக்கிறார். நாடாளுமன்றத்தில் பங்கேற்க வாய்ப்பு, ஒப்படைக்கப்படும் ஆயுதங்களின் தன்மைக்கு ஏற்பப் பணம் போன்றவை இதில் அடங்கும். இந்தச் சலுகைகளை அவர் விடுதலைப் புலிகளுக்கு மட்டுமின்றி, ஜே. வி. பி. இயக்கத்தினருக்கும் அறிவித்திருக்கிறார். இந்த நல்ல திட்டத்தை ஏற்று, போராளிகளில் இரு தரப்பினரும் வன்முறையைத் துறந்து, ஜனநாயக அடிப்படையில் இயங்கத் தீர்மானித்தால் உலகமே மகிழ்ச்சி நிறைந்த நிம்மதிப் பெருமூச்சு விடும். ஆனால், இரு வகைப் போராளிகளுமே இதனை அப்படியே, உடனே ஏற்க முடியாமல் அவரவருடைய தனிப்பட்ட, சுயநலக் கலப்பான சர்வநிலைகள் தடை செய்கின்றன.

பிரேமதாசாவின் இந்த நல்ல திட்டத்தை ஏற்காவிட்டாலும் 'ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தத் தயார்' என்பதாகத் தெரிவிக்க விடுதலைப்புலிகள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். பேச்சு வார்த்தை நடத்தப் பாலசிங்கத்தைத் தங்கள் பிரதிநிதியாக அனுப்பி வைக்கவும் தீர்மானித்துள்ளனர். அந்த மட்டில் ஒரு முன்னேற்றம் என்று ஸ்ரீலங்கா அரசு அவரை வரவேற்கத் தயாராகி விட்டது. புதுதில்லியும் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்து விட்டது.

பிரேமதாசாவின் இரு தரப்புக்கும் கௌரவமான, சீரிய திட்டத்தை ஏற்கச் சம்மதிக்காத விடுதலைப் புலிகள், 'பேச்சு வார்த்தைக்குத் தயார்' என்று இறங்கி வந்திருப்பது எதற்காக என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. 'இப்போது நடந்து முடிந்த தேர்தல் செல்லாது; வரதராஜப் பெருமாள் அரசு பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும்' என்று அவர்கள் கோருவார்கள். இதைவிட முக்கியமாக, 'அமைதிப் படை இலங்கையிலிருந்து வெளியேற வேண்டும்' என்றும் பிரேமதாசாவிடம் கூறுவார்கள். இவற்றை நிபந்தனைகளாகவே விதிப்பார்கள் என்று கூட எதிர்பார்க்கலாம்.

பிரேமதாசா தேர்தலுக்கு முன்பாகவே இந்தியா — இலங்கை ஒப்பந்தத்தைக் குறை கூறி, அமைதிப் படை இலங்கையில் இருப்பதற்கு எதிர்ப்பும் தெரிவித்தவர். அவர் பதவிக்கு வந்த பிறகும், 'நமக்குள்ளே இருக்கும் சண்டைதான் வேற்று நாட்டுத் துருப்புக்கள் இங்கே முகாமிட்டிருப்பதற்குக் காரணம்' என்று வெளிப்படையாகப் பேசியவர். எனவே இவ்விஷயத்தில் பிரேமதாசாவின் சம்மதத்தைப் பெறுவது சாத்தியமே என்று விடுதலைப் புலிகள் கருதியிருக்கலாம். பிரேமதாசா இதற்கு உடன்பட்டு, அமைதிப் படையின் வெளியேற்றத்தைக் கோரினால், ஒரு புதைசேற்றுக் குழியிலிருந்து மீள இதுதான் சந்தர்ப்பம் என்று கருதி, இந்தியா, துருப்புக்களை வாபஸ் பெறலாம். இதுதான் இந்தியாவைப் பொறுத்தமட்டில் புத்திசாலித்தனமாகவும் இருக்கும். ஆனால் அதன் பிறகு என்ன நடக்கும்? விடுதலைப்புலிகள் தங்கள் சுதந்திர ஈழநாடு கோரிக்கையை விட்டுவிடப் போகிறார்களா? வன்முறைப் போக்கைத் துறந்துவிடப் போகிறார்களா?

'பேச்சு வார்த்தை என்பது விடுதலைப் புலிகள் தங்களைப் பலப்படுத்திக் கொள்ளக் கையாளும் தந்திரம் என்பது பலமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது; அமைதிப் படை தாய்நாடு திரும்பியதும் மீண்டும் விடுதலைப்புலிகள் தங்கள் சுயசொரூபத்தையே காட்டுவார்கள்; கொள்கைகளை விட்டுக் கொடுக்க மாட்டார்கள்' என்பது சில அரசியல் நோக்காளர்களின் கருத்து. இதற்கு இடம் தராத வகையில், பிரேமதாசா, முழுமையான, நிலையான, ஆரோக்கியமான, ஈழத் தமிழரின் தன்மானத்துக்கு உகந்ததான ஓர் ஒப்பந்தத்துக்கு முயற்சி செய்ய வேண்டும். அந்த முயற்சியில் அவர் பெறும் வெற்றி, ஈழத்தில் அமைதி திரும்பவும் வன்முறை ஒழியவும் ஜனநாயகம் வேரூன்றவும் உதவ வேண்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

நாத மாளிகையாக ஒரு ராகமாலிகை

ஸங்கீத சாஸ்திரம் பல பெரியோர்கள் அளித்திருக்கிறார்கள். அவை மொழிக்கு இலக்கணம் போன்றவை ஆதலால் 'லக்ஷண க்ரந்தம்' எனப்படும். இலக்கியமாகவுள்ள ஸாஹித்யம் 'லக்ஷ்யம்' எனப்படும். லக்ஷ்யத்தில் நிறைவு காணவே லக்ஷணம்.

ஸாஹித்யமாகவுள்ள ஒன்றே சாஸ்திரமாகவும் அமைந்துவிட்டால் அது ரஸிகர்களுக்கும் இசை மாணாக்கர்களுக்கும் பேரின்பமாகவும் பேருபகாரமாகவும் இருக்குமல்லவா? கர்நாடக இசையின் பல்லாயிரக் கணக்கான ராகங்களுக்கும் பிறப்பிடமாகிய 'ஜனக' ராகங்கள் எழுபத்திரண்டின் லக்ஷணமும் புரியும்படியாக ஒரு மகத்தான ராகமாலிகையை ஒரு பெரியவர் அளித்திருக்கிறாரெனில் அதை, இசை அரசின் ராஜ பவனமான நாத மாளிகை என்றே சொல்லலாமல்லவா? ஸ்ரீ மஹா வைத்யநாத சிவன் இயற்றிய '72 மேள ராகமாலிகை' தான் அந்த அற்புதமான லக்ஷண லக்ஷிய கலா சிருஷ்டி.

அதென்ன 72 மேளம்?

ஏழு ஸ்வரங்கள் இருக்கின்றன. இவற்றில் 'ஸ'வும் 'ப'வும் மாறாமல் ஒரே ஒலியுருவில் உள்ளவை. மீதமுள்ள ஐந்தில், 'ம'வில் இரண்டு வகை உண்டு. சுத்த மத்யமம், ப்ரதி மத்யமம் என்று பெயர். பாக்கியுள்ள ரி, க, த, நி ஆகிய நாலிலும் ஒவ்வொன்றிலும் மூன்று வகை உண்டு. இப்பதினாறு ஒலி பேதங்களைப் பலவிதங்களில் கலந்துதான் ஆயிரமாயிரம் ராகங்கள் உருவாகியுள்ளன. ஏழு ஸ்வரங்களையும் கொண்டவை; ஆறு — ஐந்து மட்டும் கொண்டவை; ஒரே ஸ்வரத்தில் உள்ள பல வகைகளைப் பல விதமாகக் கையாள்பவை என்பதாக நாதஸமுத்திரத்தில் எண்ணற்ற ராக அலைகள் தோன்றியிருக்கின்றன. கலைஞர்களின் அழகுணர்ச்சியில் தன்னியல்பாகத் தோன்றியுள்ளன.

இவற்றை அறிவு கொண்டு ஏதோ ஓர் அமைப்பின் கீழ் வகை தொகை செய்து, 'லக்ஷணம்' கொடுத்து வைத்தால்தானே ஒவ்வொன்றுக்கும் திட்டவட்டமாக ரூப நிர்ணயம் செய்யவும், பயிலவும் வசதியாயிருக்கும்! இப்படிப் பல பெரியோர்கள் தொன்று தொட்டுப் பல அமைப்புக்கள் ஏற்படுத்திக் கொடுத்திருப்பதில் இறுதியாகவும், உறுதியாகவும், 'விஞ்ஞான பூர்வ'மாக இதற்கு மேல் செய்வதற்கில்லை என்று அறுதியாகக் கூறும்படியாகவும் உள்ளதே மேள கர்த்தாக் கிரமம் எனப்படும் 72 மேள அமைப்பு வரிசை.

"ஆயிரக்கணக்கானவற்றில் 72 தானா?" என்றால், இந்த 72 — லிருந்தே மற்ற அனைத்தையும் குழந்தை ராகங்களாகத் தெரிந்து கொண்டு விடுமாறு இவை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன! அவற்றைப் பெற்றெடுத்த 'ஜனக' ராகங்கள் இவையே! பிறந்த குழந்தைகளான 'ஜன்ய' ராகங்களே மற்ற எல்லாமும்!

ஜனக ராகங்களாக இருப்பதற்கு இந்த 72—ம் பெற்றுள்ள சிறப்புக்கள் என்ன? ஒன்று — அவற்றின் ஆரோஹணம், அவரோஹணம் இரண்டிலும் ஏழு ஸ்வரங்களும் இருக்கும். இரண்டு, — ஏழு ஸ்வரங்களும் 'வக்ர'மாக இன்றி 'சரள'மாகவே ஒன்றையடுத்து மற்றதாகப் போகும். (அதாவது, ஸ—க—ரி ம — த — ப — நி என்பது போல் மாறாது.) மூன்று — ஒவ்வொரு ஸ்வரத்திலும் ஒரே வகையானதுதான் ராகத்தில் வரும்.

இப்படி 72 — ஐ 'ஸம்பூர்ண மேள'ங்கள் என்று வைத்து விட்டால், மற்ற எல்லா ராகங்களுமே அவற்றினடியாகப் பிறந்தவை என்று கொண்டு வந்துவிட முடியும்.

இவ்வாறு கண்டுபிடித்துக் கொடுத்தவர் ஆரம்பத்தில் நாம் குறிப்பிட்ட மஹா வைத்யநாத சிவன் என்று நினைப்பீர்களானால், அதுதான் இல்லை!

அவர் சென்ற நூற்றாண்டுக்காரர். மேளங்களை அமைத்து வரிசைப்படுத்திக் கொடுத்தவர் அவருக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவர். வேங்கட மகி என்பவர். "சதுர் தண்டி ப்ரகாசிகா" என்ற தமது மாபெரும் இசை நூலில் அவர் 72 மேள கர்த்தாக்களை வகுத்துக் கொடுத்திருக்கிறார்.

நினைவு கொள்வதற்கும், குறிப்புப் பார்த்துக் கொள்வதற்கும் சுலபமாக அவர் இந்த 72—ஐ அட்டவணைப்படுத்தியிருக்கிறார். முதலில் இரண்டாகப் பிரித்து, பிறகு ஒவ்வொரு பிரிவையும் ஆறு ஆறு ராகங்கள் கொண்ட ஆறு 'சக்ர'ங்களாகப் பிரித்திருக்கிறார். ஆக, பன்னிரண்டு சக்ரங்கள்.

வேங்கட மகி லக்ஷணமாக லக்ஷணம் வகுத்துக் கொடுத்துவிட்டார். அதற்கு லக்ஷியமாக ஒரு ஸாஹித்யம் வேண்டாமா?

சென்ற நூற்றாண்டு மத்தியில் தஞ்சை மராத்தி மன்னராயிருந்த சிவாஜியின் மாப்பிள்ளையான சகாராம் ஸாஹேப், அரசவைக் கலைஞருள் ஒருவரான லாவணி வேங்கடராவ் என்பவரிடம் இப்பொறுப்பை அளித்தார். வேங்கடராவ் 72 ராகங்களின்



ஸ்ரீமதி எம். எஸ்.
பாடியுள்ள, 'மேள
ராகமாலிகா சக்கரம்'
இசைத் தட்டையும்
கேஸட்டையும்
மியூஸிக் அகாடமி
அரங்கில், அண்மை
யில் வெளியிட்டுச்
சிறப்பித்தார்
ஆளுனர் அலெக்
ஸாண்டர். 'மேள
ராகமாலிகா சக்கரம்'
என்ற ஓர் அற்புதம்
பற்றி......



• ஸ்ரீ மகா வைத்தியநாத சிவன்

பெயரும் பாட்டிலேயே வருமாறு ஒரு மராத்தி ஸாஹித்யத்தை சகாராம் மீதே உருவாக்கினார். சாஹித்யம் உருவானாலும் ஸங்கீதம் உருவாகவில்லை! சிவாஜிராவின் மைத்துனரான க்ருஷ்ணா ஸாஹேப் இதற்குத் தக்கபடி மெட்டமைக்கக் கூடியவர் மஹா வைத்ய நாதைய்யர்தான் என்று நினைத்தார்.

இசைக் கலைஞர்களுள் "மஹா" பட்டம் பெற்றவர் அவர் ஒருவரே! அப்பட்டம் பெற்ற போது அவர் பன்னிரண்டே வயது பாலகர்! பட்டமளித்தவரோ சமய உலகில் மட்டுமின்றி அருங்கலைஞர்களின் ஆதரவாளராகவும் புகழ் பெற்றிருந்த திருவாவடுதுறை ஆதீனகர்த்தரான சுப்பிரமணிய தேசிகர். குரலினிமை, இசைப் புலமை ஆகியவற்றால் மாத்திரமின்றி உள் கனிந்த பக்தியுடன் உருகிப் பாடிக் கேட்போர் உள்ளங்களை உயர்வித்தவர் மஹா வைத்தா. மஹா வைத்யநாத "சிவன்" என்றே சொல்லுமாறு வாழ்ந்த பரமசாம்பவர்.

க்ருஷ்ணா ஸாஹேபின் வேண்டுகோளுக்கிணங்க மராத்திப் பாடலுக்கு மஹா வைத்தா மெட்டமைத்துக் கொடுத்தார்.

நெஞ்சு நிறையவில்லை! மெட்டைக் குறித்தல்ல; பாட்டைக் குறித்தேதான்! 'இந்த லக்ஷண — லக்ஷிய நாத ஆலயத்தில் சகாராமுக்கா அரியணை போட்டு அமர்த்துவது? இதில் நாதஸ்வரூபனான ஈசனையல்லவா எழுந்தருளுவிக்க வேண்டும்?'

மெட்டு போட்டது மட்டுமில்லை. பாட்டுமே அடியோடு உரு மாறியது! "ஸ்ரீமன் ஜோகரி ராஜ வம்ச மணி" என்ற வேங்கட ராவின் நரஸ்துதி "ப்ரணதார்த்தி ஹர ப்ரபோ! புராரே!" என்ற மஹா வைத்தாவின் சிவஸ்துதியாகி ஐயாறப்பனை அழைத்தது!

கவி சாதுரியத்தோடு ராகப் பெயர் பாட்டிலேயே வருவதாக 72 ஈரடிகள். ஒவ்வொன்றுக்கும் சிட்ட ஸ்வரம். மங்களமான ஸ்ரீ ராகத்தில் பல்லவி. ரத்தின கர்ப்பமாக 72 மேள ராக ரூபத்தையும் வடித்துக் காட்டும் அரிய படைப்பு. அடுத்தடுத்த ராகங்களில் ஒரே ஒரு ஸ்வரம்தான் மாறுபடும். ஆயினும் அவர் ஜீவ ஸ்வரத்தைப் பளீரென்று தொட்டு விடுவதால் முன் ராகத்திலிருந்து அடுத்த ராகம் வேறு லோகமாகவே ஒளிரும் தெளிவுக்கு... 'ஆஹா' போடுவதற்கதிகமாகச் சொல்லத் தெரியவில்லை!

ஒரே வாரத்தில் மஹா வைத்தா உருவாக்கிய இக்கிருதிதான் முத்துஸ்வாமி தீக்ஷிதரின் தந்தையாரான ராமஸ்வாமி தீக்ஷிதரின் 108 ராக — தாள — மாளிகைக்கு அடுத்தபடியாக உலகத்திலேயே மிகப் பெரிய இசைப் பாடல் என்ற பெருமை பெற்றிருக்கிறது!

பாட்டு ஏட்டிலிருந்து என்ன பயன்? பாட்டாக அல்லவா ஒலிக்க வேண்டும்? இந்த இசைக் கோயிலின் கோபுரம், பிராகாரம், சந்நிதி, சிற்பம் ஆகியவற்றின் சிறப்பெல்லாம் நமக்கு விளங்குமாறு பாடி நம்மை நாதப் பிரம்மனின் கருவறையில் நிறுத்தி வைக்க வேண்டாமா?

நிறுத்தி வைத்து நமது நிறைந்த நன்றி நமஸ்காரங்களைப் பெறுகிறார் நாத யோகினி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி. அவரைக் கொண்டு மேளராகமாலிகையை எல். பி. இசைத் தட்டாகவும், காஸெட்டாகவும் வெளியிட்டுள்ள க்ராமஃபோன் கம்பெனியும் இசையுலகின் நீங்கா நன்றியைப் பெறுகிறது. வெளியீட்டு விழாவுக்கு முன்னதாகவே காஞ்சி முனிவர் ஸ்ரீமடத்தில் இவ்விசைப் படிவங்களை அங்கீகரித்தருளினார்கள். பூர்வாசிரமத்தில் காஞ்சி முனிவர் தாய் வழியில் வேங்கட மகி வம்சத்தினர் என்பது கூடுதல் சிறப்பு! பரமாச்சார்யாளின் ஆசியுடன் இந்த இசைத்தட்டின் — கேஸட்டின் ராயல்டி வருமானம்முழுவதையும்சென்னை, மியூஸிக் அகாடமிக்கே உரிமையாக்கி விட்டார் ஸ்ரீமதி எம். எஸ். என்பது மேலும் ஒரு சிறப்பு.

ஸ்ரீமதி எம். எஸ்ஸின் அதிநுட்பமான ஸ்வர ஞானமும், ஞானத்தை கானமாக்கித் தரும் அவரது மங்கள சாரீரமும் ராக லக்ஷணங்களை வடித்துக் காட்டவே ஏற்பட்ட இந்த ஸாஹித்யத்தில் தெற்றெனப் பிரகாசிக்கின்றன. பாடமாக மண்டையில் நின்றுவிடக் கூடியதைப் பாடலாக இதயத்தில் ஊற வைக்கும் அரும் சாதனையை அநாயாசமாக ஆற்றியிருக்கிறார். இசை ரஸிகர்களுக்கும் வித்யார்த்திகளுக்கும் அவர் எக்காலத்துக்கும் அளித்துள்ள வரப்பிரஸாதம் இது! இசை மூலம் எத்தனையோ துறைகளுக்குத் தொண்டு புரிந்துள்ள எம். எஸ். இசை மூலம் இசைக்கே புரிந்துள்ள சிகரத் தொண்டு!

— "கன்யா"

வண்ணப்படம்:

கௌரி ராமநாராயணன்.



"ஊரிலேருந்து வந்த உன் மாமியார் உடனே திரும்பிப் போயிட்டாங்களே... ஏன்?"

"சும்மா, என்கூட இன்ஸ்டன்ட் சண்டை போட்டுட்டுப் போகத்தான் வந்தாங்களாம்.....!"

— இம்ரான்கான்.

"வர வர எந்தத் தலைப்பில்தான் பட்டி மன்றம் வைக்கிறதுன்னு விவஸ்தையில் லாமப் போச்சு.....!"

"என்ன விஷயம்?"

"பாருங்க! 'சண்டையில் சிறந்தது டில்லி நாடாளுமன்றச் சண்டையா? இல்லே தமிழக சட்ட சபைச் சண்டையா?'ன்னு தலைப்பு வச்சிருக்காங்க!"


— அரகண்டநல்லூர் சாதிக்பாஷா.


"எங்க செக்ஷன் ஆபீஸர் ரொம்ப ஏமாளி!"

"எப்படி...?"

"ஹெட்கிளார்க் ராமசாமி போன வாரம் தனக்கு வெட்டிங் ஆனிவர்ஸரின்னு சொல்லி லீவு போட்டார். இந்த வாரம் ஒரு நாள் தன்னோட ஒய்ஃபுக்கு வெட்டிங் ஆனிவர்சரின்னு சொல்லி லீவு வாங்கிட்டார்!"

— ஆர். அரிகோபி.





கணவன்: "அடியே கமலா, தெருவிலே குழாயடிச் சண்டை போடாதேன்னு சொன்னேனே, கேட்டியா?"

மனைவி: "ஏங்க இப்போ என்ன ஆச்சு?"

கணவன்: "பிரபல டைரக்டர் அவர் படத்திலே ஸ்டண்ட் சொல்லிக் கொடுக்க உன்னைக் கூப்பிட்டிருக்கார்! இங்க பாரு லெட்டரை...!

— பொன்னமராவதி வெங்கட்.



டாக்டர்: "ஏற்கெனவே பார்த்த டாக்டர் தந்த உங்களோட 'கேஸ் ஹிஸ்டிரி'யைக் கிழிச்சுப் போட்டுட்டீங்களா... ஏன்?"

நோயாளி: "எட்டாவதுல ஹிஸ்டிரியில ஃபெயில் ஆனதுலேர்ந்து எனக்கு ஹிஸ்டரியே பிடிக்காது டாக்டர்...!

— எஸ். செந்தில்குமார்.



ஒளிராத வைரம்

அன்று ஞாயிற்றுக் கிழமை.

வீட்டில் எல்லோரும் டீ.வி. பெட்டியைச் சுற்றி உட்கார்ந்து 'வீடியோ' பார்த்துக் கொண்டிருந்தார்கள். சாதாரணமாக நான் அதையெல்லாம் உட்கார்ந்து பார்ப்ப தில்லை. திங்கள் முதல் சனி வரை அலு வலகத்தில் யந்திரமாக உழைத்த பிறகு, ஒரு நாளாவது ஓய்வு வேண்டாமா?

ஆனால் அன்று அந்தப் பக்கமாகப் போனவள் – படத்தில் இரண்டு காட்சி களைப் பார்த்தேன். பார்த்தவள் அப்படியே ஒன்றிப் போனேன். வேலை பார்க்கும் கணவன் மனைவியிடையே ஏற்படும் "யார் உயர்வு?" என்ற வழக்கமான பிரச்னையைத் தான் அற்புதமாகக் கையாண்டிருந்தார்கள்.

இருந்தாலும் கூட அந்தக் கதையின் நாய கியோ – புருஷன் சீறும் போது எல்லாம் அடங்கி அடங்கிப் போவதாகக் காட்டியிருந் தார்கள். அதுதான் எனக்குச் சரியாகப்பட வில்லை. அவள் சம்பாத்தியத்தில் எல்லோ ரும் குளிர் காயும்போது, அவள் தனக்காகச் சில பிரத்தியேகமான சலுகைகளையும் சௌகரியங்களையும் எதிர்பார்ப்பதில் என்ன தவறு? அவள் எதற்காகக் குட்டக் குட்டக் குனிய வேண்டும்?

ஏன்? என் வீட்டையே எடுத்துக் கொள் ளுங்களேன். இந்த டீவி, வி.ஸி.ஆர்., எல்லாம் என் சம்பாத்தியத்தில் வாங்கியது. இந்த வீடு கூட, நான் கம்பெனியில் கேட் டுப் பெற்ற கடனில் உருவானது. வாயிற் குறட்டில் போடப்பட்டிருந்த மிதியடி முதல் புழக்கடையில் ஓடும் எலெக்ட்ரிக் மோட்டார் வரை எல்லாம் என் உத்தியோகம் சட்டித் தந்தது.

எனக்கு அயல்நாட்டுத் தொடர்புடைய ஒரு கம்பெனியில் உதவி மானேஜர் வேலை. கையில் வருவது நான்காயிரம். என்ன வருக்கு ஒரு கவர்ன்மெண்ட் ஆபீஸில் "ஜூனியர் இன்ஜீனியர்" வேலை என்று பெயர். எதற்கெல்லாமோ பிடித்தம் போக மாதம் ஆயிரத்து ஐநூறு ரூபாய் வந்தாலே அதிகம். அதையும் யார் கையில் வாங்கினார் கள் இதுவரை? யார் எண்ணிப் பார்த்தார் கள்? அப்படியே அது என் நாத்தனார் கலியாணச் செலவை அடைக்க ஆவியாகப் போய்க் கொண்டு இருந்தது.

இப்படி இருந்தும் கூட இந்த வீட்டில் எனக்கு மதிப்பு கிடையாது. ஆபீஸிற்குப் போகும் வரையில் மாடாக உழைக்க வேண்டும். திரும்பி வந்த பிறகும் ஓடாகத் தேய வேண்டும்.

ஏன்? எதற்காக...? இத்தனை நாட்கள் பைத்தியக்காரத்தனமாக இருந்தது போதும்.. அனுபவிக்கிறார்கள் இல்லையா, செய்யட்டுமே!

வீடியோ முடிந்தது.

இரவுச் சாப்பாட்டிற்காக எல்லோரும் உட்கார்ந்து விட்டார்கள். வழக்கமாக எல் லோரும் சாப்பிட்டு முடிந்த பிறகு, நானும் என் மாமியாரும் இருக்கிறதைப் பகிர்ந்து கொண்டு ஒப்பேற்றுவோம்.

எனக்கு ஏன் இந்தத் தலைவிதி!

"எனக்கும் பசிக்கிறது.. நானும் உட் கார்ந்து கொள்கிறேன்!" என அமர்ந்து விட்டேன்.

எல்லோரும் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். இத்தனை வருஷங்களாக இப்படி ஒருநாள் கூட நான் நடந்து கொண் டதில்லை.

என் மாமியார் ஏதும் பேசவில்லை. மௌனமாகப் பரிமாறினாள்.

சாப்பிட்டு முடித்த பின், அந்தத் தட்டைக் கூட எடுக்காமல் அப்படியே போட்டு விட்டு மாடிக்கு விரைந்து என் படுக்கையில் சாய்ந்து கொண்டேன். புத்தகத்தைப் பிரித்து வைத்திருந்தேனே தவிர மனம் அதில் இல்லை. நிச்சயம் பூகம்பம் வெடிக்கும். எரிமலை குமுறும். என் இதயத்தைத் திறந்து கொட்ட அப்படி ஒரு சந்தர்ப்பத்தைத்தான் நான் எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

பத்து மணிக்குப் பிறகு உள்ளே வந்த என் கணவர் "விளக்கை அணைக்கட்டுமா?" எனக் கேட்டார்.

"புத்தகம் படிக்கிறேனே, தெரியவில் லையா? விளக்கு இருக்கட்டும்!" எனச் சன்னென்று விழுந்தேன்.

"நாளைக்குத் திங்கட்கிழமை... ஆபீஸ் நாள். மணி பத்தடித்து விட்டது" என்றார் அவர்.

"ஒவ்வொரு நாளும் ஒரு கிழமைதான்.. படிக்கிற போது குறுக்கே குறுக்கே பேசி னால் எப்படி?" எனச் சலித்துக் கொண்ட படி, புத்தகத்தைப் படிப்பது போல் பாவனை செய்தேன்.

அதற்கு மேல் அவர் பதில் பேசவில்லை. கட்டிலில் ஓர் ஓரமாகப் படுத்துக் கொண்டு, தன் கண்களை மூடி, விளக்கு வெளிச்சம் கூசாமல் ஒரு கைக்குட்டையை எடுத்து முகத்தை மறைத்தவாறு போட்டுக் கொண் டார்.

ஸ்ரீமகன்

"ஏதாவது பதில் பேசுவார்... திருப்பிச் சூடாகக் கொடுக்கலாம்!" எனக் காத்திருந்த எனக்கு அவர் மௌனம் பெருத்த ஏமாற்றமாகவே போயிற்று. புத்தகத்தில் மனம் ஒன்றவில்லை.

அவர் புரண்டு படுத்தார். தன்னுடைய வலது கையால் என்னை அணைக்க முற்பட்ட போது நான் வேகமாக விலக்கி விட்டேன்.

"உம்... நாளைக்குத் திங்கட் கிழமை... ஆபீஸ் உண்டு!" என அவர் பாடத்தையே திருப்பிப் படித்தேன்.

"ஓ...! ஐ ஆம் ஸாரி..." எனக் கூறியவர் விலகிப் படுத்துக் கொண்டார்.

ஒரு கணம் எனக்கு என் மேலேயே வெறுப்பு ஏற்பட்டது. திடீரென்று என்ன வந்தது எனக்கு...! ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறேன்... போயும் போயும் ஒரு சினிமாவைப் பார்த்து விட்டு... ஏன் நடந்து கொள்ளக் கூடாது..? இத்தனை நான் அடங்கி அடங்கி நடந்து கொண்டது போதாதா? என் சாப்பாட்டிற்கு இவர்களை எதிர்பார்க்கிறேனா? குடும்பத் தேரின் அச்சு இந்த அம்மாவாக்கும்!

தினமும் காலை நாலரை மணிக்கு எழுந்து பால் வாங்குவது என் வேலை. சமையல் செய்வது மாமியார் என்று பெயர். பக்கத்தில் நின்று. கோவிலில் ஸ்வாமி அபிஷேகத்திற்கு எடுத்துக் கொடுப்பது போல் எல்லாம் எடுத்துக் கையில் தர வேண்டும்!

பால்காரன் மணி அடிக்க அடிக்க நான் உறங்குபவள் போலப் பாசாங்கு செய்தேன். இவர் புரண்டு படுத்தார். அடுத்த மணி சப்தம் கேட்டால் எழுந்து ஓடுவார் எனத் தெரியும். தூக்கத்தில் தன்னிச்சையாகச் செய்வது போல் அவர் மார்பில் தலையைப் புதைத்துக் கொண்டேன்.





நோயாளி: டாக்டர்... ரெண்டு வாரமா இடுப்புவலி!
டாக்டர்: ஓஹோ!.....

நோயாளி: ஒரு பத்து நாளா முதுகுவலி!..
டாக்டர்: அப்படியா? ...

என்னை உதறி விட்டு எழுந்து போக வில்லை. முடியுமா என்ன?

கீழே தாள் விலக்கப்படும் ஒலி கேட்டது. யாரோ போய் பால் வாங்குகிறார்கள்.

நிதானமாகக் கீழே இறங்கி வந்தேன்.

காலேஜ் போக வேண்டிய மச்சினனும் நாத்தனாரும் காத்துக் கொண்டு இருப்பது தெரிந்தும் வேண்டுமென்றே குளியல் அறைக்குள் புகுந்து கொண்டு அவர்களைக் காக்க வைத்தேன். ஏதாவது முணுமுணுப் பார்களோ என்றால் மூச்! ஒன்றையும் காணோம்.

நான் உடுத்தும் துணிகளை நானே தோய்த்தால்தான் எனக்கு எப்போதும் திருப்தி. நேற்று அந்தப் படம் பார்த்தது என்னுள் புதிதாக ஒரு வீம்பை வளர்த்து விட்டிருந்தது. வேலைக்கு என அமர்த்தி யிருந்த செல்லம்மா இரண்டு நாட்களாக வரவில்லை. இன்னும் நான்கு நாட்களுக்கு வர மாட்டாள் என்பதும் எனக்குத் தெரியும். ஒரு வாளி சோப் கலந்த நீரில் என் துணி களை நனைத்து விட்டு "அம்மா... என் துணி களைச் செல்லம்மாவை விட்டுத் தோய்க்கச் சொல்லுங்கள்... எனக்கு வேலை இருக் கிறது!" எனப் பொதுவிலே சொல்லி வைத்தேன்.

செல்லம்மா இல்லாவிட்டால் என்ன? இந்த அம்மாதான் தோய்க்கட்டுமே!

ஒன்பது மணிக்குக் குளியல் அறைக்குப் போன என் கணவர் வழக்கத்தை விட அதிக நேரம் எடுத்துக் கொண்டார். அவர் வெளியே வந்த பிறகு நான் உள்ளே போய்ப் பார்த்த போது — நான் நினைத்தது சரியாக இருந்தது.. என் துணிகளைத் தோய்த்துப் பிழிந்து வைத்திருந்தார்.

செய்யட்டும்.. செய்யட்டும்.. எனக்கா கவா செய்கிறார்! தன் அம்மா சிரமப்படக் கூடாது என்ற கரிசனம்.

ஆபீஸிற்குப் புறப்படும் போது வழக்க மான தயிர் சாதம் டிபன் பாக்ஸில்.

டிபன் டப்பாவைத் தள்ளி வைத்தேன். "எனக்குத் தயிர் சாதம் வேண்டாம்... நான் ஆபீஸ் கான்டீனில் பார்த்துக் கொள்கி றேன்" எனப் புறப்பட்டேன்.

என்றுமே சாப்பாடு எடுத்துப் போகாத என் கணவர் "இருக்கட்டும்... நான் எடுத்துப் போகிறேன்" என்றார்.

வீட்டு வாசல் வரை போய்த் திரும்பிய வள், "இதோ பாருங்கள்.. நான் திரும்பி வரத் தாமதம் ஆகும். யமுனா வீட்டில் குழந் தைக்குப் பிறந்த நாள்.. கூப்பிட்டிருக்கி றாள்" எனச் சொல்லி விட்டு வெளியே விரைந்தேன்.

அலுவலகத்தில் நுழைந்தால் வேறு என்ன ஞாபகம் இருக்கிறது? வேலை மும்முரத்தில் நேரம் போனதே தெரிய வில்லை. மாலையில் யமுனா வீட்டில் 'பார்டி!' பிறந்த நாள் கேக் வெட்டிப் பாடி ஆகி விட்டது.

யமுனா என்னுடன் வேலை பார்ப்பவள். அவள் கணவர் என்னவருடைய இலாகா வில் எக்ஸிகியூடிவ் இன்ஜினியர். அதிகாரி என்ற பந்தா ஏதும் இல்லாமல் சரளமாகப் பழகுவார்.

இரவு சாப்பாடு முடிந்தது. நான் புறப் பட்டேன்.

"கொஞ்சம் இருங்கள் மிஸஸ் ராகவன். நானே உங்களை என் காரில் வீட்டில் கொண்டு விடுகிறேன். உங்களுடன் முக்கிய மாகக் கொஞ்சம் பேச வேண்டும்."

யமுனாவிடம் விடைபெற்று, காரில் ஏறிக் கொண்டேன்.

கேட்டைத் தாண்டியதுமே பெரிய அஸ் திரத்தைத் தூக்கிப் போட்டார் யமுனாவின் கணவர்.

"மிஸஸ் சீதா... இது உங்கள் தனிப்பட்ட குடும்ப விஷயம். இருந்தாலும் இத்தனை தூரம் பழகி விட்டு, மறைப்பது சரியில்லை என்பதால் சொல்கிறேன்."

என் மனம் பதறியது.. இவருக்கு ஏதாவது வேண்டாத சகவாசம், கெட்ட பழக்கம் ஏற்பட்டிருக்குமோ..!

"ராகவன் ரொம்பவும் கெட்டிக்காரன். எங்கேயோ இருக்க வேண்டியவன் இந்த கவர்ன்மெண்டில் பிச்சைக் காசுக்காக உழைக்கிறான். இவன் அருமையை எங்கள் டிபார்ட்மெண்ட் ஒருநாளும் புரிந்து கொள் ளாது. இரண்டு வருஷம் முன்பு புதிதாக இரண்டு மெஷின் வாங்கினோம். அதை நிறுவ பம்பாய் கம்பெனியிலிருந்து இன்ஜினியர்கள் வந்தார்கள். ராகவன் திறமையைப் பார்த்து அசந்து போனார்கள். பல மடங்கு அதிக சம்பளத்தில் அங்கே வேலைக்கு அழைத்தார்கள். ஜெர்மனிக்குப் பயிற்சிக்கு அனுப்புவதாகச் சொன்னார் கள். ராகவன் மட்டும் பம்பாய் கம்பெனி யில் சேர்ந்தால் மளமளவென்று முன்னுக்கு வருவான். அயல்நாட்டுத் தொடர்புள்ள கம்பெனி. பிடித்துப் போய்விட்டால் உச்சிக் குக் கொண்டு போய் விடுவார்கள். இவன் வேண்டாமென்றது சுந்தரேசனுக்குக் கிடைத்தது. மாதம் எட்டாயிரத்துக்கு மேல் வாங்கிக் கொண்டு பம்பாயில் கம்பெனி கொடுத்த வீட்டில் கம்பெனிக் காரில் கொழிக்கிறான். மறுபடியும் இந்த வருஷம் ராகவனுக்கு அவர்கள் அழைப்பு விடுத்திருக் கிறார்கள். நீங்கள்தான் எப்படியாவது அவனைச் சம்மதிக்க வைக்க வேண்டும்."

"என்னிடம் இது பற்றி அவர் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லையே...?"

"சொல்லியிருக்க மாட்டான் என்று

நோயாளி:ஒருவாரமாத் தலைவலி!...
டாக்டர்:அப்புறம் அஞ்சு நாளா காலை வலிச்சிருக்குமே!...
நோயாளி:ஆமாம் டாக்டர்!....
டாக்டர்:மூணு நாளா நெஞ்சை வலிச்சிருக்குமே!....

எனக்குத் தெரியும். நீங்கள் ரொம்பவும் கொடுத்து வைத்தவர் மிஸஸ் கீதா. பெண்டாட்டியிடம் பிரியமாக இருக்கிறான் எனச் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். ராகவன் உங்கள் மேல் உயிரை வைத்திருக்கிறான். இவன் பம்பாய்க்குப் போய் விட்டால் ஆபீஸ் சுமையும், வீட்டு வேலையும் தாங்காமல் நீங்கள் தவித்துப் போய் விடுவீர்களாம். "நான் பம்பாய் போனால் அவள் இங்கேதான் இருக்க வேண்டும். நல்ல வேலையில் இருக்கிறாள், நல்ல பெயரும் வாங்கி விட்டாள். நிச்சயம் அவளுக்கு மாற்றல் கிடைக்காது. எனக்கு இப்போது வருகிற சம்பளம் போதும்!" என்று மந்தையில் ஓர் ஆடாக இருக்கத்தான் விரும்புகிறான். அவன் இருக்க விரும்பினாலும் நாம் அனுமதிக்கக் கூடாது, மிஸஸ் கீதா, வைரத்தைப் பட்டை தீட்டிப் பார்த்துப் பிரமிக்க வேண்டும். இன்னும் இரண்டு நாளில் நான் பம்பாய் கம்பெனிக்குப் பதில் அனுப்ப வேண்டும்."

"முயற்சி செய்கிறேன்" என்றேன் சுருக்கமாக.

கடந்த இருபத்து நான்கு மணி நேரமாக நான் நடந்து கொண்ட விதம் எனக்கு வெட்கமாக இருந்தது. நான் கொடியில் காயப் போட்டிருந்த துணிகளைத் தினமும் எடுத்துத் தெருவில் வரும் பையனிடம் இஸ்திரி போட்டு வைக்கும் மாமனாரின் கரிசனத்தை நான் ஏன் மறந்து போனேன்! 'ப்ளட் — ப்ரெஷர்' இருந்தும் கூட, இரவு ஒரு நாள் நான் பால் குடிக்க மறந்தாலும், தள்ளாமல் மாடி ஏறி வந்து, நான் அருந்தும் வரை பக்கத்தில் இருந்து திரும்பி வாங்கிப் போகும் அந்தத் தாய்ப் பாசத்தை எப்படி மறந்தேன்! மன்னி தூங்குகிறார் எனத் தொலைக்காட்சிப் பெட்டியை அணைக்கும் அந்த மைத்துனன், மன்னிக்குப் பிடிக்கும் என்று ஸ்டூல் போட்டு ஏறி முல்லை மொக்குகளைப் பறித்து நான் அலுவலகம் புறப்படும் முன்னால் கட்டித் தரும் அந்த நாத்தனார் — இவர்களை வேண்டாதவர்களாக நினைக்க எப்படி மனம் வந்தது? . நாணயத்தைப் போல் எல்லாவற்றிற்கும் இரண்டு பக்கம் உண்டு என்பதை ஏன் எண்ணாமல் போனேன்!

எல்லாவற்றுக்கும் மேலாக — என்னவர்... பெருமையாக மறுபடியும் சொல்கிறேன் — என்னுடையவர் —

எனக்காக எத்தனை பெரிய வாய்ப்பை உதறியிருக்கிறார்..! தன் முன்னேற்றம்தான் முக்கியம் என எல்லாவற்றையும் அவர் உதறி விட்டுப் போயிருக்கலாமே! ஏன் போகவில்லை.. போகாமலிருந்து விட்டு, "உன்னால்தான் எல்லாமே நாசமாகப் போயிற்று!" எனச் சபித்தாரா... இல்லையே...!

சே..! யமுனா வீட்டுக்காரர் சொன்னது போல் நான் எத்தனை பாக்கியம் செய்திருக்க வேண்டும் — இப்படி — வித்தியாசமான ஒரு கணவரைப் பெற..

வீடு திரும்பியவள் படுக்கப் போகும் போது மணி பத்தரை.

"பார்ட்டி எல்லாம் நன்றாக நடந்ததா?" எனக் கேட்டார்.

"உம்" என்றேன்.

எப்படி விஷயத்தை ஆரம்பிப்பது? உம், பீடிகை எல்லாம் எதற்கு..

"நாளைக்கு ஆபீஸ் போனதும் முதல் காரியமாக நீங்கள் ஒரு காரியம் செய்கிறீர்கள். பம்பாய்க் கம்பெனியில் வேலைக்குச் சேர விருப்பம் என எழுதிக் கொடுக்கப் போகிறீர்கள்."

"பம்பாய்க் கம்பெனியா?" என மழுப்பப் பார்த்தார்.

"சும்மா மறைக்காதீர்கள். யமுனா வீட்டுக்காரர் எல்லாவற்றையும் என்னிடம் சொன்னார்."

"ஆமாம். வேறே வேலை இல்லை. பணத்துக்காக உங்களை எல்லாம் விட்டு விட்டு எங்கேயோ போய்..."

"பணம் பெரிது இல்லை. ஆனால், உங்கள் வளர்ச்சி. உங்கள் முன்னேற்றம் முக்கியம் இல்லையா? குடத்து விளக்காக இல்லாமல் கோபுர விளக்காக ஆக வேண்டாமா?"

"கீதா... நான் யோசித்துப் பார்த்தேன்.. உன்னால் ஆபீஸையும் பார்த்துக் கொண்டு — நான் இல்லாமல் வீட்டு வேலைகளையும் கவனித்துக் கொண்டு."

"முடியும்.. நம்பிக்கை இருக்கிறது. யாருக்குச் செய்யப் போகிறேன்? என் வீட்டுக்காக... என் மனிதர்களுக்காக."

"கீதா... இதைப் பற்றி மெதுவாக — சாவதானமாக...."

"இல்லை, எனக்கு இப்போது ஒரு முடிவு தெரிந்தாக வேண்டும். 'எஸ்' இல்லை 'நோ'. 'நோ' என்றால் நாளைக் காலை நான் என் வேலையை ராஜினாமா செய்வேன்."

"'எஸ்' என்றால்...?"

"எழுந்து போய் விளக்கை அணைப்பேன்!" என்றேன்


நோயாளி:அட, ஆமாம் டாக்டர்!.... எப்படிக் கண்டு பிடிச்சீங்க?
டாக்டர்:எனக்கும் இதே மாதிரிதானிருக்கு! வாங்க ரெண்டு பேருமா போயி நல்ல டாக்டர்கிட்டே ட்ரீட்மெண்ட் எடுத்துக்குவோம்!

— வி. சுந்தரராமன்.



மே தினம் தொழிலாளர் திருநாள் மட்டுமல்ல... இந்த தினத்தன்று, ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் இளைஞர்கள் தங்கள் காதலிகளுக்கு மலர்ச் செண்டுகளை வழங்குவதும், திருமணங்களை நிச்சயித்துக் கொள்வதும் வழக்கம்.

தொழிலாளர் திருநாள்: விழுமுறை எதற்கு?



ரஷ்யாவின் மே தினக் கொண்டாட்டங்கள் பிரசித்தி பெற்றவை. (வண்ணப் படம்). உழைப்பாளர் தினமான அந்நாள் ஒரு சுபமுகூர்த்த நாளாகவே கருதப்படுகிறது. அற்புதமாக அலங்கரிக்கப்பட்ட மாஸ்கோ செஞ்சதுக்கத்தில்மேதினச்சிறப்பு ஊர்வலம் நடைபெறுவதோடு அன்று பல விருந்துகளும் திருமணங்களும் கூட நடைபெறுகின்றன. உலக அமைதியையும் சகோதரத்துவத்தையும் வளர்த்து எதிர்காலத் தலைமுறைகளின் பாதுகாப்புக்குப் பாடுபடுவதே இவ்வாண்டு மேதினப்பிரதிக்ஞையாக ரஷ்ய நாட்டில் ஏற்கப்பட்டுள்ளது:

ஆனால், உழைப்பாளர் தினக் கொண்டாட்டங்களுக்கு வித்திட்ட சம்பவம் நடந்தது அமெரிக்காவில்தான். சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன், யுரையா ஸ்டீஃபன்ஸ் என்ற அமெரிக்கர், 'னைட்ஸ் ஆஃப் லேபர்' என்ற உழைப்பாளர் அமைப்பைத் தோற்றுவித்தார். இந்த அமைப்பு வளர்ந்து, உரிமைகளுக்காகப் போராடத் தொடங்கியது.

1886—ஆம் ஆண்டு, மே மாதம் முதல் தேதியன்று வாஷிங்டனில் **Convention of the Federation of Traders** என்ற கூட்டத்தில், உழைப்பாளிகளுக்கு எட்டு மணி நேர வேலைத் திட்டத்தைச் சட்டமாக்கக் கோரித் தீர்மானம் இயற்றிய போது. இதை வலியுறுத்த சிகாகோ நகரத்தின் ஹே மார்க்கெட் சதுக்கத்தில், மே நான்காம் தேதியன்று ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தின் போது காவல் துறைக்கும் உழைப்பாளர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டு ஏராளமான ரத்தம் சிந்தப்பட்டது.

இதற்கு மூன்றாண்டுகள் கழித்து, 1889—இல், பாரீஸில், உலக சோஷலிஸ்ட் கட்சிகள் ஒன்று கூடி, அமெரிக்கா முன்மொழிந்த எட்டு மணி நேர வேலைத் திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தன. அடுத்த ஆண்டு முதல் மே ஒன்றாம் தேதி, உலகெங்கிலும் உழைப்பாளர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் நாளாக — விடுமுறை தினமாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் மே முதல் தேதியைத் தொன்று தொட்டே திருவிழாவாகக் கொண்டாடி வருகின்றனர். கடும் பனிக்காலம் முடிவுற்று வேனிற் காலம் தொடங்கும் நேரம் அது என்பதால் மலர் தேவதைக்குப் புனிதமான நாளாக அந்நாள் கொண்டாடப்படுகிறது. இளைஞர்கள் தங்கள் காதலிகளுக்கு மலர்ச் செண்டுகளை வழங்குவதும் திருமணங்களை நிச்சயித்துக் கொள்வதும் வழக்கம். ஊரின் மையத்தில் 'மே போல்' என்ற கொடிக் கம்பத்தை நட்டு அதில் வண்ண ரிப்பன்களைத் தொங்கவிட்டுக் குழந்தைகள் பின்னல் கோலாட்டம் போல் பாடிக் கொண்டே சுற்றி வருவார்கள். மிக அழகான யுவதி 'மே அரசி'யாகப் பட்டம் சூட்டப்படுகிறாள்.

ஃப்ரான்ஸில் அன்னை மேரிக்குப் புனிதமான தினமாக இந்நாள் கருதப்படுகிறது.



இப்பொழுது **ஸெரிலாக்**®

நன்மைகள் அடங்கிய காய்கறிகளுடன்





உங்கள் குழந்தைக்கு ஸெரிலாக் அனுகூலம் அளிக்க இன்னுமோர் வழி



இதோ புதிய ஸெரிலாக் வெஜிடேபிள்–கேரட்டு மற்றும் டொமேட்டோவின் நன்மைகள் நிறைந்தது. இப்பொழுது நீங்கள் குழந்தையின் வளரும் ருசிக்கேற்ப வெவ்வேறு விதத்தில் அளிக்கலாம்.

ஸெரிலாக் வெஜிடேபிள்லில் எல்லா ஸெரிலாக் அனுகூலங்களும் அடங்கியுள்ளது–ஒவ்வொரு ஊட்டத்திலும் முழுமையான போஷாக்கு, நற்சுவை மற்றும் உடனடி தயாரிக்கும் வசதி ஆகிய எல்லா அனுகூலங்களும் நிறைந்தது.

நான்கு மாதங்களிலிருந்து உங்கள் குழந்தைக்கு பாலுடன் கூட திட உணவும் தேவை. இதுவே அவனுக்கு ஸெரிலாக் அனுகூலங்களை புகட்ட உகந்த வேளை. நான்கு மாதங்களிலிருந்து ஸெரிலாக் வீட் கொடுக்க ஆரம்பியுங்கள். ஆறு மாதங்களிலிருந்து புதிய ஸெரிலாக் வெஜிடேபிள் அல்லது ஸெரிலாக் ஆப்பிள் அல்லது ஸெரிலாக் ஆரஞ்சு–உங்கள் விருப்பத்திற்கு ஏற்றபடி கொடுங்கள்.

சுகாதாரமான முறையில் உணவு தயாரிக்கவும், உங்கள் குழந்தைக்கு சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும், டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தவறு செய்து பின்பற்றுங்கள்.

RK SWAMY/FSL/5463 TAM

ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

Nestlé



அத்தியாயம் 39
''விபத்து வருகிறது!''

பழுவேட்டரையர் சிரித்தார். நந்தினியின் வார்த்தையைக் கேட்டுப் பரிகாசமாகச் சிரிப்பதாய் எண்ணிக் கொண்டு இலேசாகத் தான் சிரித்தார். அந்தச் சிரிப்பின் ஒலியினால் அந்த அறையும் அதிலிருந்த சகல பொருள்களும் நடுநடுங்கின.

தம்மை அவமதித்தவர்களை நந்தினி தன் கையினாலேயே கத்தி எடுத்துக் கொன்று விடுவதாகக் கூறியதைக் கேட்டபோது அவருடைய உள்ளத்தில் ஒரு பெருமிதம் உண்டாயிற்று. தம்முடைய மரியாதையைப் பாதுகாப்பதில் நந்தினிக்கு அவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதை அறிந்ததில் பழுவேட்டரையருக்கு இறும்பூது ஏற்பட்டது. அதே தோரணையில் அவள் மேலும் பேசிக் கேட்க வேண்டுமென்ற ஆசை அவர் மனத்தில் ஒரு பக்கம் பெருகியது. மற்றொரு பக்கத்தில் அவள் அம்மாதிரியெல்லாம் பேசுவதைத் தாம் விரும்பவில்லை என்று காட்டிக் கொள்ளவும் ஆசைப்பட்டார்.

''ஐயா! ஏன் சிரிக்கிறீர்கள்! என் வார்த்தையில் அவநம்பிக்கையினால் சிரிக்கிறீர்களா?'' என்று நந்தினி கேட்டாள்.

''தேவி! மந்தார மலரின் இதழைப் போல் மென்மையான உன் கையினால் கத்தியை எப்படி எடுப்பாய் என்று எண்ணிச் சிரித்தேன். மேலும் நான் ஒருவன் இரண்டு நீண்ட கைகளை வைத்துக்கொண்டு உயிரோடிருக்கும்போது......''

''ஐயா! தங்கள் கரங்களின் பெருமையையும் வலிமையையும் நான் அறிவேன். யானைத் துதிக்கையையொத்த நீண்ட கைகள். இந்திரனுடைய வஜ்ராயுதத்தைப் போன்ற வலிமையுள்ள கைகள். போர்க்களத்தில் ஆயிரமாயிரம் பகைவர்களை வெட்டி வீழ்த்திய கைகள். சோழ சக்கரவர்த்திகளின் சிரத்தில் மணி மகுடத்தை வைத்து நிலைநாட்டி வரும் கைகள். ஆனாலும் அதையெல்லாம் இன்று நினைத்துப் பார்ப்பாரில்லை. நேற்றுப் பிறந்த பிள்ளைகள் தங்களைக் 'கிழடு' என்று சொல்லி ஏளனம் செய்யும் காலம்

அமரர் கல்கி

வந்துவிட்டது. தாங்களோ மந்திரத்தால் கட்டுண்ட சர்ப்பராஜனைப் போல் சோழ குலத்தாரிடம் கொண்ட பக்திக்குக் கட்டுப்பட்டுச் சும்மா இருக்க வேண்டியிருக்கிறது. என்னுடைய கரங்கள் வளையல் அணிந்த மென்மையான கரங்கள்தான். மலர் எடுத்து மாலை கட்டுவதற்கு மட்டுமே தகுதியுள்ள கைகள்தான். ஆனாலும் வீராதி வீரராகிய தங்களை அக்கினி சாட்சியாகக் கைப்பிடித்த காரணத்தினால் எனது கைகளுக்கும் சிறிது சக்தி ஏற்பட்டிருக்கிறது. என் கற்பைக் காத்துக் கொள்வதற்கும் என் கணவரின் மரியாதையை நிலை நிறுத்துவதற்கும் அவசியம் ஏற்படுமானால் என் கைகளுக்கும் கத்தி எடுக்கும் வலிமை உண்டாகிவிடும். இதோ பாருங்கள்...!'' என்று நந்தினி கூறிவிட்டு, மஞ்சத்துக்கு அடியிலிருந்த பெட்டியை வெளிப்புறமாக நகர்த்தினாள். பெட்டியைத் திறந்து அதன் மேற்புறத்தில் கிடந்த ஆடைகளை அப்புறப்படுத்தினாள். அடியில் தகதகவென்று பிரகாசித்துக் கொண்டிருந்த நீண்ட வாளை ஒரு கையினால் அலட்சியமாக எடுத்துத் தலைக்கு மேலே தூக்கிப் பிடித்தாள்.

பழுவேட்டரையர் அதைப் பார்த்த வண்ணமாகச் சிறிது நேரம் பிரமித்துப் போய் நின்றார். பின்னர், ''இந்தப் பெட்டிக்குள்ளே இந்த வாள் எத்தனை காலமாக இருக்கிறது? உன் ஆடை ஆபரணங்களை வைத்திருப்பதாகவல்லவோ நினைத்தேன்?'' என்றார்.

நந்தினி வாளைப் பெட்டியில் திரும்ப வைத்துவிட்டு, ''ஆம்; என் ஆடை ஆபரணங்களை இந்தப் பெட்டியிலேதான் வைத்திருக்கிறேன். என் ஆபரணங்களுக்குள்ளே மிக முக்கியமான ஆபரணம் இந்த வாள். என் கற்பையும் என் கணவருடைய கௌரவத்தையும் பாதுகாப்பதற்குரியது'' என்றாள்.

''ஆனால் இதை நீ உபயோகப்படுத்துவதற்கு அவசியம் ஒன்றும் ஏற்படப் போவதில்லை; நான் ஒருவன் உயிரோடிருக்கும் வரையில்!''

''அதனாலேதான் இந்த வாளை நான் வெளியில் எடுப்பதில்லை. ஈழ நாட்டிலிருந்து வேங்கி நாடு வரையில் சோழ ராஜ்யத்தைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் தங்கள் தோள் வலிமை தங்கள் கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியாதா? அல்லது பேதையாகிய என்னைத்தான் பாதுகாக்க முடியாதா? என்றாலும், முக்கியமான, ராஜரீகமான காரியங்களில் ஈடுபட்டிருக்கும் தாங்கள் எப்போதும் என்னைக் கட்டிக் காத்துக் கொண்டிருக்க முடியாது. தங்களைப் பிரிந்திருக்கும் நேரங்களில் என்னை நான் பாதுகாத்துக் கொள்ள ஆயத்தமாய் இருக்க வேண்டும் அல்லவா?''

''தேவி! அதற்கு அவசியம் என்ன? போனது போகட்டும். இனி நான் உன்னைப் பிரிந்திருக்கப் போவதே இல்லை....''

''ஐயா! என்னுடைய விருப்பமும் அதுதான். ஆனால் இந்த ஒரு தடவை மட்டும் தாங்கள் என்னைப் பிரிந்து தஞ்சைபுரிக்குப் போய் வாருங்கள்.....''

''இது என்ன பிடிவாதம்? எதற்காக இந்தத் தடவை மட்டும் நான் உன்னை இங்கே விட்டுவிட்டுப் போக வேண்டும்?'' என்று பழுவேட்டரையர் கேட்ட போது அவருடைய புருவங்கள் நெரிந்தன.

''சுவாமி! அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. என்னை நீங்கள் இப்போது தங்களுடன் அழைத்துப் போனால் இங்குள்ள மூடர்கள் மேலும் நம்மைக் குறித்துப் பரிகசித்துச் சிரிப்பார்கள். 'கிழவருக்கு இளையராணியிடம் அவ்வளவு நம்பிக்கை!' என்று சொல்லுவார்கள். அதை நினைத்தாலே எனக்கு இரத்தம் கொதிக்கிறது. மற்றொரு காரணம், இன்னும் முக்கியமானது. சம்புவரையரைத் தங்களுடைய அத்தியந்த சிநேகிதர் என்று இத்தனை காலமும் தாங்கள் சொல்லி வந்தீர்கள்; நம்பியும் வந்தீர்கள். ஆனால் இளவரசர் வந்ததிலிருந்து அவருடைய பேச்சிலும் நடவடிக்கைகளிலும் ஏற்பட்டிருக்கும் மாறுதலைக் கவனித்தீர்களா? தாங்கள் கவனிக்காவிட்டாலும்



நான் கவனித்துக் கொண்டு வருகிறேன்.....''

''நானும் அதைக் கவனித்துத்தான் வருகிறேன். அந்த மாறுதலுக்குக் காரணம் என்னவாயிருக்குமென்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.....''

''தாங்கள் கபடமற்ற உள்ள முடையவர்; ஆகையால் ஆச்சரியப்படுகிறீர்கள். எனக்கு அதில் ஆச்சரியம் இல்லை. மனிதர்களுடைய பேராசை இயல்புதான் சம்புவரையரின் மாறுதலுக்குக் காரணம். இளவரசர் ஆதித்த கரிகாலர் பெண்களை முகமெடுத்தே பார்ப்பதில்லையென்றும், கலியாணமே செய்து கொள்ளப் போவதில்லையென்றும் வதந்தியாயிருந்தது. இங்கு அவர் வந்ததிலிருந்து அதற்கு நேர்மாறாக நடந்து வருவதைப் பார்த்திருப்பீர்கள். பெண்கள் இருக்குமிடத்துக்கு அடிக்கடி வருகிறார். கொஞ்சிக் கொஞ்சிப் பேசுகிறார். இதற்கெல்லாம் காரணம் சம்புவரையர் மகள் மணிமேகலை மீது அவருடைய மனம் சென்றிருப்பதுதான். 'மணிமேகலையை வேட்டையாடுவதற்கு அழைத்துப் போகலாமா?' என்று கூடக் கரிகாலர் கேட்டார் அல்லவா? இது சம்புவரையருக்கும் தெரிந்திருக்கிறது. ஆகையால் பழைய ஏற்பாடுகளையெல்லாம் அவர் மறந்து விட்டார். தம் அருமை மகள் தஞ்சாவூர்த் தங்கச் சிங்காதனத்தில் சக்கரவர்த்தினியாக வீற்றிருக்கப் போவது பற்றிக் கனவு காணத் தொடங்கி விட்டார்.....''

''ஆமாம்; நீ சொல்வதுதான் காரணமாயிருக்க வேண்டும். சம்புவரையன் இத்தகைய நீச குணம் படைத்தவன் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன்புதான் இதே மாளிகையில் மதுராந்தகரைத் தஞ்சைச் சிம்மாதனத்தில் ஏற்றி வைப்பதாக எல்லாரும் கூடிச் சபதம் செய்தோம். சிச்சீ! இப்படிப் பேச்சுத் தவறுகிறவனும் ஒரு மனிதனா?'' என்று பழுவேட்டரையர் சீறினார்.

''சுவாமி! அதனாலேதான் நான் தங்களுடன் வரவில்லை என்று சொல்கிறேன். தாங்கள் இல்லாத சமயத்தில் இவர்கள் இங்கே என்ன சதி செய்கிறார்கள் என்பதைக் கவனித்துக் கொள்வேன். ஏதேனும் இவர்கள் சூழ்ச்சி செய்தால் அது பலிக்காமற் செய்ய வழி தேடுவேன்.''

''நந்தினி! இதிலேயெல்லாம் நீ எதற்காகப் பிரவேசிக்க வேண்டும்?''

''கணவர் சிரத்தை கொண்டுள்ள காரியத்தில் மனைவிக்கும் சிரத்தை இருக்க வேண்டாமா? 'வாழ்க்கைத் துணைவி' என்று பிறகு எதற்காக எங்களைச் சொல்கிறது?''

''என்ன இருந்தாலும் இந்த மூர்க்கர்களுக்கும் நீசர்களுக்கும் நடுவில் உன்னைத் துணையின்றி விட்டு விட்டு நான் போகிறதா? அது எனக்குச் சிறிதும் சம்மதமாயில்லையே?''

''எனக்கு இங்கே துணையில்லாமற் போகவில்லை. மணிமேகலை இருக்கிறாள். எனக்காக அந்தப் பெண் என்ன வேண்டுமானாலும் செய்வாள்.....''

''அது உண்மைதான். நானும் கவனித்தேன். உன்னுடைய மோகன சக்தி அவளை உன் அடிமையாக்கியிருக்கிறது. ஆனாலும் அது எவ்வளவு தூரம் நிலைத்திருக்கும்? ஆதித்த கரிகாலன் சிங்காதனத்தில் ஏறி அந்தப் பெண்ணைச் சக்கரவர்த்தினியாக்கிக் கொள்ளப் போவதாக ஆசை காட்டினால்.....''

''ஐயா! அது விஷயத்தில் தங்களுக்குச் சிறிதும் சந்தேகம் வேண்டியதில்லை. மணிமேகலை என் கருத்துக்கு மாறாகத் தேவலோகத்து இந்திராணி பதவியையும் ஏற்றுக் கொள்ள மாட்டாள். 'கரிகாலனை இந்தக் கத்தியால் குத்திக் கொன்று விட்டு வா!' என்று நான் சொன்னால், உடனே அவ்விதம் செய்துவிட்டு வருவாள். என்னுடைய மோகன சக்தியைப் பற்றி அடிக்கடி தாங்களே சொல்வீர்கள் அல்லவா? அது மணிமேக



லையை முழுதும் ஆட்கொண்டிருக்கிறது! வேணுமானால், இப்போதே தங்களுக்கு அதை நிரூபித்துக் காட்டுகிறேன்!'' என்றாள் நந்தினி.

பழுவேட்டரையரின் உடம்பு படபடத்தது. அந்தக் கிழவர் உதடுகள் துடிக்க, தொண்டை அடைக்க, நாத் தழுதழுக்கக் கூறினார்:—''தேவி! உன்னுடைய சக்தியை நான் அறிவேன். ஆனால் கரிகாலன் விஷயத்தில் நீ அம்மாதிரி எதுவும் பரீட்சை பார்க்க வேண்டாம். அவன் அறியாச் சிறுவன். ஏதோ தெரியாமல் உளறினான் என்பதை நாம் பெரிது படுத்தக் கூடாது. கரிகாலன் மணிமேகலையை மணந்து கொள்ள இஷ்டப்பட்டால் நாம் அதற்குத் தடையாக இருக்க வேண்டாம்!''

''ஐயா! நாம் தடை செய்யாமலிருக்கலாம். ஆனால் விதி ஒன்று இருக்கிறதே! அதை யார் தடை செய்ய முடியும்? மணிமேகலை என்னிடம் பிரியங் கொண்டவளாயிருப்பது போல் நானும் அவளிடம் பாசம் வைத்திருக்கிறேன். என்கூடப் பிறந்த தங்கையைப் போல் அவளிடம் ஆசை கொண்டிருக்கிறேன். அற்பாயுளில்சாகப்போகிறவனுக்குஅவளை மணம் செய்து கொடுக்க நான் எப்படி இணங்குவேன்?'' என்றாள் நந்தினி. அப்போது அவளுடைய பார்வை எங்கேயோ தூரத்தில் நடக்கும் எதையோ பார்த்துக் கொண்டிருப்பது போலத் தோன்றியது.

பழுவேட்டரையர் இன்னும் அதிக பரபரப்பை அடைந்து கூறினார்:—
''நந்தினி! இது என்ன வார்த்தை?



சோழ சக்கரவர்த்தியின் வேளக்காரப் படைக்கு நான் ஒரு சமயம் தலைவனாயிருந்தேன். சக்கரவர்த்தியையும் அவருடைய சந்ததிகளையும் உயிரைக் கொடுத்தேனும் பாதுகாப்பதாகச் சத்தியம் செய்திருக்கிறேன்...''



''ஐயா! அந்தச் சத்தியத்தைத் தாங்கள் மீற வேண்டுமென்று நான் சொல்லவில்லையே?''

''உன்னால் கரிகாலனுக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்தாலும் அந்தக் குற்றம் என்னையே சாரும். சிறு பிள்ளையின் பரிகாசப் பேச்சைப் பொறுக்காமல் கிழவன் படுபாதகம் செய்து விட்டான் என்று உலகம் என்னை நிந்திக்கும். ஆறு தலைமுறையாக எங்கள் குலம் சோழர்களுக்குப் பாதுகாப்பாக இருந்து எடுத்திருக்கும் நல்ல பெயர் நாசமாகும்....''

''அப்படியானால் தாங்கள் இந்த ஊரை விட்டு உடனே போக வேண்டியது மிகவும் அவசியம்!'' என்று நந்தினி மர்மம் நிறைந்த குரலில் கூறினாள்.

''எதனால் அவ்விதம் சொல்லுகிறாய்?'' என்று பழுவேட்டரையர் கேட்டார்.



''தங்களிடம் எப்படிச் சொல்வதென்று தயங்கிக் கொண்டிருந்தேன். இப்போது சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. துர்க்கா பரமேசுவரி எனக்குச் சில அபூர்வ சக்திகளை அளித்திருக்கிறாள். இது தங்களுக்கே தெரியும். சுந்தர சோழர் இளம் வயதில் ஸ்திரீ ஹத்தி தோஷத்துக்கு உள்ளானவர் என்பதை நான் என் மந்திர சக்தியினால் அறிந்தேன். அதைத் தங்களுக்கும் நிரூபித்துக் காட்டினேன். அதேபோல் ஆதித்த கரிகாலனுடைய இறுதிக் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் இப்போது என் அகக் கண்ணினால் காண்கிறேன். அது தங்கள் கையினாலும் நேரப் போவதில்லை; என் கையினாலும் நேரப் போவதில்லை. ஆனால் யமனுடைய பாசக் கயிறு அவனை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பது மட்டும் நிச்சயம். காட்டிலே வேட்டையாடப் போன இடத்திலே அவனுக்கு இறுதி நேரலாம்; அல்லது அரண்மனையில் படுத்திருக்கும் போதும் நேரலாம். புலி, கரடி முதலிய துஷ்ட மிருகங்களினால் நேரலாம்; அல்லது அவனுடைய சிநேகிதர்கள் விடும் அம்பு தவறி விழுந்தும் அவன் சாகலாம். அல்லது மென்மையான பெண்ணின் கரத்திலே பிடித்த கத்தியினால் குத்தப்பட்டும் அவனுக்கு மரணம் நேரலாம். ஆனால், ஐயா, அவனுடைய மரணம் தாங்கள் கைப்பிடித்து மணந்த என்னுடைய கரத்தினால் நேராது என்று தங்களுக்குச் சத்தியம் செய்து கொடுக்கிறேன். சாலையோரத்திலே அநாதையாக நின்ற என்னைத் தாங்கள் உலகறிய மணந்து




ஓல்டு ஸ்பைஸ் பாடி டால்க்-ஆண்மகனுக்கான

ஓல்டு ஸ்பைஸ்

ஆண்மகனின் அடையாளம்

பாடி டால்க். கிடைப்பவை ஒரிஜினல் மஸ்க்



து. காந்தமென கவர்ந்திழுக்கும் தன்மையது.



இளையராணி ஆக்கினீர்கள். அத்தகைய தங்களுக்கு என்னால் ஒரு பழியும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வேன். அதற்காகவே தாங்கள் இச்சமயம் இங்கு இருக்க வேண்டாம், போய் விடுங்கள் என்று வற்புறுத்திச் சொல்கிறேன். தாங்கள் இங்கு இருக்கும் சமயம் கரிகாலனுக்கு என்ன விதமான விபத்து நேர்ந்தாலும் உலகத்தார் தங்களை அத்துடன் சம்பந்தப் படுத்துவார்கள். அருள்மொழிவர்மனைக் கடல்கொண்டதற்குத் தங்கள் மீது பழி கூறவில்லையா? அம்மாதிரி இதற்கும் தங்கள் பேரில் குற்றம் சாட்டுவார்கள். தங்களால் விபத்து நேர்ந்ததென்று சொல்லா விட்டாலும் தாங்கள் ஏன் அதைத் தடுக்கவில்லை என்று கேட்பார்கள்! ஆனால் தங்களுடைய வஜ்ராயுதம் போன்ற கரங்களாலும் கரிகாலனுக்கு வரப்போகும் விபத்தைத் தடுக்க முடியாது. ஆகையால், தாங்கள் உடனே போய்விட வேண்டும். என்னைத் தங்களுடன் அழைத்துக் கொண்டு போனால், அதைப்பற்றியும் வீண் சந்தேகம் ஏற்படும். முன்னதாகத் தெரிந்திருந்தபடியினால் என்னையும் அழைத்துக் கொண்டு போய் விட்டதாகச் சொல்வார்கள். ஆகையால், தாங்கள் மட்டுமே போக வேண்டும். என்ன நேர்ந்தாலும், எப்படி நேர்ந்தாலும், அதனால் தங்களுக்கு அபகீர்த்தி எதுவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள நான் இங்கிருப்பேன். ஐயா! என்னிடம் அவ்வளவு நம்பிக்கை தங்களுக்கு உண்டா?'' என்று நந்தினி கேட்டுவிட்டுத் தன் கரிய பெரிய விழிகளால் பழுவேட்டரையரின் நெஞ்சை ஊடுருவிப் பார்ப்பவள்போலப் பார்த்தாள். பாவம்! அந்த வீரக் கிழவர் நந்தினியின் சொல்லம்பினால் பெரிதும் கலங்கிப் போயிருந்தார். அவளுடைய கண் அம்புக்கு முன்னால் கதிகலங்கிப் பணிந்தார்.

அத்தியாயம் 40
நீர் விளையாட்டு

இந்த வரலாறு நிகழ்ந்த காலத்துக்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்தில் மூவேந்தர்களைத் தவிரச் சிற்றரசர்கள் எழுவர் புகழ் பெற்று விளங்கினார்கள். அவர்களுக்கு 'வள்ளல்கள்' என்ற பட்டப் பெயரும் வழங்கி வந்தது. அந்த எழுவரில் ஒருவன் கொல்லி மலையின் தலைவனான ஓரி என்பவன். இவன் வில் வித்தையில் இணையில்லாத வீரன் என்று பெயர் பெற்றிருந்தான். இவன் தன் வலிய பெரிய வில்லை வளைத்து நாணேற்றி அம்பை விட்டானாயின், அது இராமபிரானுடைய அம்பு ஏழு மரங்களைத் தொளைத்தது போல் முதலில் ஒரு புலியைத் தொளைத்து, பிறகு ஒரு மானைத் தொளைத்து, பிறகு ஒரு பன்றியைத் தொளைத்து, பின்னர் ஒரு முயலைத் தொளைத்து, கடைசியில் ஒரு மரத்தையும் தொளைத்து விடுமாம். இவ்வாறு புலவர்களால் அவனுடைய வில் வித்தைத் திறன் பாடப் பெற்றிருந்தது. அதிலிருந்து அவனை 'வல்வில் ஓரி' என்று குறிப்பிடுவதும் வழக்கமாயிற்று.

கொல்லிமலை வல்வில் ஓரியின் மீது, அந்நாளில் வலிமை பெற்ற வேந்தனாக விளங்கிய சேரன் கோபம் கொண்டான். அவனைத் தாக்குவதற்குத் திருக்கோவலூர்த் தலைவன் மலையமான் திருமுடிக் காரியின் துணையை நாடினான். காரியின் வீரம் ஓரியின் வீரத்துக்குக் குறைந்ததன்று. அத்துடன் மலையமான் காரிக்குப் படை பலம் அதிகமாயிருந்தது. மலையமான், கொல்லி மலைமீது படை எடுத்துச் சென்று வல்வில் ஓரியைக் கொன்று அவனுடைய மலைக் கோட்டையையும் நிர்மூலமாக்கினான்.

அதே காலத்தில் கொல்லி மலையை அடுத்திருந்த நிலப்பகுதியில் அதிகமான் நெடுமானஞ்சி என்னும் குறு

நில மன்னன் அரசு புரிந்து வந்தான். வல்வில் ஓரியுடன் அவன் உறவு பூண்டவன். வல்வில் ஓரியைக் கொன்ற மலையமான் காரியை அவன் பழி வாங்க விரும்பினான். தன்னால் மட்டும் அது முடியாதென்று எண்ணிச் சோழ மன்னனாகிய கிள்ளி வளவனின் உதவியை நாடினான். மலையமானின் வலிமை அதிகமாகி வருவது பற்றியும் அவன் சேரனோடு தோழமை கொண்டிருப்பது பற்றியும் கிள்ளி வளவனுக்குக் கோபம் இருந்தது. எனவே சோழன் கிள்ளிவளவனும் தகடூர் அதிகமானும் சேர்ந்து திருக்கோவலூர் மலையமானைத் தாக்கினார்கள். மலையமான் போர்க்களத்தில் வீர சொர்க்கம் எய்தினான். மலையமானுடைய இரு இளம் புதல்வர்களைச் சோழ நாட்டு வீரர்கள் சிறைப்பிடித்து வந்தார்கள். மலையமானுடைய வம்சத்தையே அழித்து விட வேண்டுமென்று கருதியிருந்த அதிகமானும் கிள்ளிவளவனும் அந்தக் குழந்தைகளைப் பூமியில் கழுத்தளவு புதைத்து யானைக் காலால் இடறிக் கொல்லும்படி கட்டளையிட்டார்கள். மலையாமானுடைய வள்ளன்மையை அறிந்து, அதனால் பயன் துய்த்திருந்த புலவர் ஒருவர் அச்சமயம் அங்கு வந்து சேர்ந்தார். மலையமானுடைய குழந்தைகளின் உயிருக்காகச் சோழ மன்னனிடம் மன்றாடினார்.

"வேந்தே! அதோ பார்! கழுத்து வரை புதைக்கப்பட்டிருக்கும் குழந்தைகளின் முகங்களைப் பார்! அந்த முகங்களில் தவழும் புன்னகையைப் பார்! தங்களைக் காலால் இடறிக் கொல்லப் போகிற யானையைப் பார்த்து, அதன் துதிக்கை ஆடுவதைப் பார்த்து, அக்குழந்தைகள் ஏதோ வேடிக்கை என்று எண்ணிச் சிரிக்கின்றன! இத்தகைய குற்றமற்ற குழந்தைகளையா கொல்லப் போகிறாய்? அந்தக் குழந்தைகள் என்ன பாவம் செய்தன? தகப்பன் செய்த குற்றத்துக்காகக் குழந்தைகளைத் தண்டிக்கலாமா?" என்றார் புலவர்.

அதைக் கேட்ட சோழன் மனமாற்றம் அடைந்தான். தன் கட்டளையை உடனே மாற்றினான். குழந்தைகளைத் தரையிலிருந்து எடுக்கச் செய்தான். தன் அரண்மனையிலேயே வளர்க்கவும் செய்தான். வயது வந்த பிறகு அவர்களில் மூத்த பிள்ளைக்குத் திருக்கோவலூர் அரசையும் திரும்பக் கொடுத்தான்.

இது முதல் நூற்றாண்டு நூற்றாண்டாகச் சோழகுலத்து மன்னர்களிடம் திருக்கோவலூர் மலையமான் வம்சத்தினர் நன்றியுடன் நட்புரிமை கொண்டிருந்தார்கள்.

அந்த உறவு சுந்தர சோழர் காலம் வரையில் நீடித்திருந்தது. மலையமான் மகளாகிய வானமாதேவியைச் சுந்தர சோழர் மணந்து பட்ட மகிஷியாகக் கொண்டிருந்தார்.

கொல்லிமலை வல்வில் ஓரி — தகடூர் அதிகமான் இவர்களுடைய வம்சத்தினர் அழிந்து பட்டனர். ஆயினும் அவர்களுடைய கிளை வம்சத்தில் தாங்கள் தோன்றியதாகக் கடம்பூர் சம்புவரையர்கள் சொல்லிக் கொண்டார்கள். அவர்களுடைய முன்னோர்கள் திருக்கோவலூர் மலையமான் வம்சத்தாரிடம் கொண்டிருந்த பகைமையையும் சம்புவரையர்கள் மறக்கவில்லை. ஆதலின் மலையமானுடைய பேரப் பிள்ளை சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக முடி சூடுவதை அவர்கள் விரும்பாதது இயற்கையே அல்லவா? ஆதித்த கரிகாலனுடைய அகம்பாவமும், சிற்றரசர்களைச் சிறிதும் மதியாமல் அவன் நடந்து கொண்ட விதமும் சம்புவரையர்களின் வெறுப்பு வளருவதற்கு மேலும் காரணம் தந்தது. ஆகையினாலேயே கண்டராதித்தருடைய குமாரன் மதுராந்தகனைத் தஞ்சைச் சிம்மாதனத்தில் ஏற்றி



வைக்கும் முயற்சியில் சம்புவரையர்கள் ஊக்கமாக ஈடுபட்டார்கள்.

ஆனால் கரிகாலன் கடம்பூருக்கு வந்த நாளிலிருந்து பெரிய சம்புவரையரின் உள்ளம் சிறிது சிறிதாக மாறுதல் அடையலாயிற்று. அவருடைய செல்வப் புதல்வியாகிய மணிமேகலையே அவருடைய மனமாறுதலுக்குக் காரணமாயிருந்தாள். ஆதித்த கரிகாலனுடைய உள்ளத்தை மணிமேகலை கவர்ந்து விட்டாள் என்பதற்குப் பல அறிகுறிகள் தென்பட்டன. பெண்களைக் கண்ணெடுத்தும் பாராதவன் என்றும், பிரம்மச்சாரியாகவே காலத்தைக் கழிக்கப் போகிறான் என்றும் கரிகாலனைப் பற்றிப் பேசப்பட்டு வந்தது. அத்தகையவன் கடம்பூர் மாளிகைக்கு வந்ததிலிருந்து அடிக்கடி பெண்கள் இருக்கும் இடம் போவதும் அவர்களுடன் உல்லாசமாகப் பேசுவதுமாக இருந்தான். முக்கியமாக அவன் மணிமேகலையின் 'சூடிகை'யைப் பற்றி அடிக்கடி பாராட்டிப் பேசினான். கரிகாலன் வந்ததிலிருந்து மணிமேகலையும் ஒரே உற்சாகமாக இருந்தாள். அதற்குக் காரணம் அவளும் கரிகாலனிடம் பற்றுக் கொண்டதுதான் என்று பெரிய சம்புவரையர் கருதினார். அவர்கள் இருவருடைய குதூகலத்தையும் பார்த்துப் பார்த்துச் சம்புவரையரும் உற்சாகம் கொண்டார். கரிகாலன் மணிமேகலையை மணந்து கொண்டால் தம் செல்வத்திருமகள் சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினியாக விளங்குவாள்! அவளுக்குப் பிறக்கும் குழந்தையும் தஞ்சை சிங்காதனத்துக்கு உரியவனாவான்! இன்று திருக்கோவலூர் மலையமான் அடைந்திருக்கும் பெருமிதத்தை அப்போது தாமும் அடையலாம். அதற்கெல்லாம் தாமே எதற்காகத் தடையாக இருக்க வேண்டும்? தமது அருமைக் குமாரியின் ஏற்றத்துக்குத் தாமே ஏன் இடையூறு செய்ய வேண்டும்?

மதுராந்தகனுக்குத் தம் மகளையும் மணம் செய்விக்கலாம் என்ற யோசனை முன்னம் சம்புவரையருக்கு இருந்தது உண்மைதான். ஆனால் மதுராந்தகனுக்கு ஏற்கெனவே இரு மனைவியர் இருந்தனர். சின்னப் பழுவேட்டரையரின் மகளை அவன் மணந்திருந்ததுடன், அவளுக்கு ஓர் ஆண் மகவும் பிறந்திருந்தது. ஆகையால் மதுராந்தகன் சிங்காதனம் ஏறினால், பழுவேட்டரையரின் வம்சத்தினர்தான் பட்டத்துக்கு உரிமை பெறுவார்கள். மணிமேகலை தஞ்சை அரண்மனையில் உள்ள பல சேடிப் பெண்களில் தானும் ஒருத்தியாக வாழ வேண்டியிருக்கும்.

ஆனால் ஆதித்த கரிகாலனை மணிமேகலை மணம் செய்து கொண்டால் அவள்தான் பட்டமகிஷியாயிருப்பாள். அவளுக்குப் பிறக்கும் பிள்ளைக்கே சிங்காதனம் உரியதாகும்.

மதுராந்தகனுக்குப் பட்டம் சூட்டுவதென்பது பிரம்மப் பிரயத்தனமான காரியம். மக்கள் அதற்கு விரோதமாயிருப்பார்கள். மலையமானுடனும் கொடும்பாளூர் வேளானுடனும் போராட்டம் நடத்தித்தான் அதைச் சாதிக்க வேண்டியதாயிருக்கும். மதுராந்தகனுடைய அன்னையே அதற்குத் தடையாயிருக்கிறாள். இவ்வளவு தொல்லையான முயற்சியை எதற்காக மேற்கொள்ள வேண்டும்?

ஆதித்த கரிகாலனுக்கு முடி சூட்டுவதென்பது ஏற்கெனவே முடிவான காரியம். அதை நிறைவேற்றுவதில் எவ்வித சிரமமும் ஏற்படாது. பழுவேட்டரையர்களின் பிடிவாதந்தான் பெரிய இடையூறாயிருக்கும். அவர்களில் பெரிய கிழவனோ இளைய ராணியின் மோகத்தில் மூழ்கிக் கிடக்கிறான். இன்னும் எத்தனை நாளைக்கு அவன் உயிரோடிருப்பானோ, தெரியாது. இந்தக் கிழவனை நம்பி ஒரு பெரும் அபாயகரமான காரியத்தில் எதற்காகத் தலையிட வேண்டும்?

மதுராந்தகன் பக்கம் இருப்பதாகத் தாம் சபதம் செய்து கொடுத்திருப்

பது என்னமோ, உண்மைதான். அதனால் என்ன? சபதத்துக்குப் பங்கம் செய்யாமலே காரியத்தை முடிக்க வழியில்லாமலா போகிறது? மதுராந்தகன் ஓர் அப்பாவிப் பிள்ளை என்பது தெரிந்த விஷயந்தான். அவனைக் கொண்டே "எனக்கு இராஜ்யம் வேண்டாம்" என்று கூடச் சொல்லும்படி செய்து விடலாம். அல்லது அவனுடைய அன்னையின் சம்மதம் வேண்டும் என்று வற்புறுத்தினாலும் போதுமே!......

இவ்வாறெல்லாம் சம்புவரையரின் உள்ளம் சிந்திக்கத் தொடங்கியிருந்தது. ஆகையால் பழுவேட்டரையர் தஞ்சைக்குப் போகும் யோசனையை அவர் உற்சாகமாக ஆதரித்தார். அவர் இல்லாத சமயத்தில் கரிகாலனுடன் அந்தரங்கமாகப் பேசி அவனுடைய உள்ளத்தை நன்கு அறிந்து கொள்ளலாம் என்றும், பிறகு சமயோசிதம் போல் நடந்து கொள்ளலாம் என்றும் எண்ணினார். ஆதலின் பெரிய பழுவேட்டரையரை அவரே துரிதப்படுத்திப் பரிவாரங்களுடன் தஞ்சைக்கு அனுப்பி வைத்தார்.

பழுவேட்டரையர் பிரயாணப்பட்டுச் சென்ற பிறகு ஆதித்த கரிகாலனும் அவனுடைய தோழர்களும் வேட்டைக்குப் புறப்பட்டார்கள். அவர்களுடனே மணிமேகலையையும் மற்ற அந்தப்புரப் பெண்களையும் அனுப்பக் கூடச் சம்புவரையர் சித்தமாயிருந்தார். ஆனால் நடப்பதையெல்லாம் வேறு நோக்குடன் கவனித்து வந்த கந்தமாறன் அதை ஆட்சேபித்தான். கரிகாலன் மணிமேகலையிடம் காட்டிய சிரத்தையெல்லாம் நந்தினியை முன்னிட்டுத்தான் என்பதை அவன் உணர்ந்திருந்தான். இதனால் கரிகாலன் பேரில் அவனுடைய வெறுப்பு வளர்ந்திருந்தது. இதையெல்லாம் தந்தையிடம் விளக்கிச் சொல்லவும் முடியவில்லை. ஆகையால், "வேட்டையாடும் இடத்தில் பெண்களைக் கூட்டிக் கொண்டு போய் என்னத்தைச் செய்வது? இவர்கள் பத்திரமாயிருக்கிறார்களா என்று பார்ப்பதற்குத்தான் சரியாயிருக்கும். மேலும் இது ஐப்பசி மாதம். எந்த நிமிஷத்திலும் பெரு மழை தொடங்கலாம். ஏரிக் கரைக் காடெல்லாம் வெள்ளமாகி விடும். பெண்கள் திண்டாடிப் போவார்கள்!" என்று சொன்னான்.

அதன் பேரில் சம்புவரையரும் அந்த யோசனையைக் கைவிட்டு விட்டார். ஆதித்த கரிகாலன் தன் தோழர்களாகிய பார்த்திபேந்திரன், வந்தியத்தேவன், கந்தமாறன் இவர்களையும், மற்ற வேட்டைக்காரர்களையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றான்.

எல்லாரும் சென்ற பிறகு சம்புவரையர் மாளிகை வெறிச்சென்று இருந்தது. நந்தினி மணிமேகலையைப் பார்த்து, "புருஷர்கள் வீட்டில் இருக்கும்போது நமக்குத் தொல்லையாகத் தோன்றுகிறார்கள். ஆனால் அவர்கள் எங்கேயாவது போய் விட்டாலும் நமக்குச் சங்கடமாகத்தான் இருக்கிறது. பரிகசித்துச் சிரிப்பதற்குக் கூட விஷயம் கிடைப்பதில்லை!" என்றாள்.

"ஆம், அக்கா! நாம் கூட வேட்டைக்குப் போயிருக்கலாம். எனக்கு வேட்டை பார்க்கப் பிரியம் அதிகம். என் தந்தையோடும் தமையனோடும் சில சமயம் போவதுண்டு. ஆனால் இன்றைக்கு என்னமோ கந்தமாறன் பிடிவாதமாகத் தடை செய்து விட்டான். ஒருவேளை உங்களுக்கு வேட்டை பிடிக்காது என்று அவ்விதம் தடை செய்தானோ, என்னமோ?" என்றாள் மணிமேகலை.

"ஆமாம்; எனக்கு வேட்டை அவ்வளவாகப் பிடிப்பதில்லைதான். இரத்தத்தைக் கண்டாலே எனக்குத் திகிலாயிருக்கும். ஆனால் கந்தமாறன் அதற்காகச் சொல்லவில்லையடி! உன்னையும் உன் வீட்டு விருந்தாளிகளில் ஒருவரையும் பிரித்து வைப்பதற்காகவே அவ்விதம் அவன் தடை செய்து விட்டான்!" என்றாள் நந்தினி.

மணிமேகலையின் கன்னங்களில்

சுழிகள் காணப்பட்டன, சிறிது நேரம் தரையைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, "புருஷர்கள் எங்கேயாவது போய்த் தொலையட்டும், அக்கா! அவர்கள் சகவாசமே நமக்கு வேண்டாம். நாம் ஏரிக் கரை நீராழி மண்டபத்துக்குப் போய் நீர் விளையாடி விட்டு வரலாம்! வருகிறீர்களா?" என்றாள். நந்தினியும் அதற்குச் சம்மதிக்கவே தந்தையிடம் சொல்லி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மணிமேகலை செய்தாள்.

வீர நாராயண ஏரியின் கீழ்ப்புறத்தில் பெரிய கரையும் அதில் எழுபத்து நாலு மடவாய்களும் உண்டு என்பதைப் பார்த்திருக்கிறோமல்லவா? ஏரியின் மேற்புறத்தில் அத்தகைய பெரிய கரை கிடையாது. ஏரி நீரின் ஆழம் சிறிது சிறிதாகக் குறைந்து வந்து ஏரிக்கரை அங்கே சம தரையாக அமைந்திருந்தது. இன்னும் மேற்கே அடர்ந்த காடுகள் மண்டிக் கிடந்தன.

இவ்விதம் ஏரி நீர் குறைந்து சம தரையாகும் பிரதேசத்தில், ஆங்காங்கே சிறிய சிறிய தீவுகள் காணப்பட்டன. தீவுகளில் மரங்களும் செடி கொடிகளும் அடர்ந்து வளர்ந்திருந்தன. அத் தீவுகளில் ஒன்றின் கரையில் படித்துறையும் நீராழி மண்டபமும் அமைக்கப்பட்டிருந்தன. இங்கே கடம்பூர் சம்புவரையரின் அந்தப்புரத்துப் பெண்கள் நீராடுவதற்காகவும் உல்லாசமாகப் பொழுது போக்குவதற்காகவும் வருவது வழக்கம். அந்த இடத்துக்கு வந்து சேர வேண்டுமானால் இரண்டு காத தூரம் ஏரியைச் சுற்றிக் கொண்டு வர வேண்டும். அல்லது படகிலேறி ஏரியைக் கடந்து வரவேண்டும். இதனாலும் சம்புவரையர் வீட்டுப் பெண்கள் குளிக்குமிடம் என்று தெரிந்திருந்த படியாலும் அன்னிய மனிதர்கள் அங்கே வருவது கிடையாது.

நந்தினியும் மணிமேகலையும் படகிலேறிக் கொண்டு அந்தத் தீவுக்கு இப்போது வந்து சேர்ந்தார்கள். படகு ஓட்டத் தெரிந்த இரண்டு தோழிமார்கள் உடன் வந்தார்கள். சமையல் செய்வதற்கு வேண்டிய பண்டங்களையும் படகில் கொண்டு வந்தார்கள். நீராழி மண்டபப் படித்துறையை அடைந்ததும் தோழிப் பெண்கள் படகை விட்டிறங்கி மண்டபத்தில் சமையல் செய்யத் தொடங்கினார்கள்.

நந்தினியும் மணிமேகலையும் சிறிது நேரம் படித்துறையில் உட்கார்ந்து வம்பு பேசிக் கொண்டிருந்தார்கள். மணிமேகலை இயற்கை மதியூகமுள்ள பெண்; குறும்பில் பற்றுள்ளவள். அவள் பழுவேட்டரையர் பேசுவது போலவும், கரிகாலன், கந்தமாறன், பார்த்திபேந்திரன், வந்தியத்தேவன் ஆகியவர்கள் பேசுவது போலவும் பேசி நடித்துக் காட்டினாள். அதையெல்லாம் பார்த்தும் கேட்டும் நந்தினி கலீர் கலீர் என்று சிரித்துக் கொண்டிருந்தாள். ஆயினும் அவளுடைய கவனம் முழுதும் மணிமேகலையிடம் இல்லை என்பதும், அவள் மனம் அவ்வப்போது ஏதோ அந்தரங்க சிந்தனையில் ஈடு பட்டது என்பதும் வெளியாகி வந்தது.

திடீரென்று மணிமேகலை துள்ளிக் குதித்து எழுந்து நின்றாள். "அக்கா! வேட்டைக்கு நாம் போகவில்லை; ஆனால் வேட்டை நம்மைத் தேடி வந்திருக்கிறது!" என்று கூவிக்கொண்டே இடுப்பில் செருகியிருந்த கத்தியை எடுத்தாள்.

நந்தினியும் திடுக்கிட்டு எழுந்து மணிமேகலை பார்த்த திசையை நோக்கினாள். அங்கே சாய்ந்து படர்ந்திருந்த ஒரு பெரிய மரக் கிளையின் மீது சிறுத்தைப் புலி ஒன்று காணப்பட்டது. அந்தச் சிறுத்தை அவர்கள் மீது பாயலாமா, வேண்டாமா என்று யோசிப்பது போலப் பார்த்துக் கொண்டிருந்தது.

அதே சமயத்தில் சிறிது தூரத்தில் குதிரைகள் தண்ணீரில் இறங்கிப் பாய்ந்து வரும் சத்தமும் கேட்டது.

(தொடரும்)

அமரர் கல்கி

நினைவுச் சிறுகதைப் போட்டி-1989



முதல் பரிசு	ரூ.	1500
இரண்டாவது பரிசு	ரூ.	750
மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 375 வீதம்	ரூ.	750

ஆக மொத்தம் ரூ. 3000 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 125 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

○ கதைகள் சொந்தக் கற்பனை என்றும், இதற்கு முன் வேறு எந்த உருவிலும்பிரசுரமானதில்லைஎன்றும்உறுதிமொழி தேவை.

○ அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும்வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தர வேண்டும்.

○ நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: ஜூன் 15.

○ உறையின் மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.

○ பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால்தலை ஒட்டிய சுயவிலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.

○ கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

○ எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

○ சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

○ போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 6 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.

○ எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை — 600 032.


“கொஞ்சம் அட்ஜஸ்ட்
பண்ணிக்கக் கூடாதா...?”

''நான் துணி துவைக்கப் போறேன்'' என்றான் மணி.

''ஏதுடா நல்ல காரியம் எல்லாம் செய்யப் போறே!'' கேட்டான் முருகன்.

'' — பாவம், பேண்ட் சட்டை, தண்ணி பார்த்தே நாளாச்சு!''

அந்த அறையில் இரண்டு கட்டில்கள் போக, கால் வைக்க மட்டுமே இடம் இருந்தது. கட்டில் படுக்கை குப்பை போல் கிடந்தது. ஷெல்பில் திருச்செந்தூர் முருகன் படம், விபூதி பாக்கெட் இருந்தது. சஷ்டிக்குக் கொளுத்தி வைத்த ஊதுபத்தி அப்படியே இருந்தது. பேண்ட், சட்டைகள் இறைந்து கிடந்தன. அப்பாயிண்ட்மெண்ட் காலம் பார்த்த 'ஹிந்து' கிடந்தது. சிகரெட் துண்டுகள் கிடந்தன. அமலா காலண்டரில் சிரித்தாள்.

முருகனும், மணியும் அந்த அறையைப் பகிர்ந்து கொண்டனர். வீட்டைப் பிரிந்த ஏக்கமோ, ஒருவரை ஒருவர் பிடித்துப் போனதோ, படு அந்நியோன்யமாய்ப் பழகினர்.

மணி அழுக்கு மூட்டையுடன் நகர்ந்தான். முருகன் புத்தகம் படிக்க ஆரம்பித்தான்.

கொஞ்ச நேரத்தில் ஒரே சப்தம். முருகன் ஓடிப் போய்ப் பார்த்தான்.

''உங்கப்பன் வீட்டுத் தண்ணியாடா? நான் என் இஷ்டத்திற்குச் செலவழிப்பேன்.'' — மணி கத்திக் கொண்டிருந்தான். பக்கத்து ரூம்களிலுள்ள ஆட்களெல்லாம் வெளியே வந்தனர். மணி கவலையேயில்லாமல் சகட்டு மேனிக்குப் பேச ஆரம்பித்தான். பக்கத்து ரூம் சுரேஷ் ஏதோ பதிலுக்குப் பேசினான். முருகனுக்குப் புரிந்து போனது. சுரேஷ் ஏதோ சொல்ல, மணிக்குக் கோபம் வந்து விட்டிருக்கிறது.

மணியை இழுத்துக் கொண்டு ரூமிற்குப் போனான்.

''விடுறா எனக்கு வரத் தெரியும்.''

''என்னடா நடந்தது?''

''நான் துணி துவைச்சுக்கிட்டிருக்கேன்... 'இப்படி தண்ணி செலவழிச்சா, கிருஷ்ணா நதிநீர் வந்தால் கூட போதாது. கங்கையே வரணும்னு சொல்றான்'.''

மணி கொதிப்புடன் பேசிக் கொண்டேயிருந்தான். மணி இப்படித்தான். நமக்கு எப்போதாவது கோபம் வரும். அவனுக்கு எப்போதாவது போகும். துர்வாசர், விசுவாமித்திரர் என்று பெயர் வைத்திருக்க வேண்டும் அவனுக்கு.

அறைக்கு வந்த பிறகு மணி ரொம்ப நேரம் கொதிப்புடன் இருந்தான். முருகன் அவனைச் சமாதானப்படுத்தினான்; தண்ணீர் கொடுத்தான். ஃபேனைப் போட்டான். மணி படுத்துக் கொண்டே பேச ஆரம்பித்தான். அப்படியே தூங்கிப் போனான்.

மணி விழித்த போது, துணிகள் கொடியில் காய்ந்து கொண்டிருந்தன. படு கேஷுவலாகப் புத்தகம் படித்துக் கொண்டிருந்த முருகனைப் பார்த்தான் அவன்.

''நீயா துணி துவைத்துப் போட்டே?''

''ஆமா நீ பாட்டுக்குத் தூங்கிட்டே; துணி அனாவசியமாக ஊற வேண்டாமேன்னு நான்தான் துவைச்சுப் போட்டேன்.''

''தாங்க்ஸ்டா'' என்றான் மணி கம்மிய குரலில்.

''டேய் என்னடா! இதில் என்ன இருக்கு... ஆனா நீ தாங்க்ஸ் ஸாரி எக்ஸ்க்யூஸ் மீ போன்ற வார்த்தைகளை உபயோகிப்பது குறித்து சந்தோஷம்தான்.''

''என்ன கிண்டலா! எனக்கு மேனர்ஸ் கிடையாதுன்னு குத்திக் காட்டற நீ பெரிய...''

''சரி, சாரி! விட்டுடு!'' — முருகன் சிரித்தான்.

சுரேஷ் மெதுவாக அறைக்குள் எட்டிப் பார்த்துக் கேட்டான்:

''மணி வெளியே போயிருக்கானா?''

''ஆமாம் உள்ளே வா அவன் குணம் தான் தெரியுமில்லையா? நீ கொஞ்சம் அமைதியாகப் போனால் என்ன?''

''நான் என்ன பண்ணினேன்? எவ்வளவு நேரம்டா ஒருத்தன் துவைப்பான்...? நான் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். அவனோட உன்னைத் தவிர வேற யாரும் ஒத்துப் போக முடியாது! எப்படி உன்னால் மட்டும் முடியுது? அவனுக்குக் கோபம் வந்தால் கன்னாபின்னாவென்று பேசறானே?''

— பலர் கேட்கும் கேள்விதான் இது.

''அவன் எதையும் உணர்ந்து பேசறதில்லை கோபங்கறது தற்காலிகப் பைத்தியம்னு நீ படிச்சிருக்கிறியா? கோபப்படறவனைப் புரிஞ்சுக்கிடணுமே தவிர, வெறுக்கக் கூடாது.''

''உங்க இரண்டு பேருக்குமே சின்ன வயசிலே இருந்து பழக்கமா?''

''இல்லை, இங்க வந்த பிறகுதான். மணின்னு இல்லை. என்னால் யாரோடயும் அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் போக முடியும். கால அளவெல்லாம் அதிகம் தேவையில்லை. மனுஷனைப் புரிஞ்சுக்கிட்டா, எதுவுமே பிரச்சனையில்லை.''

''உன்னைத்தான் பாராட்டணும், வெரிகுட்! நான் வர்றேன்.''

சுரேஷ் கிளம்பினான். முருகன் பெருமையுடன் சிரித்துக் கொண்டான்.

மணி ஆபீஸ் அமைதியாக நடந்து கொண்டிருந்தது.

''மானேஜர் கூப்பிடறாரு'' பியூன் வந்து சொன்னான்.

மணி எழுந்து மானேஜர் ரூம் போனான்.

''இந்த ஆர்டர் போட்டது நீங்கதானா?''

''ஆமாம்!''

''இந்த கம்பெனியோட எந்தவிதமான ட்ரான்ஸாக்ஷனும் வேண்டாம்னு முடிவானது தெரியாதா?''

''எனக்குத் தெரியாது.''

பிருதிவிராஜ்

"இதையெல்லாம் தெரிஞ்சுக்கல் லேன்னா எப்படி ஒழுங்கா வேலை செய்ய முடியும்?"

மணிக்குக் கோபம் வந்தது.

"மிஸ்டர் முத்துசாமி... வார்த்தையை அளந்து பேசுங்க. இந்தக் கம்பெனியை ஓரங்கட்டறீங்கன்னு எனக்குத் தெரியும். ஆனால் சுத்தமாக ஆர்டரே கிடையாதுன்னு எனக்கு நிஜமாகவே தெரியாது. மேலும் ஆர்டர் உங்க கையெழுத்துக்காக டேபிள்ல இருக்கு. நீங்க கையெழுத்துப் போடாமே ஆர்டர் டெஸ்பாட்ச் ஆகாது."

"அட, நானே அவசரத்துல, நீங்க சரியா செய்திருப்பீங்கன்ற நம்பிக்கையோட, கவனிக்காம கையெழுத்துப் போட்டுட் டா.....?"

"கவனிக்காமல் கையெழுத்துப் போட எதுக்கு மானேஜர் போஸ்ட்?"

மணி வார்த்தைகளை விட்டான். மானே ஜர் முகம் மாறியது.

"ஒரு வாரம் சஸ்பெண்ட் பண்ணியிருக் காங்க."

மணி முருகனிடம் சொன்னான்.

"ஏண்டா இப்படி முட்டாளா இருக்கே!"

"ஆமா! நீ எப்பவும் என்னையே குறை சொல்லு...."

"ஆமாம்டா! கோபக்காரனைக் கோபப் பட வைத்தே தோற்கடிக்கலாம்."

"நான் ஒண்ணும் கோபக்காரனில்லை!" — மணி கோபப்பட்டான்.

"முட்டாள்தனமா நடந்து கொள்ளக் கூடாது. வீட்டோட நிலைமையை யோசிச் சுப் பாரு!"

"நீர் ஒண்ணும் அட்வைஸ் பண்ண வேண் டாம்."

"நான் சொல்லாம வேற யார் சொல்லு வா?"

— பேச்சு வளர்ந்தது. மணி கட்டுப்பாடு இழந்தான். முருகனை அறைந்தான். இரு வருமே திக் பிரமை பிடித்து நின்றார்கள். நிசப்தம் நிலவியது. மணி கோபமாய் வெளி யேறினான்.

முருகன் அமைதியாகப் படுத்தான். யோசித்துக் கொண்டே இருந்தான். அரை மணியில் எழுந்து, தாள் எடுத்து எழுதி னான்:

அன்புள்ள மணிக்கு,

நாம் இருவரும் பிரிய வேண்டிய சந்தர்ப் பம் வந்து விட்டதாகவே நான் கருதுகி றேன். இன்றைய சம்பவத்திற்குப் பிறகு நாம் நண்பர்களாய் நீடிப்பது நடவாத காரியம். நீ உன் கோபத்தால் பல விஷயங்கள் இழந் திருக்கிறாய். என்னுடைய நட்பு அவற்றில் கடைசியாக இருக்க வேண்டும் என்பதே என்னுடைய ஆசை.

சந்தர்ப்பம் வந்தால் சந்திப்போம்.

அன்புடன்
முருகன்.

கதவு தட்டப்பட்டது. முருகன் கதவைத் திறந்தான். சுரேஷ் சிரித்தபடி நின்றிருந்தான்.

"உள்ளே வா, உட்கார்."

"தாங்க்ஸ்! ரூம் அட்ரஸ் நாகராஜ் கொடுத் தான். அதான் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன். எப்படி இருக்கே?"

"நல்லாயிருக்கேன்."

"கேக்கறேன்னு தப்பா நினைக்காதே — ஊருக்கெல்லாம் உபதேசம் பண்ணுவ. நீ இப்படிப் பண்ணலாமா!"

"எப்படி....?"

"மணியோட குணம் உனக்குத் தெரியும். அவனோட அட்ஜஸ்ட் பண்ணாம, துண்டுத் தாளில் எழுதி வச்சுட்டு வந்துட்ட. அவன் பாவம் கிடந்து தவிக்கிறான். உனக்கு அவன் மேலே என்ன கோபம்?"

"உண்மையைச் சொன்னா எனக்கு அவன் மேலே கோபம் இல்லை...."

"அதான்! எனக்குத் தெரியும். நீ எவ் வளவு அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுப் போற வன்னு.... அதனாலதான் உன்னைத் தேடி வந்து கேட்டேன்...."

"நான் இவ்வளவு நாள் என்னையே ப்ரொஜக்ட் பண்ணிக்கிட்டிருந்தேன். இது ஒருவித கர்வம் — இவ்வளவு பெரிய கோபக் காரனோட அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன்ங்கற பெருமை...! — இது தப்பு! நண்பனை அப் படியே ஒத்துக்கிடறது அவசியம். ஆனால் அவனை அப்படியே வைத்திருப்பது தப்பு. பணம், உடை மட்டுமல்ல பண்புகளில் கூட நண்பர்களிடம் கொடுக்கல் வாங்கல் இருக் கணும். நான் அவனுக்கு அட்ஜஸ்ட் பண்ணினேனே தவிர அவனை மாற்ற முயற்சி செய்யலை. இது என்னை உறுத் தறது. என் நட்பை இழந்ததால அவன் கிட்ட நிச்சயமா ஒரு மாறுதல் வரும்."

"உன்னை அவன் தப்பா புரிஞ்சுக்கு வான்...."

"என்னையே எனக்கு இப்பத்தான் புரிஞ் சிருக்கு. எனக்கு அவனோட நட்பை விட அவன் மாறுவதுதான் நிஜமான சந்தோஷம். முருகன் மணியோட எப்படி அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் போறாங்கற பேர் எனக்குத் தேவையில்லை. முருகன் மணியை எப்படி மாத்தியிருக்கான் பாரு என்பது தான் முக் கியம். நான் நிச்சயமா வெற்றி பெறுவேன்."

சுரேஷ் அமைதியாகப் பார்த்தான். "உன் னை நிஜமாகவே பாராட்டறேன்." என் றான்.

முருகன் சிரித்தான், சிரிப்பில் அமைதி இருந்தது.

"மனசுக்குள் மத்தாப்பு படத்துக்குப் போட்டியா நீங்க ஒரு படம் தயாரிக்கப் போறீங்களாமே.... படத்துக்குப் பெயர் என்ன?"



"வயித்துக்குள் வெடி குண்டு!"

— அரகண்டநல்லூர் சாதிக்பாஷா.



மீண்டும் அர்ச்சனா



"கங்கிராட்ஸ் மிஸ். அர்ச்சனா!"

"தேங்க் யூ... ஸ்வீட் எடுத்துக் கொள்ளுங்கள்."

"தேங்க்ஸ்... 'தாசி' படத்தில் உங்களுடைய கேரக்டர் பற்றி...?"

"ஆந்திரா, தெலுங்கானா பகுதியில் 1920—களில் பின்பற்றப்பட்ட 'தாசி' முறையைப் பற்றிய படம்தான் இது. பத்து ரூபாய்க்கும், இருபது ரூபாய்க்கும் இளம் பெண்களை வாங்கி, அவர்களை ஜமீன்தார்கள் பகலில் வீட்டு வேலைகளுக்குப் பயன்படுத்துவதுடன் இரவில் ஜமீந்தார் குடும்பத்து ஆண்களுக்கும், விருந்தினர்களுக்கும் விருந்தாக்கிய கொடுமைகளைச் சித்திரிக்கும் படம். ஒரு சரித்திர பூர்வமான கதை. நான் தாசிப் பெண் ஒருத்தியின் பாத்திரம் ஏற்று நடித்தேன். தெலுங்கானா பகுதிக்கே எங்களையெல்லாம் அழைத்துக் கொண்டு போனார் டைரக்டர் நரசிங்கராவ். அங்கே சில தலைமுறைகளுக்கு முன் 'தாசி' கொடுமைக்கு ஆளான குடும்பங்களின் வாரிசுகளுடன் நேரில் பேசி, பல விஷயங்களைக் கேட்டறிந்தேன். இதனால் அந்த சோகத்தின் முழுப் பரிமாணத்தையும் உணர்ந்து, என் அதிகபட்சத் திறமையைக் காட்டி நடிக்க முடிந்தது."

"அவார்டு வருமென எதிர்பார்த்தீர்களா?"

"அவார்டு வாங்க வேண்டுமென்ற எண்ணத்தில் நான் நடிக்கவில்லை என்றாலும் யூனிட்டில் நான்கைந்து பேர், நிச்சயம் படத்துக்கு ஏதாவது ஒரு விருது கிடைக்கும் என உறுதியாய் நம்பினார்கள்!"

சென்ற வருடம் 'வீடு' படத்துக்கு விருது கிடைத்த பின், அர்ச்சனா, வியாபார ரீதியான படங்களில் நடிக்கத் தயாராய் இருந்தாராம். ஆனால் தனக்கு அதற்கான வாய்ப்புத் தர யாருமே முன் வராதது ஏன் என்பது அர்ச்சனாவுக்குப் புதிராகவே உள்ளது! அதன் பின் அவர் நடித்தவை இரண்டே இரண்டு படங்கள்தான். ஒன்று பிறவி (மலையாளம்). இதற்கும் இந்த வருடம் விருது கிடைத்துள்ளது. இரண்டாவது தாசி (தெலுங்கு).

"இரண்டே இரண்டு படங்களில்தான் நடித்துள்ளேன் என்பதற்காக நான் துளியும் வருந்தவில்லை. இரண்டு மிக அருமையான கேரக்டர்களில் நடித்து, என் திறமையை நிரூபிக்க வாய்ப்புக் கிடைத்தது பற்றி எனக்கு ரொம்பத் திருப்தி; சந்தோஷம் தான்!" என்றார் அர்ச்சனா.

முழுக்க முழுக்க நாட்டியத்தை மையமாய்க் கொண்ட படமொன்றின் மூலமாய்த் தன் நடனத் திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்பது அர்ச்சனாவின் லட்சியமாம்!

சந்திப்பு: எஸ். சந்திரமௌலி

சுக போகத் தீவுகள்

16

உலகத்தை இருள் ஆக்ரமித்துக் கொண்டிருந்ததாகத் தோன்றியது, கிருஷ்ணமூர்த்திக்கு. நேரம் நள்ளிரவைத் தாண்டியிருக்கும் என்றே பட்டது. இரண்டாவது 'ஷோ' சினிமா விட்டு மக்கள் ஆட்டோவிலும், சைக்கிள்களிலும், நடந்தும் வீடு செல்வது தெரிந்தது. தெரு, ஆங்காங்கே இருந்த விளக்கு வெளிச்சத்தையும் மீறி, கொத்துக் கொத்தாகப் போட்டு வைத்த அடுப்புக் கரித் துணி மாதிரி முடிச்சு முடிச்சான இருட்டுடன் இருந்தது. விநோதினி இந்த மாதிரி இருட்டைப் பார்க்கும் போதெல்லாம் சொல்வது அவன் நினைவுக்கு வந்தது.

"இருட்டு என்ன பூமிப் பந்துக்கு வெளியிலா இருக்கிறது? அது மனிதர்களுக்கு உள்ளே அல்லவா இருக்கிறது? உள்ளே ஒளியை அடைத்துக் கொண்டு சஞ்சாரம் செய்பவருக்கு வெளியில் ஏது இருட்டு? சத்திய விளக்கல்லவா இருளை ஓட்டுவது?"

கிருஷ்ணமூர்த்தியின் மனம் சோகத்தில் கவிந்தது.

பூ மலர்வது மாதிரி, வாசனைகளுடன் வார்த்தைகளை மலர விடுகிற, அரிய சிநேகிதியைப் பிரிய நேர்ந்தது எவ்வளவு பெரிய இழப்பு என்று அவனுக்கு விளங்கியது. 'வாழ்க்கையோடு எந்தச் சமரசமும் செய்து கொள்ளாமல், தனக்கு எது சரியானதோ அதன் வழி செல்கிற மனத் துணிவு விநோதினிக்கு எவ்வளவு 'சுலபமாக வாய்த்து விட்டது. ஆனால் அந்த வரம் தனக்கு மட்டும் ஏன் வாய்க்கவில்லை. மாமா பின்னியது சிலந்தி வலை என்று அறியாமலா நான் சிக்கிக் கொண்டேன். தெரிந்தே தான் செய்தேன். தெரிந்தே தப்பு செய்ய என்னைத் தூண்டியது எது? இன்னும் மேலே, இன்னும் மேலே என்று சாமான்யமான மனிதர்களுக்கு எட்டாத உயரத்தில் தான் இருக்க வேண்டும் என்கிற உந்துதலா? தன்னை எல்லோரும் அண்ணாந்து பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொள்ள வேண்டும் என்கிற ஹீரோத்தனத்தை இச்சிக்கும் மனோபாவமா? தான் இந்த மனித சமுத்திரத்தில் ஒரு துளி அல்ல என்று நிறுவுகிற ஆக்ரோஷமா? எது? எது தன்னை அவ்விதம் செய்ய வைத்தது? இவையெல்லாம் சேர்ந்துதான்.

கட்சி மட்டத்திலும், ஆட்சி மட்டத்திலும் தனக்கு வந்திருக்கிற முக்கியத்துவம் ஒரு தட்டிலும், விநோதினியின் பிரிவு ஒரு தட்டிலுமாக வைத்துப் பார்க்கையில், விநோதினியே அவனுக்குப் பெரிதாக, சிறப்பு வாய்ந்த பொருளாகத் தெரிந்தாள். விநோதினி மட்டுமென்ன, தந்தையும் தாயும் கூடத் தன்னை விட்டு விலகியது அவனுக்குப் பேரிடியாக இருந்தது.

அப்பா, அவன் புறப்படுகையில் சொன்னது நினைவுக்கு வந்தது.

"அழுகிய விரல்களுக்கிடையே இருக்கிற பழத்தை எவ்வளவு பசித்தாலும் என்னால் தின்ன முடியாது, கிருஷ்ணமூர்த்தி. எனக்கு உச்சி முக்கியம் இல்லை, தம்பி. அந்த உச்சியை அடைய நான் எந்த உபகரணத்தைப் பயன்படுத்துகிறேன் என்பதுதான் முக்கியம். இலட்சியம் சிறந்ததுதான். அதை அடையக் கையாளும் வழியின் சத்திய பலம் எனக்கு முக்கியம். தப்பு வழிகளில் செல்வது, என் பிள்ளையாகவே இருக்கட்டுமே, நான் அவனை அங்கீகரிக்க மாட்டேன்."

அம்மா, அவன் தனித்திருக்கையில், அவனுக்கு மட்டும் கேட்கும் விதமாகச் சொன்னது, அவனை முந்திக் கொண்டு அவன் செவிகளில் கேட்டது.

"ஏண்டா, நீ பட்டணத்தில், கட்சிக்காரர்களோடு சேர்ந்து கொண்டு லட்சம் லட்சமாகக் கொள்ளை அடிக்கிறாயாமே. யாரோ மேடையில் பேசினானாம். அப்பா கேட்டு வந்து சொன்னார். தம்பி, அப்பா மூணு நாளைக்குத் தொண்டையில் சோறு இறங்காமல் தவிச்சுப் போயிட்டாரப்பா! எனக்குக் கூட கெட்ட சொப்பனம் எல்லாம் வருது. எந்த நேரத்தில் நீ போலீஸ்காரன் கையில் மாட்டிக் கொள்வாயோ என்று எனக்குப் பயமாய் இருக்கு, தம்பி. திருடிப் பிழைக்க வேண்டும் என்பது உன் தலையெழுத்தா? ஒத்தைக்கு ஒரு ஆண் பிள்ளை. உட்கார்ந்து ராஜாவாட்டம் சாப்பிடலாமே. அப்பா, எங்கள் மேல் இரக்கம் வைத்தாவது இந்தக் கொள்ளை அடிக்கிற பழக்கத்தை விட்டு விடேன்..." என்று கண்ணில் நீர் மல்க, அம்மா சொன்னது அவன் இதயத்தைக் கிழித்து ரத்தம் வடியச் செய்தது உண்மைதானே. பட்டணத்தில், முகமூடி போட்டுக் கொண்டு கன்னம் வைத்துத்

பிரபஞ்சன்

திருடுபவனாகவே அம்மா அவனை பாவித்தது அவனுக்கு வெட்கத்தையும், அவமானத்தையும் தந்து அவனைச் சிறுத்துப் போகச் செய்தது.

அனைத்துக்கும் மேலே, தங்கை சொன்னதே அவன் மனத்தை வாள் கொண்டு அறுத்தது: கிணற்றடியில் குளிக்கப் போனவன், பல் துலக்கிக் கொண்டு நிற்கையில், அவள் அருகில் வந்து நின்றாள்.

''அண்ணா! தொட்டியில் நீர் இறைத்து வைக்கட்டுமா?''

''வேண்டாம்மா. உனக்கு எதுக்குச் சிரமம். நானே இறைச்சுக் குளிச்சுக்குவேன்...''

அவள் நின்று கொண்டிருந்தாள். தண்ணீர் இறைத்துக் கொடுக்க மட்டுமே அவள் வந்தாள் என்று அவன் நினைக்க முடியவில்லை.

''என்னடா கண்ணா... ஏதாவது அண்ணன்கிட்டே சொல்லணுமா?''

''ஆமா, அண்ணா.''

''பின்னே சொல்லேன். என்னிடம் சொல்ல என்ன தயக்கம்?''

''ஒண்ணுமில்லை, அண்ணா. மாயவரத்து மாமா, அத்தை, அவர் எல்லாம் என்னைப் பெண் பார்க்க வந்தது தெரியுமில்லையா?''

''அப்படியா, எனக்கு ஒரு வரி எழுதிப் போட்டீர்களா? அப்பாதான் கோபத்தில் இருக்கிறார். அவர் எழுத மாட்டார். நீ கூடவா அம்மா என் மேல் கோபமாக இருக்கே?''

அவள் கண்களில் கண்ணீர் துளித்ததை அவன் கண்டான்.

''இல்லை அண்ணா. அப்பா எழுதக் கூடாது என்று சொல்லியிருக்கிறார். அப்புறம்...''

''சொல்...''

''பெண் பார்க்க வந்தார்களா? என்னை எல்லோருக்கும் பிடிச்சுட்டுது.''

''உன்னை யாருக்குத்தான் பிடிக்காது?''

''போங்கண்ணா. சொல்றதைக் கேளுங்கள். எனக்கும் அந்த சம்பந்தம் முடிய வேண்டும் என்றுதான் ஆசை.''

''அப்படியா? அந்த நான் முடித்து வைக்கிறேன்.''


''அது உன்னால் முடியாது அண்ணா.''

''ஏன்?''

''அவர்களுக்கும் அப்பாவுக்கும் சண்டை வந்துட்டுது.''

''சண்டையா?''

''ஆமாண்ணா. என்னை அவருக்குப் பிடிச்சுது. எனக்கும் அவரைப் பிடிச்சுது. பள்ளிக் கூடத்தில் தலைமை ஆசிரியராக



இருக்கிறாராம். சாப்பாடு முடிந்து, சீர் வரிசை பற்றிப் பேச்சு வந்தது. அப்போ, மாமா, 'அவர் வேலை பார்க்கும் இடத்தில், ஒரு வீடு வாங்கித் தந்து, நூறு பவுன் நகை போட்டு, ஒரு லட்சம் ரூபாய் வெள்ளிப் பாத்திரங்கள், ஒரு லட்சம் கையில் ரொக்கம், ஒரு கார் எல்லாம் செய்ய வேண்டும் என்றார். அப்பா திகைத்துத்தான் போனார். தன்னால் அவ்வளவு செய்ய முடியாது. ஒரு லட்ச ரூபாய் தருவதாக ஒப்புக் கொண்டார். அவர்களோ, 'பெண்ணுக்கு அண்ணன் தான் பட்டணத்தில் கோடி கோடியாகச் சேர்த்துக் கொழிக்கும் போது தங்கைக்குக் கொடுத்தால் என்ன?' என்று கேட்டார்கள். அதற்கு, அப்பா, 'என் மகன் கோடீஸ்வரனாக இருக்கட்டும். அது எனக்குச் சம்பந்தம் இல்லாத விஷயம். என்னால் முடிந்தது ஒரு லட்சம் மட்டும்தான்' என்றார். அவர்களோ, 'உன்னைப் பார்த்தா சம்பந்தம் கொள்ள வந்தோம்! உன் பையனைப் பார்த்துத் தானே சம்பந்தம் கொள்ள வந்தோம் என்றார்கள். அப்பாவை இந்த வார்த்தைகள் மிகவும் புண்படுத்தி இருக்க வேண்டும். அப்பா சொன்னார். 'என் அந்தஸ்து, என் கௌரவம், என் ஸ்திதி இவற்றைப் பார்த்துப் பெண் எடுத்தால் எடுங்கள். இல்லையென்றால், வேண்டாம்' என்று சொல்லி விட்டார். அவர்கள் கோபித்துக் கொண்டு போய் விட்டார்கள்.''

கிருஷ்ணமூர்த்தியின் இருதயம் குருதி வடித்தது அப்போது.

தெரு அமைதியில் ஆழ்ந்து போயிருந்தது. மனம், தான் அனாதை, அனாதை என்று அரற்றியது. பனி பெய்து அவன் சட்டையை நனைத்து விட்டிருந்தது. அப்போதுதான் உறைத்தது.


தன் அறைக்குள் புகுந்தான் கிருஷ்ணமூர்த்தி. பனியில் நின்று விட்டு உள்ளே வந்த காரணத்தால், அறை உஷ்ணம் மிக்கதாகத் தோன்றியது. லேசான வெப்பமயமான காற்று அறையைச் சூழ்ந்து இருந்தது. கோகிலா சொன்னது அவன் நினைவுக்கு வந்தது. வெப்பமயமான இந்தக் காற்றை எதிர்க்க அவனால் ஆகாது என்றும், ஆகவே சீக்கிரமே அறையை மட்டுமாவது ஏ.சி. பண்ணி விட வேண்டும் என்றாள் கோகிலா.

படுக்கையை ஒட்டி வைக்கப்பட்டிருந்த போனை எடுத்து, மனப்பாடமாக ஆகியிருந்த அந்த நம்பரைச் சுழற்றினான்.

○○ புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் உள்ள ஒரு தெருவின் பெயர் அக்னி பஜார்.

○○ அறந்தாங்கி அருகே உள்ள ஓர் ஊரின் பெயர் கொக்கு முட்டை.

— அறந்தாங்கி சங்கர்.



எதிர் முனையில், சலனம் இருந்தது.

''ஹலோ'' என்றாள் விநோதினி.

''ஹோ... விநோதினி... நான்தான் கிருஷ்ணமூர்த்தி பேசறேன். சென்னையிலிருந்துதான். சாரி, வினோத்! தூக்கத்திலிருந்து எழுப்பி விட்டேனா? மன்னியுங்கள். விநோத்... நான் உங்களை ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு நாளும், வேளையும், இழந்து கொண்டேயிருக்கிறேன்... என்னால் இந்த அவஸ்தையைத் தாங்க முடியவில்லையே. நான் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்? அரசியலை விட வேண்டும். அவ்வளவுதானே. விட்டு விடுகிறேன். உங்களை விடவா எனக்கு அரசியல் பெரிது. என்னைப் புரிந்து கொள்ளுங்கள். என் மேல் அனுதாபம் காட்டுங்கள். என்னை விலக்காதீர்கள். நான் பாவப்பட்ட ஜென்மம், விநோத். எல்லோரும், என் தந்தையும், தாயும், சகோதரியும், சினேகிதியும் எல்லோரும் என்னை விட்டுப் போன பிறகு, நான் எதற்கு உயிர் வாழ வேண்டும். நான் இறந்து போகிறேன். மரணம்தான் எனக்கு அமைதி தரும் என்றால், நான் இப்போதே சாகிறேன். அன்றொரு நாள் இது சிற்றின்பம் பேரின்பம் என்று இன்பங்களை நம் பெரியோர்கள் கூறு போட்டு வைத்திருப்பதைக் கண்டித்துப் பேசினீர்களே, ஞாபகம் இருக்கிறதா? இது என்ன சின்னப் பெட்டி, பெரிய பெட்டி விஷயமா? இன்பம் ஒரு முழுமையான, பூர்ணமான பொருள். அதில் எப்படி தாரதம்மியம் இருக்க முடியும்? மனிதரின் உயிர்க்குப் பற்றுக்கோடே உடம்புதானே. உடம்பார் அழியின் உயிரால் அழிவர், காதலினால் மானுடர்க்கு மரணம் போகும் என்பது பொய்யா? உண்மைக் காதலுக்கும் பக்தி என்ற பெயர் இருப்பதில்லையா? நான் உங்களைக் காதலிக்கிறேன், விநோத். மூர்க்கமாக, உண்மையாக, அசுரத்தனமாக, தெய்வீகமாகக் காதலிக்கிறேன். என்னைப் புரிந்து கொள்ள முடிகிறதா? என் இருதயத்திலிருந்து வழியும் பச்சைக் குருதியின் வாசனையை நீங்கள் உணர முடியவில்லையா? என் இதயம் துடிக்கும் துடிப்பு உங்களுக்குக் கேட்கவில்லையா? உடனே உங்களை நான் பார்க்க வேண்டும். நாளையே புறப்பட்டு வருகிறீர்கள். இன்னும் மூன்று நாள் அவகாசம் தருகிறேன். அதற்குள் நீங்கள் புறப்பட்டு வருகிறீர்கள். இல்லையெனில், என் மறைவுச் செய்தியை நீங்கள் கேள்விப்படுவீர்கள்...''

கிருஷ்ணமூர்த்தி போனை வைத்தான்.

அவன் உடம்பு நடுங்கிக் கொண்டு இருந்தது. நா உலர்ந்து போனது மாதிரி இருந்தது. கூஜாவில் இருந்து தண்ணீரை மொண்டுக் குடித்தான். படுக்கையில் சாய்ந்தான். தூக்கம் வருவதாய் இல்லை. எழுந்து கப்போர்டின் அருகில் சென்று நின்றான். வரிசை, வரிசையாக, வெள்ளை, கரும் சிவப்பு, பழுப்பு நிறப் பானங்களைக் கொண்ட பாட்டில்கள் அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ரம் பாட்டிலை

எடுத்தான். சோடா, தண்ணீர் எதற்கும் போகாமல், அப்படியே நேராக விழுங்கினான். கடுமையாகக் கசந்து கொண்டே உள்ளே சென்றது அந்தப் பானம்.

படுக்கைக்கு வந்து தொப்பென்று விழுந்தான். தலை கிறுகிறுத்தது. அவனை யாரோ மேலேயும், கீழேயும் போட்டுப் பந்தாடுவதாக அவனுக்குத் தோன்றியது. வாயைத் திறந்து 'ஓ'வென்று அலற வேண்டும் என்று தோன்றியது. பல்லைக் கடித்துத் தன்னை அடக்கிக் கொண்டான். அப்படியே உறங்கிப் போனான்.

கண்ணைத் திறந்து பார்க்கையில் நன்கு விடிந்து, கள்ளென்ற வெளிச்சம் அறைக்குள் பரவியிருந்ததை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. கண்ணைத் திறக்கவே மிகவும் சிரமமாக இருந்தது. கண்கள் எரிந்தன. இந்தக் காலையிலேயே இந்த எரிச்சல் என்றால், இன்னும் போகப் போக எவ்வளவு வெப்பம் ஏற்படும்? கையைத் திருப்பி மணியைப் பார்த்தான். மணி பத்துப் பத்து. திரும்பி, கையெட்டும் தூரத்தில் இருந்த டெலிபோன் டைரக்டரியை எடுத்து ஓர் எண்ணைத் தேடிக் கண்டுபிடித்தான்.

சுழற்றினான்.

இரண்டாம் முயற்சியில் அந்த எண் கிடைத்தது.

"ஏ.சி. கம்பெனிதானே..."

"ஆம், ஐயா"

"என்னைத் தெரியுமல்லவா?"

"தெரியும் சார்..."

"என் வீட்டுக்கு ஏ.சி. பொறுத்த வேண்டும் என்று சொல்லி எத்தனை நாட்களாகின்றன?"

"மன்னிக்க வேண்டு, சார். நேற்று முன் தினம்தான் திருமதி. கோகிலா போன் செய்து சொன்னார். எங்கள் இன்ஜினீயர் விடுமுறையில் இருந்தார். இன்றுதான் வருகிறார். உடனே அனுப்பி வைக்கிறேன்."

"என்ன சமாதானம் இது? பெட்டைச் சமாதானம்? ஒரு பெரிய கம்பெனி இந்த மாதிரி மடத்தனமாகப் பேசலாமா? உங்களுக்கு லைசன்ஸ் கொடுத்த மடையன் யார்? முட்டாள்! நான் நினைத்தால் உங்கள் லைசன்சை கேன்சல் பண்ண முடியும். தெரியுமா? முதல் அமைச்சருடன் நேரடியாக இந்த நிமிஷம் பேச முடிந்தவன் நான். என்னிடமா விளையாடுகிறீர்கள். தொலைத்து விடுவேன். பூண்டற்றுப் போகச் செய்து விடுவேன். ஆளுங்கட்சி எங்களதுதான். இப்போதே சி.எம்.முக்குப் போன் செய்யப் போகிறேன்..."

அவன் போனை வைத்தான்.

அவனுக்குள்ளும், அவனைச் சுற்றிலும் இருள் வந்து அடர்வது மாதிரி இருந்தது. இருட்டில் மூழ்கி உறங்கிப் போனான்.

(தொடரும்)

அருள்வாக்கு



இப்போது சேரி மாதிரி ஓர் இடத்தில் இருக்கிறோம். பங்களாவுக்குப் போய் வாஸம் பண்ண ஆசை! ஆசை இருந்தாலும் அதற்குரிய யோக்கியதை, வருமானம் முதலியவை இப்போது இல்லையே! முயற்சி பண்ணி அவற்றை ஸம்பாதித்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்யும் வரையில் (நாம் தற்போது) இருக்கும்சேரியைஒரே அசுத்தமாக, சாணியும் சகதியுமாக வைத்திருக்காமல் சுத்தப்படுத்தி வைத்துக் கொண்டால்தானே ஸரியாயிருக்கும்? அப்புறம் எப்போதோ இதை விட்டுப் போக வேண்டுமென்பதால் அப்படிப் போவதற்கான யோக்கியதை வருகிற மட்டும் இது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டுமென்று விட்டு வைத்தால், அசுத்தத்திலே நமக்கு வ்யாதி வக்கைகள் ஏற்பட்டு, அதை விட்டுக் கிளம்புவதற்கான யோக்கியதையே கிடைக்காமல் திண்டாடுவதாகத்தானே ஆகும்? முதலில் நாம் இருக்கிற இடத்தைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். இப்படி லோக வாழ்க்கையை ஸரி செய்து தருவதுதான் தர்மம்; தர்மத்தை ஒட்டி ஏற்பட்ட ஸ்வதர்ம கர்மாக்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

முதல் ஆசீர்வாதம்

ஞானாம்பாள் செல்வம்

இனிய காலைக் காற்று இராஜேஸ்வரனை இதமாய் 'மசாஜ்' செய்தது.

சோஃபாவில் அமர்ந்தபடியே அன்றைய நாளிதழைப் புரட்டினார்.

காப்பியும் கையுமாய் அவர் அருகே வந்து நின்றாள் அவர் மனைவி சாந்தி.

முகத்தில் 'சாந்தம்' 'விடுப்பில்' இருந்தது.

''ஏங்க... அந்தக் கழுதையை இப்போ என்ன பண்ணப் போறீங்க? அவளுக்கு இந் நேரம் கல்யாணம் ஆகியிருக்குமில்லே?

காப்பியைக் கையில் வாங்கியபடியே, புருவங்களை உயர்த்திக் குவித்தார் ராஜேஸ்வரன்.

''எந்தக் கழுதையைச் சொல்றே சாந்தி நீ? எவளுக்கு இந் நேரம் கல்யாணம் ஆகியிருக்கும்?''

''அதான்... உங்க ஜெராக்ஸ்ல வேலை செஞ்சிக்கிட்டிருக்காளே ஜெயந்தி, அவளைத்தான் சொல்றேன்!''

''ஓ! ஜெயந்தியா? ஆமாம் சாந்தி. அவளுக்கு இந் நேரம் கல்யாணம் ஆகியிருக்கும்.''

''அவளை ஒடனே வேலையை விட்டு நிறுத்துங்க!''

சட்டென்று சிவந்து போனார் ராஜேஸ்வரன்.

''அது பாவம் இல்லையா சாந்தி?''

''இதுல பாவம் என்னங்க வேண்டியிருக்கு? பெரிய பாவம்! கொழுப்பெடுத்தவ! இஷ்டத்துக்கு, ஆயி அப்பனுக்குத் தெரியாம, இன்னொருத்தனை இழுத்துக்கிட்டுப் போய்க் கல்யாணம் பண்ணிக்குவா! அவளை நம்ப வேலைக்கு வச்சுக்கணுமா? ரொம்ப நல்லாயிருக்கு! இன்னையோட அந்தக் கழுதைக்குக் கணக்குப் பார்த்து உடனே அவளை வெட்டி விடுங்க!''

மனைவியின் உக்கிரத்தை உணர்ந்த ராஜேஸ்வரன் மெல்லப் பிடரியைக் கீறிக் கொண்டார்.

அவருக்குத் தர்மசங்கடமாய் இருந்தது. பதமாய் வார்த்தைகளை உதிர்த்தார்.

''இதோ பார் சாந்தி, இந்த ஜெயந்தி, காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்ட அந்தப் பையனையும், அவன் கம்பெனி முதலாளி, ரெண்டு நாளைக்கு முன்னால, வேலையை விட்டு நிப்பாட்டிட்டாராம்! நம்ப வேலையை நம்பிக் கல்யாணம் பண்ணிக்கிட்ட இந்தப் பொண்ணை, நம்பளும் வேலையை விட்டு நிப்பாட்டிட்டம்ன்னா, அது அவளுக்கு நாம செய்யற நம்பிக்கைத் துரோகம் மாதிரி ஆயிடுமேன்னு தான் நான் கொஞ்சம் யோசனை பண்றேன்..''

''ஆமா.... பெரிய நம்பிக்கைத் துரோகம்! அவ, அவுங்க அம்மா, அப்பாவுக்குச் செஞ்ச துரோகத்தை விடவா, நாம அவளுக்குச் செய்யப் போறோம்...? பேசாமல் வேலையை விட்டு நிறுத்துங்க...''

'இர்ர்ர்ர்ர்ர்ர்....' — அந்த நேரம் பார்த்து வாசலில் பஸ்ஸர் சிணுங்கியது.

சாந்தி வேகமாய் நடந்து போய்க் கதவைத் திறக்க... வாசலில் மாலையும் கழுத்துமாய் நின்று கொண்டிருந்த ஜெயந்தியும் அவள் கணவனும், சட்டென்று உள்ளே வந்து சாந்தியின் பாதங்களில் விழ... குப்பென்று வியர்த்துப் போனாள் சாந்தி!

சமாளித்துக் கொண்டு, ''நல்லாயிரும்மா! நல்லாயிரு! எந்திரிங்க...'' என்றாள்.

மெல்ல முகத்தை நிமிர்த்திய ஜெயந்தி,



நீர்கோத்த விழிகளைத் தன் சிவந்த கரங்களால் கசக்கி, விம்மல்... சாந்திக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"ஏம்மா... கண் கலங்குறே? என்ன விஷயம்?" என்றாள்.

அவ்வளவுதான்! சாந்தி பச்சைக் கொடி காட்ட... மடைதிறந்த வெள்ளமானாள் ஜெயந்தி!

"மேடம்! நான் பெத்தவங்க சம்மதம் இல்லாம கல்யாணம் பண்ணிக்கிட்டதால, உங்க வீட்டுக்காரர் என்னை வேலையை விட்டு நிப்பாட்டிடுவாரோன்னு பயமா இருக்கு! தயவு செய்து என்னை இந்தச் சந்தர்ப்பத்தில் வேலையை விட்டு நிப்பாட்டிட வேண்டாம்னு சொல்லுங்க மேடம்! இவருக்கும் தற்சமயம் வேலை போயிடிச்சு! மேடம்! எனக்கு வயசு முப்பத்தி அஞ்சு ஆச்சி! எங்க வீட்டோட தரித்திர நிலைமையும், எங்க அம்மா, அப்பாவோட சுயநலப் போக்கையும், மனசுல வச்சித்தான், வேற வழியில்லாம, நானே என் எதிர்காலத்தை உருவாக்கிக்கிட்டேன். அது மட்டுமில்லாம, உங்க பெருந்தன்மையை மனசுல வச்சித்தான், முக்கியமா, இந்த விஷயத்துல நான் ரொம்ப துணிச்சலா இறங்கினேன் மேடம்!"

சட்டென்று இருதய மையத்தில் அடிபட்டு, அதிர்ந்து போனாள் சாந்தி! மிடறு விழுங்கி ஜெயந்தியை ஏறிட்டாள்.

"என்னது! என் பெருந்தன்மையை மனசுல வச்சு இந்தக் காரியத்துக்குத் துணிஞ்சியா! நீ... நீ... என்னம்மா சொல்றே?"

மீண்டும் முகத்தை நிமிர்த்தினாள் ஜெயந்தி!

"ஆமாம் மேடம்! உங்க ஜெராக்ஸ் கம்பெனியில ஒரு பொண்ணு வேலை செய்றான்னு தெரிஞ்சிருந்தும், அவ கறுப்பா, சிவப்பா, எப்படிப்பட்டவங்கற சந்தேகம் இல்லாம எவ்வளவு பெருந்தன்மையா, உங்க கணவர் மேலே நம்பிக்கை வச்சு, உங்க ஜெராக்ஸ் பக்கமே தலைகாட்டாம, இந்த ரெண்டு வருஷமா நீங்க இருந்துக்கிட்டிருந்தீங்க! அந்த அளவுக்கு, பெருந்தன்மை உங்ககிட்டே இருக்கிறதனாலத்தான் தாலி கட்டின மறு நிமிஷமே, முதல் முதலா, ஒரு நல்ல மனிதர் கால்லே விழுந்து முதல் ஆசிர்வாதம் வாங்கணும்னு உங்களைத் தேடி நான் ஓடி வந்தேன். அதே மாதிரி நீங்களும் எங்களை மனசார ஆசிர்வதிச்சு, வாழ்த்திட்டீங்க! தயவு செய்து என் வேலையை மட்டும் உங்க கணவர்கிட்டே சொல்லி, பறிச்சிட வேண்டாம்னு சொல்லுங்க மேடம்...."

"கவலையேபடாதம்மா, அது என் பொறுப்பு" என்றபடி சாந்தி, மெல்ல ஜெயந்தியின் தோள்களைத் தொட்டு, சகோதரியாய்த் தன்னுடன் அணைத்துக் கொண்டாள்.

கோகுலம்

மே '89 இதழில்

சாணக்கிய சபதம்

— 16 பக்க வண்ணப் படக்கதை



என்னுடைய சின்ன வயதினிலே

— அமரர் அழ. வள்ளியப்பா



ஜார்ஜ் புஷ்

— அமெரிக்க அதிபர் பற்றி ஜானகி மணாளனின் கட்டுரை.



குளம் வெட்டிய பிராணிகள்!

— சந்திரநாத்.



"அன்புள்ள சென்னை தொலைக்காட்சி நிலைய இயக்குனருக்கு..."

உடைந்தது குட்டு!

oo நான் வேலை செய்யும் ஆபீசில் நான்கு மாதத்திற்கு மேல் ஸ்ட்ரைக். டி.வி. கடைக்குத் தவணைத் தொகை கட்டவில்லையென, கடைக்காரர்கள் வந்து டி.வி.யை எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். வீட்டிற்குப் படம் பார்க்க வருபவர்கள் எல்லாம் டி. வி. என்னாயிற்று என்று கேட்க, எல்லோரிடமும் டி.வி.யை ரிப்பேர் செய்யக் கடைக்குக் கொடுத்துள்ளேன் என்று கூறிச் சமாளித்தேன்.

சில நாட்கள் கழித்து, பணத்தைத் திரட்டி, தவணை பாக்கியைக் கட்டி விட்டு, கொடைக்கானல் ஒளிபரப்பு தெளிவாகத் தெரியாததையும் சரி செய்து விட்டு, டி.வி.யை வீட்டுக்கு எடுத்துக் கொண்டு வந்தேன். அன்று மாலை வீட்டில் எல்லோருடனும் டி.வி. பார்த்துக் கொண்டிருந்த போது வீட்டிற்கு வந்த என் மாமியார் 'என்ன சுந்தரி டி.வி. கடைக்குத் தவணை பாக்கி எல்லாம் கட்டி டி.வி.யை எடுத்துக் கொண்டு வந்து விட்டாய் போலிருக்கே?' என்று கேட்க என் முகத்தில் ஈயாடவில்லை.

— சுந்தர் சுந்தரி, கோவை — 2.

"தொடாதே!"

oo சுஷ்மா, வீட்டில் டி.வி. கிடையாதகையால், எங்கள் வீட்டுக்குத்தான் டி.வி. பார்க்க வருவாள். ஒரு நாள் அவள் தந்தை, அவளுக்கு ஒரு பொம்மைக் கார் வாங்கிக் கொடுத்திருந்தார். அதை எங்கள் பையன் கண்ணனிடம் பெருமை பொங்கக் காண்பித்தாள். கண்ணனுக்கு, அதைத் தானும் ஓட விட்டுப் பார்க்க வேண்டும் என்று ஒரே ஆசை. ஆனால், சுஷ்மா, அனுமதிக்கவில்லை!

கோபம் கொண்ட கண்ணன், "நீ மட்டும் எங்க வீட்டு டி.வி.யைத் தினம், பார்க்கலியா? நான், உன் பொம்மையைப் பார்த்தால் என்னவாம்?" என்றான்.

அதற்கு சுஷ்மா, "நான் உங்க வீட்டு டி.வி.யைத் தொடுகிறேனா, என்ன? தொடாமல், தூர இருந்துதானே, பார்க்கிறேன்? அப்படி நீயும் என் பொம்மையைத் தொடாமல், தூர இருந்து பாரேன்" என்றாள்!

— என். கே. ஈசுவரி, பெங்களூர் — 10.


காசிக்குப் போயும்...

oo 'ஒளியும் ஒலியும்', 'தமிழ் சினிமா' நிகழ்ச்சிகளின் போது எங்கள் வீடே ஹவுஸ்ஃபுல் ஆகி விடும். பாதிக்கு மேல் அரை டிக்கெட்டுகள்தான்.

நிகழ்ச்சி ஆரம்பித்த பிறகு ஏதாவது அரை டிக்கெட்டின் வீட்டிலிருந்து ஓர் ஆள் வந்து அழைக்க, இது போக மறுக்க... அங்கே குட்டி சட்டசபை நடக்கும்.

நடுநடுவே... "ஏன்க்கா... இந்த டி. வி. யை வாங்கினீர்கள்...? ....கம்பெனி டி. வி. தான் பெஸ்ட்" என்ற புத்திமதிகளும், "பத்மா வீட்டிலே பாருங்க. என்னா பிரமாதமா தெரியுது. உங்க வீட்டிலே மட்டும் ஏன் இப்படி?" என்ற கேள்விகளும் நம்மை அசடு வழிய வைப்பன. மறுநாள் அந்த பத்மா தன் வீட்டு டி.வி.யின் 'லட்சணத்தை'ச் சொல்லி நம்மிடம் அழுவாள் என்பது வேறு விஷயம்!

சில அரை டிக்கெட்டுகள் இலந்தைப் பழங்களைத் தின்று விட்டு, மறக்காமல் கொட்டைகளை எங்கள் வீட்டிலேயே போட்டு விட்டுப் போய் விடுவார்கள். வேர்க்கடலைத் தோல், கரும்புச் சக்கைகள் கூட இருப்பதுண்டு! அதை அள்ளிக் கொட்டியது போதாதென்று என் கணவரி



டமும் செமத்தியாக நான் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டும்.

ஞாயிற்றுக் கிழமை இரவு 7.30 மணி செய்தி கேட்க விட மாட்டார்கள். "அக்கா.. அக்கா... சிலோன் வைங்கக்கா... ஒளியும் ஒலியும் போடுவான்" — கோரஸாகக் கத்துவார்கள். என் கணவர் முறைப்பார்.

'படிக்காத மேதை' படம் முடிந்த பிறகு பார்த்தால் ஆங்காங்கு... மூக்குச் சளி...! சோகக் காட்சிகளில் அழுது அழுது முடியாமல் மூக்கைச் சிந்திப் போட்டு விட்டுப் போய் விட்டார்கள் சில ரசிகைகள்!

ஆக மொத்தம் டீ.வி. வாங்கி இரண்டு வருஷங்கள் ஆச்சு. ஒரு ஞாயிற்றுக்கிழமை கூட 'அக்கடா'ன்னு நிம்மதியா ஒரு சினிமா பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கம் எனக்கு நிறையவே உண்டு!

— எஸ். பேபி, கள்ளக்குறிச்சி.

எல்லாமே வியாபாரம்தான்!

OO சகோதரரின் திருமண வைபவம் முழுவதையும் 'வீடியோ கவரேஜ்' செய்திருந்தோம். ஒரு சுபதினத்தில், உறவினர்கள் முன்னிலையில் திருமண கேஸட்டை வீடியோவில் போட்டுப் பார்த்தோம். நிகழ்ச்சியின் ஆரம்பமே எங்களை முகம் சுளிக்க வைத்தது. மங்கள நாதஸ்வர இசைக்குப் பதிலாக, மேல்நாட்டு இசை! தாலி கட்டும் சமயம் ஒலித்த பாடல், "இந்த ஏமாளிக்கும், கோமாளிக்கும் கல்யாணம் கல்யாணம்..." இந்தப் பாடல் அனைவரையும் எரிச்சலின் எல்லைக்கே அழைத்துச் சென்று விட்டது. 'வீடியோ கவரேஜ்' செய்பவர்கள் 'வியாபார சிந்தனையை' மறந்து மனநிறைவிற்காகத் தொழில் செய்தால், நல்லது.

— 'மதி' ஜி. குணசேகரன், சென்னை — 106.

சிதறுகாய்ச் சிரிப்பு!

OO என் சகோதரியின் பெண் கல்யாணத்தை வீடியோ படம் எடுத்தார்கள். திருஷ்டித் தேங்காயை சாஸ்திரிகள் மணமக்களின் தலையைச் சுற்றி, கீழே படீர் என்று போட்டு உடைத்தார். சில்கள் யார் காலிலாவது குத்தி விடப் போகிறதே என நான் அவசரமாய்ப் பொறுக்கி எடுத்தேன். அந்தக் காட்சி அப்படியே வீடியோவில் பதிவாகி விட்டது. வீடியோ போட்டுப் பார்க்கும் போது, "ஏன் காலையில் டிபன் ஒன்றும் சாப்பிடவில்லையா? சூரைத் தேங்காய்ச் சில்லைப் பொறுக்குகிறாயே?" என்று என் சகோதரி உரக்க என்னைக் கேட்கவும் சிரிப்பொலி அடங்கச் சில நிமிடங்கள் ஆயின.

— ஜானகி, சென்னை — 91.

விளம்பர பாணியில்

OO எங்கள் வீட்டுச் சின்னப் பயல் ஓவென்று அழுது கொண்டிருந்தான்.

"என்ன ஆச்சு?" என்று நான் கேட்டேன், விளம்பர பாணியில்.

"குழந்தை அழுதது" என்று பதில் சொன்னாள், என் மனைவி.

அருகிலிருந்த என் மகள் டக்கென்று, "முதுகிலே ரெண்டு மொத்து வை! நீ குழந்தையா இருக்கச்சே அதுதான் செய்தேன்!" என்றாளே பார்க்கலாம்!

— ஆர். சேகர், சென்னை — 35.

அன்புள்ள இயக்குனரே!

OO அன்புள்ள சென்னை தொலைக்காட்சி நிலைய இயக்குனருக்கு, எப்படியும் தாங்கள் நடத்தும் ஏதாவது ஒரு நிகல்ச்சியிலாவது பங்கு பெற்று டீ.வி.யில் தோன்றி விட வேண்டும் என்பதே என் வால்கையின் குறிக்கோல். இத்தனை வருடங்கலாகத் தங்கல் நிகல்சிகலைப் பார்ததில் அதற்குத் தேவையான தகுதிகல் என்னென்ன என்பதைக் கண்டுகொண்டேன்.

1. குறைந்தது நாற்பது வயதாவது ஆகியிருக்க வேண்டும். (முக்கியமாக நாடகங்கலில் பங்கு கொல்ல) அதற்காகவே பத்து வருடங்கலாக நான் வாய்ப்புக் கேட்கவில்லை.

2. தமிழ் மொலியைச் சரியாக உச்சரிக்க வேண்டும். இதற்கு நான் பட்ட பாடு கொஞ்சமில்லை. என்னுடைய 'ழ'கர, 'ள'கர உச்சரிப்புகலை 'ல'கரமாக உச்சரிக்க இடை விடாது பயிற்சி மேற்கொண்டு வெற்றி பெற்றிருக்கிறேன்.

3. ஸ்கிரீன் நிறைந்து தெரிய வேண்டும் என்பதற்காக நன்றாகத் தின்று, நல்ல சதை போட்டு, குண்டாக ஆகியுல்லேன்.

இத்தனை தகுதிகலும் உடைய எனக்குச் சீக்கிரமே தாங்கல் நடத்தும் 'வயலும் வால்வும்' பகுதியிலாவது ஒரு வாய்ப்புக் கொடுத்து என் வால்வின் குறிக்கோலை நான் அடைய உதவி, என் உயிரைக் காப்பாற்றி டீ.வி. பார்ப்பவர் உயிரை எடுக்க ஒரு சந்தர்ப்பம் அலிப்பீர்கல் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு,
முன்கூட்டியே உங்கலுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொல்லும்
வஸந்தி.

— ராஜேஸ்வரி, புவனேஸ்வரி, திருநெல்வேலி.

யாரது, வீட்டுக்குள்ளே...?

OO ஒருநாள் மாலை ஆறு மணி சுமாருக்கு மின்சாரத் தடை ஏற்பட்டதால், டீ.வி.யை அணைக்க மறந்து வாசலில் உட்கார்ந்திருந்தோம். திடீரென்று உள்ளே இருந்து 'ஓடு, பிடி, விடாதே' என்று ஒரே சத்தம் வரவும், எல்லோரும் விழுந்தடித்து வீட்டிற்குள் வந்து பார்த்தால், டீ.வி.யில் ஏதோ நாடகம்! என்னது என்று ஒருவாறு புரிந்ததும் ஒரே குபீர் சிரிப்புத்தான்!

— எஸ். ஜீஜாபாய், சென்னை — 17.

பிரதோஷ காலம்– பிரதோஷ வரலாறு

சுக்கில பக்ஷம், கிருஷ்ண பக்ஷம் என்னும் இரண்டு பக்ஷத்திலும் வருகின்ற திரயோதசி திதியில் சூரியாஸ்தமனத்திற்கு முன் மூன்றே முக்கால் நாழிகையும், பின் மூன்றே முக்கால் நாழிகையுமாய் உள்ள காலமே பிரதோஷம் எனப்படும்.

பிரதோஷ வரலாறு

தசமி திதியன்று (பத்தாவது நாள்) நடந்தது:

தசமி திதி அன்று ஒருவேளை உண்டு இந்திராதி தேவர்களும் அசுரர்களும் மந்திரகிரியை மத்தாகவும், வாசுகி என்ற நாகராஜனைத் தாம்புக் கயிறாகவும் அமைத்தார்கள். அசுரர்கள் தலைப்புறமாகவும், தேவர்கள் வால்புறமாகவும் நின்று அமிர்தம் கடையலானார்கள். கடைந்தபோது வாசுகி நஞ்சை உமிழ்ந்தது. கடலில் இருந்தும் நஞ்சு தோன்றியது. வாசுகி கக்கிய ஆலமும் கடலில் தோன்றிய ஆலமும் ஒன்று சேர்ந்து ஆலாலம் எனப் பேர் பெற்றது. அக்கொடிய விடத்தை வானவர்கள் விருப்பப்படி அடியவர்களாகிய அமரர்கள் உய்ய அமுதம் போல் சிவபெருமான் உண்டருளினார்.

ஏகாதசி திதியன்று (பதினோராவது நாள்) நடந்தது:

சிவபெருமான் சொற்படி தேவர்கள் மறுபடியும் பாற்கடலைக் கடைந்தார்கள். ஏகாதசியன்று பகல் முழுவதும் பட்டினி இருந்து இரவு முழுவதும் உறக்கமின்றி பாற்கடலைக் கடைந்தார்கள்.

துவாதசியன்று நடந்தது (பன்னிரண்டாவது நாள்):

துவாதசியன்று அதிகாலையில் அமிர்தம் கிடைத்தது. அதைத் தேவர்கள் பகிர்ந்து உண்டார்கள். அந்த மகிழ்ச்சியில் தேவர்கள் துவாதசியன்று ஆடியும் பாடியும் பொழுதைப் போக்கினார்கள்.

திரயோதசி அன்று நடந்தது (பதிமூன்றாம் நாள்):

தேவர்கள் சிவபெருமானை முன்னாலே வணங்காது பொழுது போக்கிய தங்கள் குற்றத்தை உணர்ந்து சிவபெருமானிடம் பணிந்து தங்கள் குற்றத்தை மன்னித்தருளுமாறு வேண்டினார்கள்.

பரம கருணாநிதியாகிய சிவபெருமான் மகிழ்ந்து தேவர்களுக்கு அருள் புரியத் திருவுளம் கொண்டு கயிலையில் அன்று மாலை (4.30 மணி முதல் 6.00 மணி வரை.) பிரதோஷ வேளையில் தவத்திரு முன் இருந்த ரிஷப தேவரின் இரு கொம்புகளுக்கிடையில் நின்று அம்பிகையைக் காணத் திருநடம் செய்தருளினார். தேவர்கள் அதனைத்

தரிசித்து சிவபெருமானை துதி செய்து வணங்கினார்கள். அது முதல் திரயோதசி திதியன்று மாலை நேரம் பிரதோஷம் ரஜனீ முக வேளை பாபத்தை போக்கும் நேரம்.

பிரதோஷ பூஜாபலன்:

சிவ மூர்த்திக்குரிய பல வித விரதங்களில் தலையாயது. இவ் விரதத்தை அநுஷ்டிப்போர் துன்பங்களினின்றும் நீங்கி இன்பத்தை எய்துவர்.

பிரதோஷ மகிமை:

சிவபெருமான் பிரதோஷ காலத்தில் இடப தேவரின் இரு கொம்புகளுக் கிடையே உயிர்கள் உய்யும் பொருட்டு திருநடம் புரிந்தார். அப்போது சரஸ்வதி வீணை வாசித்தாள். இந்திரன் புல்லாங்குழல் ஊதினார். பிரம்ம தேவர் தாளம் போட்டார். இலட்சுமி தேவி பாடினாள். திருமால் மிருதங்கம் வாசித்தார். தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள், யக்ஷர்கள், கின்னர்கள், திசை பாலர்கள் முதலிய அனைவரும் வந்து பிரதோஷ காலத்தில் இறை வனை வழிபடுகிறார்கள்.

பிரதோஷ பூஜை முடிந்தவுடன்

கிராண்ட் ஸ்வீட்ஸ்

வாங்கி நல்லோருக்கு விநியோகம் செய்யவும்

இனிப்பு வகைகள் : மங்களூர் போளி, தேங்காய் போளி, ரஸமலாய், ஸோன்பப்டி கேக், மாலாடு, ரவாலாடு, இனிப்பு ஸோமாஸ், முந்திரி கத்லி, கடலை உருண்டை, பொரி விளங்காய் உருண்டை, தேங்காய் கோவா, கோதுமை ஹல்வா.

கார வகைகள் : தட்டை, தேன்குழல், கைமுறுக்கு, சீடை, ஸ்பெஷல் மிக்ஸர், நவரத்ன மிக்ஸர், உருளைகிழங்கு சிப்ஸ், வாழைக்காய் சிப்ஸ், வறுபயறு, வெஜிடபிள் சமோசா, ரயில் கட்டிடம், சீப்புச் சீடை.

பொடி வகைகள் : கறிவேப்பிலைப் பொடி, பருப்புப் பொடி, இட்லிப் பொடி, சாம்பார் பொடி, ரசப் பொடி, ஊறுகாய் மிளகாய்ப் பொடி.

திருமண வைபவங்களுக்கு : சீர் முறுக்கு, சீர் அதிரசம், முள்ளு தேன் குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப் பால், அப்பம் முதலியவை, ஸ்பெஷலாகத் தயாரித்துத் தருகிறோம்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

No. 24, 2-வது மெயின் ரோடு காந்தி நகர்

அடையாறு சென்னை - 20.

போன் : 412557



சபதம்!



தவறான விளம்பரம்.



மகா அவசியம்!

ஜெயலலிதாவின் சபதம் நிறைவேறுமா?

* அ. ஜமால் மொய்தீன், செங்குன்றம்.*

? வியன்னாவில் முந்நூறு நோயாளிகளை நர்சுகளே கொலை செய்தனராமே?

! இது அதிபயங்கரமான செய்தி. மன்னிப்பே கிடையாது. ஆனால் கொலை செய்யப்பட்டவர்கள் நீண்ட காலமாக நோயுற்று, செயற்கை முறையில் உயிர் பிரியாமல் டாக்டர்களால் காக்கப்பட்டவர்கள் என்பது கவனிக்கத்தக்கது. நவீன மருத்துவ விஞ்ஞானம் இப்படிச் செத்தும் சாகாமல் நோயாளிகளை நீண்ட காலம் படுத்த படுக்கையாக வைத்திருக்கிறது. இது இந்தியாவிலும் இப்போது நர்ஸிங் ஹோம்களிலும் தனியார் மருத்துவமனைகளிலும் சகஜமாகி வருகிறது. இது கொலையை விடக் கொடுமையானது என்றே எனக்குத் தோன்றுகிறது.

* கி. ரமேஷ், திருச்சி — 2.

? சபைத் தலைவரிடம் போன் ஒட்டுக் கேட்கப்பட்டதா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, போன் ஒட்டுக் கேட்கப்பட்டால் சட்டப்படி குற்றமல்ல என்கிறாரே, அப்படியானால் போன் ஒட்டுக் கேட்கப்பட்டது உண்மைதானே?

! சட்டசபையில் எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்னை மீது அவர் வழங்கிய தீர்ப்பு அது. சட்டசபை அங்கத்தினர்களின் கடிதங்கள் ஸென்ஸாரில் பிரித்துப் பார்க்கப்பட்டாலோ, போன் ஒட்டுக் கேட்கப்பட்டாலோ உரிமை மீறல் ஆகாது என்று ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை எடுத்துக் காட்டியுள்ளார். இதிலிருந்து ஊகங்களைச் செய்து கொள்வது உங்கள் பாடு. ஒன்று கூற முடியும்: தமது வாழ்க்கையை

நீங்கள் கேட்டவை — தராசு

ஒளிவு மறைவு இன்றித் திறந்த புத்தகமாக வைத்துக் கொள்கின்ற ஒரு நேர்மையாளர், அரசின் ஒட்டுக் கேட்டல், கடிதம் பிரித்தல், ரெய்டு நடத்துதல், போன்றவற்றுக்கு அஞ்சத் தேவையே இல்லை!

* அ. முஹம்மது நிஜாமுத்தீன், நீடூர்.

? பணம் வாங்கியது உண்மைதான் என்று ஜப்பான் நாட்டுப் பிரதமர் ஒப்புக் கொண்டிருக்கிறாரே?

! 'ஆமாம், கட்சிக்காக வாங்கினேன், தேர்தலுக்காகச் செலவழித்தோம், அதில் சட்டப்படி குற்றமொன்றுமில்லை' என்று அவர் வெளிப்படையாகப் பேசியதைப் பாராட்டத்தான் வேண்டும். யாரையும் அவர் ஏமாற்றிப் பணத்தை விழுங்கி விட்டதாகவோ, ஸ்விஸ் அகவுண்ட்டில் போட்டு வைத்து விட்டதாகவோ குற்றச்சாட்டு இல்லை. நிற்க, இந்தியா போலவே ஜப்பானிலும் தேர்தல் முறைகளில் சீர்திருத்தங்கள் தேவை என்பதை இந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது.

* சி. செல்வம், சாத்தூர்.

? நடமாடும் பல்கலைக் கழகம் நாவலர் என்ன செய்கிறார்?

! நாங்களும் தேடிப் பார்த்தோம். மனிதர் கைக்குக் கிடைக்க மாட்டேன் என்கிறாரே!

* ஜெயா ஷண்முகம், தஞ்சை.

? தமிழ் வருடப் பிறப்பை முன்னிட்டு இலவசமாக ஐந்து கிலோ அரிசி குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குத் தரப்பட்டுள்ளது பற்றி?

! சென்ற வாரம் இதே போன்ற கேள்விக்குப் பதிலளித்திருக்கிறேன். அதன் பிறகு, அரசு கொடுப்பதைக் கட்சி கொடுப்பது

போல் — கருணாநிதியின் குடும்பம் கொடுப்பது போல் — விளம்பரம் செய்யப்படுவதைப் பார்க்கிறேன். இந்தப் போக்கு முற்றிலும் தவறானது என்று கண்டிக்கிறேன்.

* எம். செல்லையா, சாத்தூர்.

? 'இப்போதிருந்தே தி. மு. க. வின் ஆட்சிக்காலம் எண்ணப்படுகிறது... இது பாஞ்சாலி சபதம் அல்ல, ஜெயலலிதா சபதம்' என்று கூறியிருக்கிறாரே?

! அடுத்த தேர்தல் வரை நாட்களை எண்ணிக் கொண்டிருந்தால் சபதம் நிறைவேறிவிட வாய்ப்பிருக்கிறது. அதற்கு ஜெயலலிதாவின் புத்திசாலித்தனத்தைவிட, காங்கிரஸின் அசட்டுத்தனமும் தி. மு. க. வின் தவறுகளும் துணை செய்யும்.

* ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

? தக்கர் கமிஷன் அறிக்கையை மூடி மறைத்த சிதம்பரம், 'ஜெயலலிதா ராஜினாமாக் கடிதம் சட்டப்பேரவைத் தலைவருக்கு எப்படிப் போய்ச் சேர்ந்தது என்பதை மக்கள் அறிவது மகா அவசியம்' என்று தீர்ப்பு வழங்குகிறாரே?

! ஒருவர் ஒரு தவறு செய்தார் என்பதற்காக அவர் சொல்கிற எல்லாமே குற்றம் என்று முடிவு செய்யாதீர்கள்! தக்கர் கமிஷன் அறிக்கையை முழுமையாக வெளியிடுவது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவுக்கு ஜெயலலிதா கடிதம் தமிழ்க்குடிமகனிடம் போய்ச் சேர்ந்தது எப்படி என்பதை ஆராய்வதும் அவசியம்தான்.

* ஆர். முரளி, ஹோசூர்.

? தெரியாமல்தான் கேட்கிறேன், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தைப் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் என்று பெயர் மாற்றம் செய்வது ஒரு சாதனையா?

! மாவட்டங்களுக்குப் பெயர் மாற்றம் செய்வது தி. மு. க. கட்சியின் கொள்கை அல்ல என்று முதல்வர் தெளிவுபடுத்தியிருக்கிறார். அந்த அளவில் மகிழ்ச்சி. இப்போது நடந்திருக்கிற பெயர் மாற்றங்கள், ஏற்கெனவே அ. தி. மு. க. ஆட்சியில் செய்யப்பட்ட மாற்றங்களின் தொடர்ச்சியாகவும் வட்டார மக்களின் கருத்தை மதிக்கின்ற முறையிலும் நடந்திருக்கின்றன என்ற அவர் விளக்கம் — ஏற்கத்தக்கதே.



* முந்திக் கொண்டார்'



* என்ன செய்கிறார்?

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

அ. ஜமால் மொய்தீன்,
3—A. தர்கா தெரு,
செங்குன்றம், சென்னை — 52.

* ராமு, சென்னை — 90.

? பிரசாதத்தில் விஷம் வைத்துத் தன்னைக் கொல்ல முதல்வர் சதி செய்ததாகச் சொல்கிறாரே ஜெயலலிதா?

! முன்பு, ஜானகி மோரில் விஷம் வைத்து எம். ஜி. ஆரைக் கொன்று விட்டதாக 'ஜெ' சொல்லவில்லையா? 'அம்மு' எப்போதுமே இப்படித்தான். கற்பனை கொடி கட்டிப் பறக்கும்!

* சண்பை சிவ. ஷண்முகம், சீர்காழி.

? தலையங்கத்தில் கல்கி ஜெயலலிதாவுக்கு ஜால்ரா போடுவது போல் தோன்றுகிறதே?

! கல்கி எப்போதும் நடுநிலையில் இருந்துதான் அரசியல் விமர்சனம் செய்கிறது. ஆனால் அதன் வாசகர்கள் பலருக்குக் கட்சிக் கண்ணோட்டம் இருக்கிறது. அதனால் அவ்வப்போது ''இடிப்பது'' போல் அவர்களுக்குத் தோன்றுகிறது. எந்தக் கட்சியானாலும் தவறுகளைச் சுட்டிக் காட்டுவது, நல்லதைப் போற்றுவது என்ற கல்கியின் கொள்கையில் மாற்றமில்லை.

* பாக்யமுத்து, திருச்சி.

? 'சட்டசபைச் சம்பவங்களுக்கு முதல்வர் நடவடிக்கை எடுக்காவிட்டால் காங்கிரஸ் போராட்டம் விசுவரூபமெடுக்கும்' என்று வாழப்பாடி எச்சரித்திருக்கிறாரே!

! காங்கிரஸை முந்திக் கொண்டு விட்டதே சி. எஸ்.ஸின் பொது வாழ்வில் தூய்மை இயக்கம்! சட்டசபையுடனான இந்த மோதல் எப்படி முடியப் போகிறதோ என்ற பரபரப்புடன் கலந்த கவலை ஒருபுறமிருக்க, 'மார்ச் 25 அன்று எடுக்கப்பட்ட வீடியோ படத்தை ஓராண்டுக்கு ஒவ்வொரு நாளும் திருக்குறள் வகுப்புக்குப் பிறகு சட்டசபை அங்கத்தினர்கள் அனைவரும் பார்த்தே ஆக வேண்டும்' என்று சபாநாயகர் ஒரு கட்டளை பிறப்பித்து, அதற்கான ஏற்பாட்டையும் செய்யலாம்! எப்படி நடந்து கொள்ளக் கூடாது என்பதற்கு இது எம். எல். ஏ., மற்றும் மந்திரிகளுக்கு ஒரு பாடமாக அமையும்! இந்தத் தண்டனைக்குப் பயந்தே அவர்கள் சரியாக நடந்து கொள்வார்கள்!

இழப்பு

மிஷன் வீதியில், கணேசன் வீடு எதுங் கன்னு கேட்டா போதும். 'யாரு? ஸ்டேட் பர்ஸ்ட் வந்தானே அந்த கணேசனா? அதோ... 93—ம் நெம்பர், பச்சை நிற வீடு தாங்க'ன்னு அடையாளம் காட்டுவாங்க.

'அம்சா, இன்னைக்கு நேரு ஸ்ட்ரீட்ல போய்க்கிட்டிருந்தனா, அப்ப ரெண்டு பசங்க அவருதாண்டா ஸ்டேட் பர்ஸ்ட் வந்தானே கணேசன்; அவனோட அப்பான்னு என்னை அடையாளம் காட்டு றானுங்க' — அம்மாவிடம் மிகவும் பூரித்தார், அப்பா.

1986—ம் ஆண்டு எஸ்.எல்.சி.யில் 486 மார்க் வாங்கி தமிழ்நாடு — பாண்டிச்சேரி இணைந்த ஸ்டேட் பர்ஸ்ட்டாக வந்த நான் சாதாரணமாயிருந்தேன்! என்ன செய்து விட்டோம் பெரிதாக என்று யோசித்தேன். படித்தோம்; எழுதினோம், ரிசல்ட் வந்தது அவ்வளவுதான்.

பத்திரிகையிலும், வீட்டிலும் கணேசன், கணேசன் என்றனர். பேட்டி கண்டனர்.

''எதிர்கால நோக்கம்?''

''இன்ஜினியரிங் படிப்பது, எலெக்ட்ரானிக்ஸ்'' என்றேன். கல்வே காலேஜில் 'ப்ளஸ் ஒன்' முதல் க்ரூப்பில் இரு கரம் நீட்டி வரவேற்கப்பட்டு, சேர்ந்தேன்.

முதல் வருடம் பரீட்சை முடிவில், பள்ளியிலே முதல் மாணவன். அடுத்த வருட 'ப்ளஸ் டூ' இறுதித் தேர்வில் மாநில முதல் மாணவனாக வர இவரை வாழ்த்துகிறோம் என்று கட்டம் கட்டிப் போட்டது ஆண்டு விழா மலரில் கல்வே காலேஜ்.

அன்று

''உள்ளே வரலாமா, சார்?'' சங்கீத குரலைக் கேட்டு வகுப்பே திரும்பிப் பார்த்தது.

மஞ்சள் நிற சல்வார் கம்மீஸ்; மை தீட்டிய விழிகள்; தூக்கிச் சீவி, சடையை



மடித்து ஒரு மாதிரி பரவலாகக் கட்டியிருந்தாள். சின்ன சாந்துப் பொட்டு; மேலே திருநீற்றுக் கீற்று; ஒரு கையில் வளையல்; மறு கையில் கடிகாரத்துடன் புத்தகங்கள்; சிவந்த நிறத்துடன் மறைந்திருந்த அந்த இளமைத் துள்ளல், பழைமையும் புதுமையும் கலந்து அவள் நின்றிருந்தாள்.

''யெஸ்...'' என்றார் புரொபசர்.

''குட்மார்னிங் சார்!''

''குட்மார்னிங். புதுசா சேர்ற இல்லியாம்மா?''

''ஆமாம் சார்''

''பேரு...?''

''யமுனா.''

யமுனா, யமுனா... ஏனோ அலை அலையாய்ப் பரவியது என் மனத்தினுள். வகுப்பில் எல்லோர் மனமும் அப்படித்தானோ?

யமுனா வகுப்பில் எல்லோரிடமும் அறிமுகப்படுத்திக் கொண்டு பேசினாள். என்னிடமும் பேசினாள். என் திறமை அறிந்து பாராட்டினாள். எனக்குத்தான் பேச நா எழவில்லை.

மாலை. கல்லூரி முடிந்து மிஷன் தெருவில் நடக்கும் போது அந்த ஆர்வத்தில், படித்த 'குவாண்டம்' தியரியை, எனக்கே உரிய ஒரு வளைவுக்குள் கொண்டு வந்து, புரிந்து கொள்ள யத்தனப்பட்டு யோசித்து நடக்கையில் ''நீங்க எங்கே இந்தப் பக்கம்?'' என்று பக்கத்தில் ஓடி வந்த யமுனா கேட்டாள்.

''அப்படியா! நாங்களும் இதே தெருவில் தான் இருக்கோம்'' என்றாள்.

''நம்பர் என்னங்க?'' — நான்.

''95-உங்களுக்கு?''

''93ங்க.''

''வந்து பத்து நாட்களாகுது; உங்களைப் பார்க்கவேயில்லியே, நான்.''

''இல்லீங்க, எனக்கு ஒரு வளையம் உண்டு. அதிலேயே வளைய வருவேன்.''

''ஸ்டேட் பர்ஸ்ட்டுனா சும்மா வர முடியுமா?..காப்பி சாப்பிட்டாத் தேவலை.''

''வாங்க... இந்தக் கடையில சாப்பிடலாம்.''

''ஓ யெஸ். ஒரு கண்டிஷன். நாம்ப கிளாஸ்மேட்ஸ். வாங்க போங்கன்ன கூடாது! நான் யமுனா, தெரியுதா?''

''நான் கணேசு!''

முதன் முதலாக, இவ்வளவு அருகாமையில் கிடைச்ச ஓர் அன்னிய பெண்ணோட வாசத்தை, அவள் உடம்பு அமைப்பை மெள்ள மெள்ளப் பார்த்தேன்.

வழக்கமாக வீடு திரும்பியதும் உடைகளை மாற்றிக் கொண்டு முகம் கழுவுபவன், அன்று முகம் கழுவிய பின் ஞாபகம் வந்து உடை மாற்றிக் கொண்டேன். என் வளைய வாழ்க்கை இலேசாக நெளிவு கண்டது. கெமிஸ்ட்ரி ரெக்கார்ட் எழுதும் போது அடிக்கடி யமுனா வந்தாள். சிரிக்கும் போது குழி விழும் கன்னம்; மை உண்ட அந்தி கண்கள், ரோஜா நிறத்து உதடுகள் எல்லாம் எல்லாம் வந்தன.



''மெட்ராசுக்கு அடுத்துப் பாண்டிச்சேரி பீச் ரொம்ப அழகா இருக்கு, கணேசு.''

''நெசம்தான்.''

போர்ட் ஹவுஸ்க்கு எதிரே இருந்த கடற்பகுதியில் பேசியபடி நடந்து கொண்டிருந்த போதுதான் முதன் முதலாக அவளைத் தொட முனைந்தேன். ரொம்ப சாமர்த்தியமாகப் பேசினேன்.

''யமுனா, நகப்பாலீஷா இது! நேச்சுரல் கலரா இருக்கு?''

பளபளத்த அவள் விரல் பிஞ்சுகளைக் கொத்தாக அள்ளி என் கையில் பிடித்தேன். ஜிவ்வென்று ஆகாயத்தில் பறக்கும் உணர்வு என்னுள் கிளர்ந்தது.

''ஆமாம்'' என்றவள் எதுவுமே நடவாதவள் போல் தூரத்துப் பாய்மரப் படகைப் பார்த்தாள்.

அதன் பிறகு, 'பொட்டானிகல் கார்டன் போகணும்' என்று கேட்டிருந்தவளை அழைத்துக் கொண்டு செங்கேணித் தோட்டத்துள் நுழைந்தேன். காலேஜுக்குப் போக அவள் வீட்டைக் கடக்கும் போது, காத்திருந்து என்னுடன் சேர்ந்து கொண்ட யமுனா, கால்குலஸ் புரியாமல் என்னிடம் கேட்டு, பக்கத்தில் உட்கார்ந்த யமுனா; விரல்களை அழுந்த பிடித்த போது பாதிக்கப்படாத யமுனா — எல்லாம் சேர்ந்து அவளிடம் எனக்கு அதிக சுதந்திரம் இருப்பதாக என்னை நினைக்கச் செய்தது.

யமுனாவோ, ஒவ்வொரு பூவையும், மரத்தையும் விழி விரித்துப் பார்த்துக் கொண்டே நடந்தாள். கைகளைப் பின்னால் கோர்த்தவாறு நீல சல்வார் கம்மீஸில் ஒயிலாக இருந்தாள். பளபளத்த இதழ்

தேவ் ஆனந்த்

கொண்ட யமுனா. பக்கத்தில் நடக்கும் போது தெரியாமல் இடிபட்ட, ஒரு வசந்தமான வாசம் வீசிய யமுனா — எல்லாம் சேர்ந்து அந்தத் தனிமையான தோட்டத்தில் அவளை என்னுடையவளாக்கிக் கொள்ளத் தோன்றியது. சட்டென்று, அவளை அருகே இழுத்து, இறுக அணைத்து, "ஐ லவ் யூ... ஐ லவ் யூ யமுனா. ப்ளீஸ், மாட்டேன்னு சொல்லிடாதே" என்றேன். என் பிடியிலிருந்து திமிறி, விலகி, என்னை ஒரு பார்வை பார்த்தாள்.

வேர்த்துப் போய் அசடு வழிய நின்றேன்.

நட்பைக் காமமாக்க முயன்ற என்னிடம், எதுவும் பேசவில்லை அவள். பார்வையால் ஆயிரம் பேசி விட்டு விறுவிறுவென்று நடந்து வீட்டுக்குத் தனியே போய் விட்டாள்.

அந்தச் சம்பவத்துக்குப் பிறகு மனமுடைந்து போனேன். யமுனாவின் நினைவு முன்பு என் கவனத்தைச் சிதறடித்துக் கொண்டிருந்தது போக, இப்போது என் தவறை எண்ணி மனத்துக்குள்ளேயே அழுது மருகினேன். பித்துப் பிடித்தது போல் ஆயிற்று. ப்ளஸ் டூவில் ஃபெயில் ஆனேன்.

"ஏன் கணேசு, பெயிலாயிட்ட. என்னால நம்பவே முடியலை. எப்படி இது! மறுபடியும் உன் பேப்பரைத் திருத்தச் சொல்லி அப்பீல் பண்ணுவோமா?" என்றபடி யமுனா வந்தாள். அவளால் மட்டும் எப்படி எதுவுமே நடக்காதது போல் இருக்க முடிகிறது...?

"வேண்டாம் யமுனா. மோசமான கை இது! இதால நான் எழுதுன பேப்பருக்கு அவ்வளவுதான் மதிப்பு இருக்க முடியும்..."

"ச்சூ. நீ எதையோ நினைச்சுப் பேசுறே! அதையெல்லாம் மறந்துடு. உனக்கு என்னாச்சு?"

பதிலுக்கு என்னால் சிரிக்க மட்டுமே முடிந்தது.

யமுனாவை விட்டு நான் விலக விலக, மறக்காமல் மாலை நேரங்களில் என்னுடன் பேச வந்தாள். தான் சேர்ந்த தாகூர் கலைக் கல்லூரி அனுபவங்களை விவரித்தாள். சீக்கிரம் கம்ப்ளீட் பண்ணி நீயும் சேர்ந்துடு. எங்க காலேஜ்ல — என்றாள். யமுனாவைப் பார்க்க பார்க்க அவள் ஸ்படிக மனம் தெரியத் தெரிய, என் குற்ற உணர்வுதான் அதிகமாயிற்று.

அன்றும் யமுனா வந்தாள்.

"கணேசு, இன்னும் மூன்று நாள்ல பெங்களூருக்கு மாற்றலாகிப் போறோம்."

"என்ன! என்ன யமுனா சொல்ற? படிப்பு?"

"ப்ச்! வழக்கமா செய்யறதுதான். அங்கே போய் ஒரு வுமன்ஸ் காலேஜ்ல சேர்ந்துடுவேன்."

"யமுனா..." என்னவோ சொல்ல நினைத்து முடியாமல் விழுங்கினேன்.

"அடிக்கடி லெட்டர் போடு."

"நிச்சயமா! எனக்காக ஒண்ணு செய்வியா, கணேசு?"

"சொல்லும்மா, நிச்சயமா" ஆவலுடன் கேட்டேன்.

என்னை ஆழமாகப் பார்த்தாள். பிறகு, "மறந்துடு கணேசு. பழைய கணேசா, ஸ்டேட் பர்ஸ்ட் கணேசா குவாண்டம் தியரிய புரிஞ்சுக்கிட்டு, புரியாம 'உம்' கொட்ற எனக்கு விளக்கிக்கிட்டு... ப்ளீஸ்... கணேசு நான் சொல்றது புரியுதா: பழைய கணேசா மாறி ஒரு ஸ்டேட்டஸுக்கு வந்து எனக்கு லெட்டர்ல சொல்றியா?"

"சரி, யமுனா நிச்சயமாக" என்றேன்.

யமுனா போய் விட்டாள். மறுநாள் தனிமையில் உட்கார்ந்து யோசித்தேன். எது என்னைத் தூண்டியது; யமுனாவைத் தீண்டச் செய்தது. நட்பை நட்பாக மதிக்காமல் விகாரப்படுத்தச் செய்தது?

பார்த்த சினிமாக்களும் படித்த பத்திரிகைகளும் நினைவுக்கு வந்தன. அவற்றுள்

எருமை விழுங்கிய காசு மாலை!

சுமார் பதினெட்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள ஒரு தங்கக் காசு மாலையை ஓர் எருமைமாடு விழுங்கி விட்டது என்றால் நம்புவீர்களா...?

இந்தச் சம்பவம் ஹரியானா கிராமம் ஒன்றில் நடந்தது. 1977 — ஆம் வருடம் டிசம்பர் மாதம் ஓர் எருமை மாட்டைப் புதிதாக வாங்கி வந்தார், ஒரு விவசாயி. அவர் மனைவி, ஊர் வழக்கப்படி ஒரு தாம்பாளத்தில் மாவுடன் வெல்லக்கட்டியைக் கலந்து, அதன் மீது தன் காசு மாலையை வைத்து எருமையின்



காலடியில் சமர்ப்பணம் செய்தாள். (இவ்வாறு செய்தால் சுபிட்சம் பெருகும் என்பது ஹரியானா கிராமங்களில் நிலவும் நம்பிக்கை.) வீட்டிற்குள் சென்று எருமைக்குத் தண்ணீர் எடுத்து வருவதற்குள், மாவு, வெல்லத்துடன் காசு மாலையையும் விழுங்கி விட்டது அந்த எருமை.

விவசாயத் தம்பதிகள் செய்வதறியாது விழித்தனர். ஆசையாக வாங்கிய எருமையைக் கொல்லவோ, ஆபரேஷன் செய்யவோ மனம் இன்றி எக்ஸ்ரே மட்டும் எடுத்துப் பார்த்தனர். ஆனால் எக்ஸ்ரேயில் காசு மாலை தென்படவில்லை!

பதினோரு வருடங்களுக்கு அவர்கள் வீட்டில் அருமையாக வளர்ந்தது எருமை. கடந்த மார்ச் மாதம் அது இறந்து போனது. ஆபரேஷன் செய்து அதன் வயிற்றில் பத்திரமாக இருந்த காசு மாலையை எடுத்தார்கள். நகையின் மதிப்பு இப்போது 27,000 ரூபாயாம்!

— ஹிந்துஸ்தான் டைம்ஸ்.




தமிழ்வாணன்


குறைந்த பட்ஜெட் வீடுகளுக்கான சிறந்த பிளான்கள்


விலை ரூ. 20.00



லேனாதமிழ்வாணன்







மணிமேகலைப் பிரசுரத்தில் அண்மையில் வெளியாகி அதிவேகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கும் அருமையான புத்தகம் இது. 250 சதுர அடிப்பரப்பளவிலிருந்து 770 சதுர அடிப் பரப்பளவுடைய 30 வகையான பிளான்கள் மிக வித்தியாசமாக வரைந்து காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிளான்படி வீடுகட்ட கருங்கல் ஜல்லி, செங்கல், மணல், சிமெண்ட், இரும்புக் கம்பிகள், சுண்ணாம்பு, தட்டை ஓடுகள் ஆகியவை எவ்வளவு தேவைப்படும் என்ற விவரமும் இந்நூலில் இடம்பெற்றிருப்பது சிறப்பு. சொந்த வீடு என்பது ஒவ்வொருவருடைய வாழ்க்கை இலட்சியம். இந்த இலக்கை அடைய இந்நூலின் உதவியுடன் நீங்களே வீட்டைக் கட்டலாம். ஏமாற்றப்படுவதையும் தடுக்கலாம். இதர நூல்கள்: சாஸ்திரப்படி வீடு கட்டுவது எப்படி? (மனையடி சாஸ்திரம்) ரூ. 10.00; தமிழ்நாட்டில் வீடுகட்டுபவர்களுக்கான புதிய விதிகள் ரூ. 9.00; நிலம், வீடு வாங்குபவர்கள் — விற்பவர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டிய சட்டங்கள் ரூ. 6.50; வீடுகளுக்கு ஜன்னல் கிரில் வாயிற்கதவு மாதிரிகள் பாகம் — 1 ரூ. 10.00; பாகம் — 2 ரூ. 10.00.

80 வருடங்களுக்கான பஞ்சாங்கப் புத்தகங்கள்!

1926 ஆம் ஆண்டிலிருந்து 1985 ஆம் ஆண்டு வரை 60 வருடங்களுக்குரிய பஞ்சாங்கம் தூய திருக்கணித முறை அடிப்படையிலும், 1986 ஆம் ஆண்டிலிருந்து 2005 வரை பொதுக் கணித முறை அடிப்படையிலும் இப்புத்தகங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகங்களின் விலை விவரங்கள்: 1926 முதல் 1945 வரை ரூ. 45.00; 1946 முதல் 1965 வரை ரூ. 45.00; 1966 முதல் 1985 வரை ரூ. 45.00; 1986 முதல் 2005 வரை ரூ. 50.00. இதர நூல்கள்: 1989 ஆம் ஆண்டு ராசி பலன் (12 ராசிகளுக்கும் ஒரே புத்தகம். ரூ. 5.00

பிரபலமானவர்களின் விலாசங்கள் (புதிய பதிப்பு - 1989) ரூ. 29.00

தமிழகத்தின் புதிய எம். எல். ஏக்களின் முழு விலாசங்கள், தமிழக அமைச்சர்களின் விலாசங்கள் உட்பட 3700 முக்கியப் பிரமுகர்களின் விலாசங்களைக் கொண்ட புதிய 10 ஆம் பதிப்பு வெளியாகியிருக்கிறது. புதிய சினிமா நடிகர்கள், நடிகைகள், இயக்குநர்களின் விலாசங்கள் தொலைபேசி எண்களுடன் இப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. இவை தவிர, அரசியல்வாதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், டாக்டர்கள், விளையாட்டு வீரர்கள், கவிஞர்கள், தமிழறிஞர்களின் முகவரிகளும் இதில் உள்ளன. இதர நூல்கள்: முக்கிய இந்தியர்களின் முகவரிகள் (1000 அட்ரஸுகள் ஆங்கிலத்தில்) ரூ. 12.00; பேனா நண்பர்கள் சங்கம் — நோக்கங்களும் முகவரிகளும் ரூ. 24.00;

மேற்கண்ட புத்தகங்களுள் தேவையானவற்றை வி. பி. பி. யில் பெறக் கடிதம் எழுதுங்கள். அனுப்பி வைக்கிறோம். தபால்காரர் புத்தகங்களை உங்களிடம் தரும்போது பணம் செலுத்தினால் போதும். (தபால் செலவு தனி.) சென்னையில் இருப்பவர்கள் நேரில் வந்து வாங்கிக் கொள்வது சிக்கனம். ஷோரூம் விற்பனை நேரம்: காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை. ஞாயிறு விடுமுறை.

மணிமேகலைப் பிரசுரம்,

தபால் பெட்டி எண்: 1447

4, தணிகாசலம் சாலை, தியாகராய நகர்,

சென்னை-600 017., போன்: 442926.

பலவற்றை அப்பாவே எனக்குச் சிபாரிசு செய்துள்ளார். அவரும் அவற்றைப் பொழுது போக்குச் சாதனங்களாகப் பயன்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார். புரிந்தும் புரியாத வயதில் என் உணர்வுகளுக்குத் தூபம் போட்டவை இவைதானோ?

ஒண்ணு செஞ்சிருக்கலாம்பா, நீங்க. எனக்கு மீசை பூத்தவுடனே கூப்பிட்டு வச்சுப் பளிச்சுன்னு அருவியாச் சொல்லியிருக்கலாம். செக்ஸ் என்பது வளைவும், மேடும் கொண்ட பெண்ணோட உடம்பு மட்டும் இல்லேடா. வாழ்க்கையில் ஒரு பகுதி. மனசைப்பாரு; வாழ்க்கையில முன்னேறப்பாரு. உடம்புக் கனவுகளை விலக்கு. உன் கால்ல நின்னு மனுஷன் ஆகப் பாரு. உனக்குன்னு ஒருத்தி வருவாள். வயசு இருக்குடா, காலம் இருக்குடா, அப்படின்னு பிட்டு பிட்டுச் சொல்லியிருக்கலாம்பா. எல்லா அப்பாவும் இதைச் செய்யணும்பா. ஒரு தாய் பெண்ணுக்குச் சொல்லித் தர்ற மாதிரி; ஒரு மகனுக்குத் தகப்பன் சொல்லித் தரணும்பா. இல்லேன்னா வீணாய்ப் போயிடுவோம். ஒவ்வொருவரும் இதைத் தெரிஞ்சிக்க எதை எதையோ இழந்து விடுவோம் — மனத்துக்குள்தான் நினைத்துக் கொள்ள முடிந்தது.

கடைசி நிமிடம் வரை அப்பாக்கிட்டே கேட்டுப் பார்த்தேன். நான் திரும்பவும் பரீட்சை எழுத அவர் சம்மதிக்கவேயில்லை.

"எங்க கணேசன் நல்லாப் படிக்கிறான்னு நாங்க பட்ட பெருமைக்கு நீ செஞ்சது போதும்! தங்கை பெரியவளாகி நின்னுக்கிட்டு இருக்கா, படிக்கறதோட வேலைக்குப் போறது நல்லது" — கண்டிப்புடன் சொல்லி விட்டார். நானும் சம்மதித்து விட்டேன்.

ஆரோ வேண்ட் பிஸ்கட் கம்பெனியில், சிபாரிசினால் அக்கவுண்ட் கிளார்க்காக வேலைக்குச் சேர்ந்தேன். ஐந்நூறு ரூபாய் சம்பளம். முதல் நாள் நுழைந்தவுடன் எனக்கு வேலையை விளக்குவதற்காக அவள் வந்தாள். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

"ஐயாம் சங்கரி."

"ஐயாம் கணேசன்."

"என் கூட வாங்க. இது உங்க டேபிள். நிறைய கொட்டேஷன்ஸ் வரும். அனலைஸ் பண்ணுங்க..."


— நிறைய சொன்னாள்.

பார்டன் மீ என்றும் அண்டர்ஸ்டுட் என்றும் தலையாட்டிக் கொண்டிருந்தேன்.

மதியம் வந்து நான் செய்திருந்த வேலைகளை மேலோட்டமாக ஒரு பார்வை பார்த்தாள்.

"யூ ஆர் வெரி ஸ்மார்ட்!" என்றாள்.

"ரொம்ப நன்றி, சகோதரி!" என்றேன்.



நடந்து கொண்டே சிரிக்கின்றேன்!

அமைச்சர் கொடுத்த கணக்கு!


சென்ற வாரம் ஒரு நாள் பத்திரிகையைப் புரட்டிவிட்டு வாக் கிளம்பினேன். தமிழக அரசு பற்றிய செய்திகள் டீ. வி. யில் தேவையான அளவு காட்டப்படுவதில்லை என்று முதலமைச்சர் கருணாநிதி குறைகூறி மத்திய அரசுக்கு எழுதிய கடிதத்திற்கு, மத்திய அமைச்சர் பகத் தந்திருந்த அரிய விளக்கம் என்னைக் கணக்கு உலகிற்கு அழைத்துச் சென்றுவிட்டது. 'சராசரி' கணக்கில் இறங்கி விட்டேன். மனக்கணக்கல்ல. மனம் போனபோக்கில் போட்ட கணக்கு!

ஜனவரி 1 — ஆம் தேதியிலிருந்து மார்ச் மாதம் 31 — ஆம் தேதி வரை நம் முதலமைச்சர் மொத்தம் பத்து தரம் டீ. வி. யில் தோன்றியிருக்கிறாராம். (90 நாட்களில் 10 தரம் என்றால், ஒரு நாளைக்கு 1/9 முறை டீ. வி. யில் தலைகாட்டியிருக்கிறார். ஒவ்வொரு முறையும் அவர் தோன்றிய நேரத்தைக் கூட்டினால் மொத்தம் 13 நிமிடங்கள் 30 நொடிகள் ஆகின்றனவாம். அதாவது, 90 நாட்களுக்கு 13 × 60 = 780 + 30 = 810 நொடிகள். அதாவது சராசரி ஒரு நாளைக்கு 810/90 அதாவது 9 நொடிகள் தோன்றியிருக்கிறார். சிரிக்காதீர்கள்! அடுத்து சீரியஸாக மந்திரி சொல்வதைக் கேளுங்கள். இந்த 90 நாட்களில் மத்தியப் பிரதேச முதலமைச்சர் 8 நிமிடம் 5 நொடிகளும், ராஜஸ்தான் முதலமைச்சர் 3 நிமிடங்களும், மகாராஷ்டிர முதலமைச்சர் 2 நிமிடம் 40 நொடிகளும் இமாசலப் பிரதேச முதலமைச்சர் ஒரு நிமிடமும் திரிபுரா முதலமைச்சர் 50 நொடிகளும் மட்டுமே தொலைக்காட்சியில் தோன்றியிருக்கிறார்கள். (பாவம், மற்ற மாநில முதலமைச்சர்களுக்கு இந்த அதிர்ஷ்டம் கூட இல்லை!)

'டீ. வி. யில் தமிழகம் இருட்டடிப்பு செய்யப்படுகிறது' என்று கூறுபவர்களெல்லாம் இனி வாயைத் திறக்க முடியாமல் அடித்து விட்டார் எச். கே. எல். பகத். நம்பாவிட்டால் கணக்குப் போட்டுப் பாருங்கள். மூன்று மாதங்களில் தமிழக முதலமைச்சர், ம. பி. முதல்வரை விட 325 நொடிகளும், ராஜஸ்தான் முதல்வரை விட 630 நொடிகளும், மகாராஷ்டிர முதல்வரை விட 650 நொடிகளும், இமாசலப் பிரதேச முதலமைச்சரைவிட 750 நொடிகளும், திரிபுரா முதல்வரைவிட 760 நொடிகளும் அதிகமாகத் தொலைக்காட்சியில் தோன்றியிருக்கிறார்!

இதே கணக்கை வேறு ஒரு மாதிரியும் போட்டு மகிழ்ச்சியடைகிறவர்கள் அடையலாம். உதாரணத்திற்கு திரிபுரா முதலமைச்சர் ஒரு நாளைக்கு 5/9 நொடிகள் தோன்றியிருக்கிறார். அதாவது, நம் அதிர்ஷ்டக்கார முதலமைச்சர், திரிபுரா முதல்வரைவிட 9—5/9 நொடிகள் அதிகமாகத் தோன்றியிருக்கிறார். அதாவது... தலையைச் சுற்றுகிறதா? அவசரப்படாதீர்கள். மிச்சத்தையும் கேட்டுவிட்டு ஒருவழியாக மயக்கம் போட்டு விழுங்கள்.

ஜனவரி 27 — ஆம் தேதி முதல் ஏப்ரல் 14—ஆம் தேதி வரை தி. மு. க. வுக்காக மாநில ஒளிபரப்பில் 373 வரிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. (மொத்தம் எத்தனை எழுத்துக்கள் என்று அமைச்சர் கூறவில்லை. அதாவது இவருக்கு எழுதிக் கொடுத்தவர் அதைக் குறிக்க மறந்து விட்டார்.) இந்த 373 வரிகளைப் படிக்க எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த நேரம் 4 நிமிடம் 35 நொடிகள். (ஒரு வரிக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சராசரி நேரத்தை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள். இது உங்களுக்கு வீட்டுக் கணக்கு!) இதே காலகட்டத்தில் எதிர்க்கட்சியான அ. இ. அ. தி. மு. க. வுக்கு 116





அடுத்த இதழில்...

பாஷன்! பாஷன்! பாஷன்!

—கவர் ஸ்டோரி

வரிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கணக்கை விட்டுவிட்டுக் கற்பனைக்குத் தாவுவோம்:

அ. இ. அ. தி. மு. க. சட்டமன்றத் தலைவர் (தலைவி) ஜெயலலிதா, சட்டமன்றத்துக்கு வெளியே நின்று பேசிக் கொண்டிருக்கிறார்...

"தமிழகத்தைப் பொறுத்தவரை மத்திய அரசு பாரபட்சமாக நடந்து கொள்ளவில்லை என்று நிரூபிக்க முயன்ற மத்திய அமைச்சர் பகத், எங்களிடம் பாரபட்சமாக நடந்து கொண்டிருக்கிறார். எதிர்க்கட்சியை விட ஆளும் கட்சி 257 வரிகள் (Tax அல்ல lines) அதிகம் பெறவும், அதனால் அதிகநேரம் பெறவும் மத்திய அரசு உடந்தையாக இருந்திருக்கிறது. அதாவது, எங்களை ஆதரிப்பதாகக் கூறும் காங்கிரஸ் கட்சி, கருணாநிதிக்கு ஆதரவு காட்டி வருகிறது. பிரதம மந்திரிக்குத் தெரியாமல் மத்தியில் யாரோ செய்யும் சூழ்ச்சி இது. நான் இதுகுறித்துச் சீக்கிரத்திலேயே ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசுவதாக இருக்கிறேன். அதற்காக 45 நிமிடம் 87 நொடிகள் ஒதுக்க வேண்டும் என்று பிரதமரைக் கேட்டுக் கொள்ளப் போகிறேன். இது, முன்பு பிரதமர் கருணாநிதிக்கு ஒதுக்கிய நேரத்தை விட 44 நொடிகள் அதிகம் என்பதைக் கழகக் கண்மணிகள் உணர வேண்டும்...

கடைசியாக வந்த செய்தி: கடந்த செவ்வாய்க் கிழமை மாலை டீ. வி. யில் (18.4.89) ஐந்து நிமிடங்களுக்கு அதிகமாக நம் முதலமைச்சரின் 100—க்கும் அதிகமான வரிகள் இடம் பெற்றன. உண்மைதான். அன்று நான்கு மணியளவில், இந்திய சினிமா பவள விழாவை முன்னிட்டு காட்டப்பட்ட 'பராசக்தி' படம், கோர்ட் சீனில் சிவாஜி கணேசன் கலைஞரின் புகழ்பெற்ற வரிகளைப் பேசியதைத்தான் குறிப்பிடுகிறேன்.

— மெரீனா


வானர இசை!

மாலை மயங்கும் நேரம். பள்ளிக் கூடத்தில் இசைக் கருவிகளை வைத்திருந்த அறையிலிருந்து திடீரென இன்னிசை முழங்கியதைக் கேட்டு ஆச்சரியமடைந்த வாட்ச்மேன், அந்த அறையைத் திறந்து பார்த்த போது — உள்ளே, சுமார் 200 குரங்குகள் இருந்தன! அதில் ஒரு குழு ஆளுக்கு ஒரு இசைக் கருவியைக் கையில் பிடித்து மனம் போன போக்கில் இசைத்துத் தூள் கிளப்பிக் கொண்டிருக்க, மற்றொரு குழுவோ 'விசில்' அடித்து, ரசித்துக் கொண்டிருந்தது!

தேஜ்பூரில் கேந்திரியா வித்யாலயா பள்ளியில் நடைபெற்ற சம்பவம் இது!

ஹிந்துஸ்தான் டைம்ஸ்.
தகவல்: ஆர். அரிகோபி.





●● சிறுவர் சிறுமியரை மகிழ்ச்சியில் ஆழ்த்த பொழுது போக்கு வசதிகளுடன் பஸ் தயாராகிறது. இதில் நூலகம், தொலைக் காட்சிப் பெட்டி, வீடியோ கருவி, உபயோகமான தகவல்கள் படமாகியுள்ள வீடியோ டேப்புகள், இன்டோர்கேம்ஸ், விளையாடும் இடம், அரட்டை அடிப்பதற்கான இட வசதி இவை உள்ளன.

இத்தகைய பஸ் இந்தியாவில் தயாராவது இதுவே முதல் தடவை. 'நேரு பால் சமிதி' என்ற குழந்தைகள் நல் வாழ்வுச் சங்கம் இதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளது: புதுதில்லியில் ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ஒவ்வொரு நாள் சென்று குழந்தைகளை மகிழ்விக்கும்.

— இ. குமார்.

பாண்டிபஜார் வாலாஜா ரோடு

இரண்டு இடங்களில் பகவான்!, திரண்டெழும் துணிமணிகள் பகவானில்!! ரம்ஜான் பண்டிகைக் கேற்ற புத்தம்புது புதுமை துணிமணிகள்!!! ரேமாண்ட்ஸ், டிக்ஜாம், குவாலியர், விமல், சூட்டிங் துணிகள், ஆர்கே, தீபல் சர்ட்டிங் துணிகள், சபாரி சிறப்புகள்

10% தள்ளுபடி

ஸ்ரீ பகவான்

கட் பீஸ் ஜங்ஷன்

நாகேஷ் தியேட்டர் அருகில், தி. நகர்,
அண்ணா சிலை அருகில், வாலாஜா சாலை,
ஞாயிறும் கடை உண்டு

national

வட்டமேஜை

என் உயிர்த் தோழன் — அமர்க்களமான ஆரம்பம்!

* 'தேர்தலில் என்னை நம்பிச் செயல்பட விட்டிருந்தால், எதிர்க்கட்சி வரிசையிலாவது அமரச் செய்திருப்பேன்' என்று கூறும் ஆர்.எம்.வி. தம் தொகுதியிலாவது அதை நிறைவேற்றிக் காட்டியிருக்கலாமே.....!

மேலப்பாதி, எஸ். நாகராஜன்.

* இனியும் சில விஷயங்களை மறைத்துப் பயனில்லை எனத் தற்போது கூறும் ஆர்.எம்.வி., அப்போது அவற்றைக் கூறி, மக்கள் செல்வாக்கைத் திரட்ட வேண்டியதுதானே.... நொண்டிக் குதிரைக்குச் சறுக்கியதே சாக்கு.... என்பது போல் இருக்கிறது இவரது பேச்சு....

மேலப்பட்டி. ரூசா. எல். மாறன்.

* 'திரையும் இசையும்' — தொடர் கலவையாக இருக்குமோ, இருக்காதோ எங்களுக்குத் தெரியாது!... ஆனால் அதைப் பற்றிய 'முன்னோட்டம்', 'தொடரை எப்போது காட்டப் போகிறார்கள்?' என்ற ஆவலை எழச் செய்யும் வண்ணம் படு சுவாரஸ்யமாயிருந்தது!

குத்தாலம்,—1 வி. சுந்தரராமன்.

* 16-4-89 இதழ் தலையங்கம் சூப்பர்ப்! தி.மு.க. ஆட்சி தவறு செய்யும் போது திருத்தியும், நன்மை செய்யும் போது பாராட்டியும் திறமிக்க ஆட்சி அமைய வழி வகுக்கும் கல்கியின் பாங்கு என்னை மிகவும் கவர்ந்துள்ளது.

மங்கநல்லூர் பஜார் அஞ்சல், எஸ். பாலமுருகன்.

* தமிழகத்தில் 'லோட் ஷெட்டிங்' அமுலில் உள்ள இந்த நேரத்தில் தமிழக மின் துறை அமைச்சர் நேருவுடன் 'கல்கி' நடத்திய பேட்டியின் மூலம், அரிய பல விஷயங்களை அறிந்து கொள்ள முடிந்தது.

தர்மபுரி,—2 வித்யா.

* பாரதிராஜாவின் முன்னுரையுடன் 'என் உயிர்த் தோழன்' — முதல் அத்தியாயம் அமர்க்களமான ஆரம்பம். 'குயில் குப்பம்' — பெயரிலேயே தமிழ் மணம் கமழுகிறது. எளிய வர்ணனைகள் கண்களின் முன் காட்சியை விரியச் செய்கின்றன. பாத்திரங்கள் பேசும் வார்த்தைகள்... அவர்களுடன் ஒன்றச் செய்யும் அழகு.... அபாரம்!

மதுரை,—9 பிரபாகர் பிரியன்.

* 2.4.89 இதழின் கருத்துக்களை வட்ட மேஜையில் வெளியிட்டு, 9.4.89 இதழின் படத்தைப் போட்டு விட்டீர்களே! தூக்கமா?

திட்டக்குடி. அ. சரவணராசன்.

* இயற்கை எழில் கொஞ்சும் ஆளை மயக்கும் அந்தமான் தீவுகள்.... இலக்கிய எழில் பாடும் பாரதிராஜாவின் 'என் உயிர்த் தோழன்'...

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உன்னதமான சிறு கதை படைப்புகள்.

பார்த்துக் கொண்டே இருக்கும் வகையில் பாரதிராஜாவின் (அட்டைப்பட) புதிய நாயகி..... அப்பப்பா... ரியலி வெரி சூப்பர்!

நரிப்பாளையம், அ. கிருஷ்ணமூர்த்தி.

* இவ்வாரக் கல்கியில் அந்தமான் தீவு பற்றிய கட்டுரையும், இரண்டு அரசியல் கட்சி உறுப்பினர்கள் பேட்டியும், கதைகளும், பாரதிராஜாவின் புதுத்தொடர் கதையும், தலையங்கமும் அருமையாக இருந்தன. எதைப் படிப்பது, எதை விடுவது, எதைப் பாராட்டி எழுதுவது என்று புரியாமல் தவிக்கச் செய்து விட்டீர்கள்!

தக்கோலம், அ. முஸ்தஃபா.

* எம்.ஜி.ஆரின் நிழலாகவே இருந்து, அவரது திரை வாழ்வில், அரசியல் வளர்ச்சியில், மிக முக்கிய பங்கு வகித்தவர் என்ற அளவில், அ.தி.மு.க. வின் இதர தலைவர்களைப் பற்றிய ஆர்.எம்.வி. யின் மதிப்பீடும், 'தலைவராக விளங்க ஒரு குணாதிசயத்தைக் கூட, ஜெயலலிதா பெற்றவரில்லை!' — என்ற அழுத்தம் திருத்தமான கணிப்பும், மிகச்சரியானவை என்பதை, இன்றைய அரசியல் சம்பவங்கள் நிரூபிக்கின்றன..! தமது அரசியல் வெற்றிகளைக் காட்டிலும், மக்களும் தேசமும், தோற்றுப் போய்விடக் கூடாது என்ற ஆதங்கம், ஆர்.எம்.வீரப்பனின் பதில்களில் பிரதிபலித்தன!

வேலாயுதம்பாளையம், எம். சம்பத்.


* தலையங்கம் கண்டேன். பிரதான எதிர்க்கட்சி பரிதாப எதிர்க்கட்சியானதற்குக் காரணம் யார்? எதேச்சாதிகாரத்துடன் செயல்படும் முதல்வர் தானே! எதிர்க்கட்சி கோரி வருவது என்ன? மார்ச் 25 அன்று சட்டசபையில் நடந்த தாக்குதலின் பொழுது எடுக்கப்பட்ட படங்களை வெளியிட வேண்டும் என்பதுதானே. இதில் என்ன தவறு இருக்க முடியும்? தக்கர் கமிஷன் அறிக்கை முழுவதும் வெளியிட வேண்டும் என்று கூறி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் செய்யும் சபை பகிஷ்கரிப்பில் நியாயம் காணும் நாம், அதுபோன்றதொரு காரணத்திற்காக இங்கு எதிர்க்கட்சி போராடினால் அதில் குற்றம் காண்பது முறையா?

சென்னை,—59 ராமாபுரம் சந்துரு.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/.
அரை மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.



ஞாயிறு. கண்ணை மூடு இன்னுங்
கொஞ்சம். சோம்பல். வெறும் வேட்டி.
செய்தித்தாள். படுக்கையிலேயே
பலகாரம். எழுப்பாது கடிகாரம்.
இல்லை ஷேவிங். இல்லை எதும்
நீயும். அவனும். வெம்மை குளிர....




Artificially flavoured. Contains no fruit juice or fruit pulp.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

கோ-ஆப்டெக்ஸ்

இல்லங்களுக்கு · எழிலூட்டும் · துணிவகைகள்



துவாலைகள்



படுக்கை விரிப்புகள்



மேசை விரிப்புத் துணிகள்



திரைச்சீலைத் துணிகள்

ஒவ்வொரு பெண்ணும் இல்லத்தரசி யாகிறாள்... உங்களது இல்லங்களில் அழகு மிளிர்ந்திட கோ-ஆப்டெக்ஸ் அளித்திடும் சிறந்த துணி வகைகள்— எண்ணற்ற வண்ணங்களில்.

- ☐ இதமான துவாலைகள்
- ☐ பரந்த படுக்கை விரிப்புகள்
- ☐ மனம் கவரும் மேசை விரிப்புத் துணிகள்
- ☐ புதுமை பொலிந்திடும் திரைச் சீலைத்துணி வகைகள்

உங்கள் இனிய கனவுகள் நனவாகும் போது அதிலே கோ-ஆப்டெக்ஸின் பங்கும் உண்டு!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனைக் கைத்தறி வகைகள்

எங்களது பிரத்தியேக ஆடையலங்கார அங்காடி கோலம், 843, அண்ணா சாலை, சென்னை — 2-க்கு விஜயம் செய்யுங்கள்.